# சங்கத்தமிழ்

குரல் – 03 | இருவாராந்திர சர்வதேச மின் செய்தித்தாள் | யூன் 15 2021




## உலகத்தமிழர்களிடம் வடக்கு, கிழக்கு வைத்தியசாலைகள் உதவி கோரல்

தாயகத்தில் கோவிட் தொற்று தீவிரமாக உள்ளமை அனைவரும் அறிந்ததே. வடக்கு, கிழக்கின் வைத்தியசாலைகள் எம்மிடம் உதவி கோரியுள்ள நிலையில் அவசர நிதி சேகரிப்பென்றை ஆரம்பித்துள்ளோம். கனடா வாழ் தமிழ் மக்கள், தமிழ் அமைப்புக்கள் அனைவரும் உங்களால் முடிந்த தொகையை நேரிலும், **gofund** மூலமும் தந்துதவுமாறு பணிவுடன் கேட்டுக்கொள்கிறோம். கனடா வாழ் யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட வைத்தியர்கள் அமைப்பு (JMFDOA)

**TP: 416.291.4860**

**Website: JMFOA.ca/covid**

## JMFOA (யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட வைத்தியர்கள் அமைப்பு)

இலங்கை வடகிழக்கில் அதிகரித்துச் செல்லும் கோவிட் நிலைமைகளுக்கு உலகளவில் பரந்திருக்கும் தமிழ் வைத்தியர்களும் பிற மருந்துவ உதவி நிறுவனங்களும் ஒன்றிணைந்து செயற்திட்டங்களில் இணைந்துள்ளன.

வடக்கு கிழக்கில் ஆதார வைத்தியசாலை, மாவட்ட வைத்திய சாலை, போதனா வைத்தியசாலை, மாவட்ட சுகாதார பிரிவின் தலைமை வைத்திய அதிகாரிகளுடன் நேரடியாகத் தொடர்பு கொண்டு இந்த உதவிகள் ஒருங்கிணைக்கப்பட்டிருக்கின்றன.

தற்காலிக மையத் தொடர்பாடல் ஊடாக மேற்படி அதிகரிகளுடன் கனடா, இங்கிலாந்து, அவுஸ்ரேலியா, அமெரிக்கா, நியூசிலாந்து நாட்டின் JMFOA (யாழ் பல்கலைக்கழக மருத்துவ பீட வைத்தியர்கள் அமைப்பு) MIOT, IMHO, MANITHA NEYAM, ORU PAANAI, AUSTRALIA MEDICAL AID FOUNDATION, FRIENDS OF BATTICALOA, KILLI PEOPLE CHARITY UK எனப் பல அமைப்புகள் ஒன்றிணைந்து செயற்படுவது மக்களால் பாராட்டப்படுகிறது.



JMFOA - CANADA இந்த நிறுவனங்களின் ஒருங்கிணைந்த ஒருமித்த செயற்பாடுகளிற்கு தொடர்ந்து உதவம் கடமையை ஏற்றுள்ளது. (JMFOA - CANADA continuously helping to create and maintain this coordination).

அதே வேளை JMFOA - CANADA அமைப்பானது இலங்கை UNICEF நிறுவனங்களுடனும், WORLD VISION நிறுவனங்களுடனும் வெளிப்படையான தகவல் பரிமாற்றத்தை வைத்திருப்பதுடன் ஆரோக்கியமானதாகப் பார்க்கப்படுகின்றது.

இதே வேளை கனடா அரசாங்கம் ஒரு மில்லியன் அமொரிக்க டொலர்களை இலங்கை ஊடாக அவசர சுவாசம் சம்பந்தமான தேவைகளுக்கும் கருவிகள் கொள்வனவுக்கும் அன்பளிப்புச் செய்திருப்பது குறிப்பிடத்தக்கது.

மேலும் 19.2 மில்லியன் இலங்கை ரூபாவை கனடா அரசு இலங்கை சுகாதார அமைச்சின் குடும்ப சுகாதார பணியகத்ததுக்கு தாய், புதிய பிறந்த குழந்தைகளின் அத்தியாவசிய மருந்துவ உபகரணங்களின் கொள்வனவுக்கு வழங்கியுள்ளது.

**தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்**

MORTGAGE ALLIANCE
Access Inc.
Independently Owned & Operated | FSCO: 11404
For All Your Mortgage Needs
• Purchase • Refinance
• First | Second Mortgage • Equity Line of Credit
Siva Sethunathan, B.A.
Mortgage Agent
416 725 1732
8130 Sheppard Ave E Suite 209
Toronot, ON M1B 3W3

NISHANTHAN LAW OFFICE
SERVICES
• Real Estate Law
• Immigration Law
• Wills & Estate
• Business Law
• Power of Attorney for Personal care and Property
NOTARY SERVICES
•Statutory Declarations & Affidavits
•Commissioning & Notarization
Umananthini Nishanthan
Barrister, Solicitor & Notary Public
416-289-9229
nishanthanlaw@bellnet.ca
www.unlaw.ca
1200 Markham Rd., Lower Level Unit 5 & 7
Scarborough, On. (Markham / Ellesmere)

RANI TAILORS & FASHIONS
25 வருடம் அனுபவம் மிக்க மற்றும்
Sri Lanka, India, Germany போன்ற
நாடுகளில் தையல் கலையில் பிரபலமான
புஸ்பராணி மணியம் அவர்கள் இப்போது
Canadaவில் சேவையாற்றுகிறார்
25 Years of Service
தொடர்புகளுக்கு:
647.836.0654 Cell
647.945.8351 Home

## முக்கிய அறிவித்தல்

தமிழீழத்தில் நடந்த இனப்படுகொலைகளின் நினைவு நாள் குறிப்புக்கள் மற்றும் கட்டுரைகள், தமிழீழ விடுதலைக்கான போரில் வீரச்சாவு அடைந்த உங்கள் உறவுகளின் நினைவு நாள் அறிவித்தல்களையும் மற்றும் எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.

தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.

எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.

sangathamilcanada@gmail.com

## முக்கிய அறிவித்தல்

உங்கள் வணிக விளம்பரங்கள், அறிவித்தல்கள், சிறு விளம்பரங்கள்
சங்கத்தமிழ் இருவாராந்திர சர்வதேச மின் செய்தித்தாள்
ஊடக மக்களிடம் சென்று அடைய
இன்றே அழையுங்கள்: 437.345.4203,
sangathamilcanada@gmail.com

## முக்கிய அறிவித்தல்

தமிழீழம், மலையக சிறுவர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் தொடர்பான விபரங்களை சங்கத்தமிழ் இதழில் 26, 27 பக்கங்களில் பதிவிட்டுள்ளோம். இது COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!






## தமிழீழ தேசிய தலைவர் மேதகு வே. பிரபாகரன் அவர்களின் சிந்தனையிலிருந்து



மக்களின் துன்ப துயரங்களில் பங்கு கொண்டு, அவர்களது கஸ்டங்களைப் போக்குதற்குத் திட்டமிட்டுச் செயலாற்றுவது தான் உண்மையான அரசியல் வேலை.



தமிழீழ விடுதலைப் போரில் வீரச்சாவடைந்த அனைதுப் போராளிகளுக்கு எமது வீர வணக்கத்தையும், சிங்கள, இந்தியப் படைகளால் அநியாயமாகப் படுகொலை செய்யப்பட்ட அனைத்து தமிழீழ மக்களுக்கும் எமது அமைதி வணக்கத்தையும் செலுத்திக் கொள்கிறோம். -சங்கத்தமிழ் -

# சங்கத்தமிழ்


## தொடர்புகளுக்கு

**தொலைபேசி** (TP)

**437 345 4203**

**மின்னஞ்சல்** (Email)

**sangathamilcanada@gmail.com**

**முகநூல்** (Facebook)

**Sangathamil Canada**


அனைத்து உரிமைகளும் சங்கத்தமிழ் வெளியீட்டிற்கு ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த வெளியீட்டில் துல்லியமான தகவல்களை வழங்க ஒவ்வொரு முயற்சியும் செய்யப்படுகிறது. எந்தவொரு குறைபாடுகளுக்கும் பிழைகளுக்கும் சங்கத்தமிழ் வெளியீட்டும் பொறுப்பல்ல. விளம்பரங்களுக்கும் மற்றும் கட்டுரையின் உள்ளடக்கங்களுக்கும், விளம்பராதார் அல்லது எழுத்தாளர்கள் பொறுப்பாவார்கள்.

All the rights reserved to Shangathamil. Every effort is made to provide accurate information in this publication. Shangathamil is not responsible for any omission or errors. Advertiser or writers shall be responsible for the contents of the advertisements and articles.




# வீரத்தமிழ்மகன் முருகதாசன்

சுவிட்சர்லாந்தில் ஐக்கிய நாடுகள் அவையின் முன்றலின் முன்பாக 2009, பெப்ரவரி 12 வியாழக் கிழமை இரவு 8:15 தொடக்கம் 9:45 நிமிடம் வரையான நேரத்துக்குள் இன அழிப்பில் இருந்து ஈழத்தமிழ் மக்களைக் காப்பாற்றக்கோரி தீக குளித்து வீர காவியமானார்.

இவர், 7 பக்கங் களுக்கு "உலக சமூகத்துக்கு தமிழினத்தின் சார்பில் என் ஆத்மார்த்த வேண்டுகோள்" என்ற தலைப்பில் ஒரு மரண சாசனம் எழுதி வைத்து விட்டு தீக்குளித்தார்.

<u>உலக சமூகத்துக்கு தமிழினத்தின் சார்பில் என் ஆத்மாத்த வேண்டுகோள்.</u>

ஏன் இனத்தின் அழிவைத் தடுத்து நிறுத்த தவறிய உலகமே, உங்களின் மனசாட்சியை தட்டியெழுப்ப என்னுடைய இனிய உயிரை வழங்குகின்றேன்.

எனது பெயர் முரகதாசன்
பிறந்த திகதி 02 . 12 . 1982

இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து London நாட்டின் முகவரியில் வசிக்கும் தமிழ் இனத்தைச் சேர்ந்தவன்.

இலங்கையில் வாழும் தமிழ் இனம் பெரும்பான்மைச் சிங்கள இனத்தின் அரசால் நசுக்கப்பட்டு வதைக்கப்பட்டுக் கொண்டிருக்கிறது, அதனை நீங்கள் எவரும் தடுத்து நிறுத்தவில்லை. பார்த்துக்கொண்டு ஊக்கம் கொடுத் துக்கொண்டும் இருக்கின்றீர்கள்.

போர் தொடர்பான நடைமுறைகள், ஜெனீவா பிரகடனம், அடிப்படை மனித உரிமைகள், இன அழிப்பு அதற்கான சட்டங்கள், நடைமுறைகள் எல்லாவற்றையும் ஐநா மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் என்பன வைத்திருக்கின்றன தனது உறுப்பு நாடுகள் அவற்றைக் கடைப்பிடிக்கவேண்டும் என்றெல்லாம் சட்டம் வைத் துள்ளீர்கள் - ஆனால் இவற்றையெல்லாம் மீறி எனது தமிழ் இனத்தை ஒட்டுமொத்தமாக இலங்கைத்தீவில் சிறீலங்கா அரசு படுகொலை செய்து கொண்டிருக்கின்றது.

இன்று வன்னியில் எனது நான்கரை லட்சம் தமிழ் உறவுகள் எப்படிக் கொடூரமாக வதைக்கப்படுகின்றார்கள் என்பதை உலகின் பிரதிநிதிகளான ஐ.நா அதிகாரிகளும், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க அதிகாரிகளும் அங்கிருந்து வெளியிடும் அறிக்கைகளில் இருந்தே தெரிந்துகொண் டிருப்பீர்கள்.

வன்னியில் என் இனத்தின் நான்கரை லட்சம் பேர் ஒரு குறுகிய பகுதிக்குள் முடக்கப்பட்டு சிறீலங்கா அரச படைகளால் நாள்தோறும் எறிகணைத் தாக்குதல்கள் மூலமும் வான்குண்டுத் தாக்குதல் மூலமும் படுகொலை செய்யப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். நூற்றுக்கணக்கான என் உறவுகளின் பிணங்கள் வீதிகள் எங்கும் கிடப்பதை அறிந்த போது எனக்கு தாங்க முடியாத துயரமும் அதிர்ச்சியும் ஏற்பட்டது. நாள்தோறும் எமக்கு கிடைக்கும் செய்திகளில் வீதி வீதியாக கொல்லப்பட்டுக் கிடக்கும் என் இனத்துப் பாலகர்கள், பால்குடிக் குழந்தைகள், கர்ப்பிணிப் பெண்கள் நோயாளர்கள், பற்றித்தான் தகவல்கள் வருகின்றன.

மருத்துவமனைகள் அங்கு பாதுகாப்பானவையாக இல்லை. மருத்துவமனைகள் கூட குறிவைத்துத் தாக்கப்படுகின்றன. மருத்துவமனைகளைத் தாக்குவதை சிறீலங்கா அரசே நியாயப்படுத்துகின்றது. அவர்கள் தொடர்தாக்குதல்கள் நடத்தி மக்களை கொல்கின்றார்கள். வன்னியில் பயங்கரவாதிகள் இருக்கிறார்கள். அதனால் தாக்குவோம் என்கிறார்கள்.

உங்களின் மொழியில் கேட்கிறேன் பிறந்த குழந்தைகள் கொல்லப்படுகின்றார்கள். சிறார்கள் கொல்லப்படுகின் றார்கள். வயிற்றில் இருக்கும் சிசுக்கள் கூடக்கொல்லப் படுகின்றனர். அவர்களும் பயங்கரவாதிகளா?

மக்கள் கொல்வது பயங்கரவாதம் என்கிறீர்கள். அங்கு தமிழ் மக்கள் அரசால் நாள்தோறும் படுகொலை செய்யப்படுகின்றார்கள். அவர்கள் இடம்பெயர்கின் றபோதும், இடம்பெயர்ந்து ஒரு இடத்தில் தனித்து நிற்கின்றபோதும் மருத்துவமனைகளுக்கு செல்கின்ற போதும் வீதிகளில் நடமாடுகின்ற போதும் என்று எங்கும் அவர்கள் கொல்லப்படுகின்றனர். கொத்தாக அவர்கள் படுகொலை செய்யப்பட்டு கிடக்கிறார்கள்.




முல்லைத்தீவு சுதந்திரபுரச்சந்தி திடலில் ஐநாவின் உலக உணவுதிட்ட அதிகாரிகள் கொடியை ஏற்றி நிலைகொண்டு நிவாரணத்தை வழங்கிக்கொண்டிருந்த போதும் அந்த திடல் மீது 26-01-09 அன்று பகல் இரவாக எறிகணைத் தாக்குதல் நடத்தப்பட்டது, அப்பகுதியில் இருந்த செஞ்சிலுவைக் குழு அலுவலகமும் தாக்கப்பட்டது. அன்று மட்டும் 302 மக்கள் படுகொலை செய்யப்பட்டனர். 1199 பேர் படுகாயமடைந்தனர். அன்று அதிகளவில் உடையார்கட்டு மருத்துவமனை உள்ளிட்ட பகுதிகளெங் கும் பிணக்காடாக இருந்ததை எனது உறவினர் நேரில் பார்த்து தொலைபேசியில் சொல்லியபோது நான் அதிர்ந்து விட்டேன். யார் இருக்கிறார்கள், யார் மடிந்தார்கள் என்பதை அறியாமல் உயிருடன் இருந்தவர்கள் அந்த இடத்தை விட்டு ஓடினர். அவலங்களின் சாட்சியாக நின்ற ஐநா அதிகாரிகளும், சர்வதேச செஞ்சிலுவைக்குழு அதிகாரிகளும் சிறிய பதுங்குகுழிகளுக்குள் பாதுகாப்பு தேடி இருந்துவிட்டு அவசர அவசரமாக அங்கிருந்து வெளியேறினர்.

அன்றைய நாளை மறக்க முடியாதளவுக்கு எனக்கு பெரும் மனஅழுத்தத்தை ஏற்படுத்தியது. இதுபற்றி ஐநா பிரநிதிகள் செஞ்சிலுவைக்குழுப் பிரிதிநிதிகள் அறிக்கை வெளியிட் டனர். அப்பகுதி பாதுகாப்பு வலையம் என்று சிறீலங்காவால் பிரகடனப்படுத்தப்பட்ட பகுதியாகும். இவ்வாறு தானே பாதுகாப்பு வலையம் என அறிவித்து அதில் பன்னாட்டுப் பிரதிநிதிகள் சாட்சியாக இருக்க, சிறீலங்கா அரசு தமிழ் மக்களை படுகொலை செய்து வருகிறது. நாள்தோறும் இத்தகைய தாக்குதல்கள் நடக்கின்றன. இது அரச பயங்கரவாதம் இல்லையா? அரசே நடத்தும் இனப்படுகொலை இல்லையா?

இவ்வாறே, போரின் போது மருத்துவமனைகள் இலக்கு

வைக்கப்படக் கூடாது என்ற மரபையும் புறந்தள்ளி, ஐநா அதிகாரியும் பன்னாட்டு செஞ்சிலுவைக்குழுப் பிரதிநிதிகள் நின்றவேளையில் சிறீலங்கா அரசப்படைகள் காயமடைந்த மக்களுக்கு சிகிச்சை வழங்கிவந்த புதுக்குடியிருப்பு மருத்துவமனை மீது 2009.02.02 தொடக்கம் 2009.02.04 திகதி வரை குண்டுகளை வீசி நோயாளர்களைக் கொன்றதற்கு உங்களவர்களே சாட்சி. 4ம் திகதி சிறீலங்காவில் சுதந்திரநாள் கொண்டாட்டம். அன்றுதான் புதுக்குடியிருப்பு மருத்துவமனை முற்றாக அழிந்துச் செயலிழக்கச் செய்யப்பட்ட நாளாகவும் அமைந்தது.

புதுக்குடியிருப்பு மருந்துவமனை தொடர் விமானக் குண்டுவீச்சுகளாலும் ஆட்லறி கொத்துக்குண்டுகளாலும் தாக்கப்பட்ட போது அங்கு அப்பாவி மக்கள் 500 பேர் சிகிச்சை பெறுகின்றார்கள் என்பதை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரிதிநிதி உறுதிப்படுத்தி தகவல் வெளியிட்டிருந்தார்.

இதேவேளை, இதற்கு ஒரு கிழமைக்கு முன் 26.01.2009ல் உடையார்கட்டு மருத்துவமனை தாக்கபட்டு மக்கள் கொல்லப்பட்டது தொடர்பாக பி.பி.சி நிறுவனத்திற்குப் பேட்டியளித்த சிறிலங்கா பாதுகாப்பு அமைச்சின் பேச்சாளர் பிரிகேடியர் உதய நாணயக்கார, புதுக்குடியிருப்பில் மருத்துவமனை இயங்கும் போது மக்கள் ஏன் உடையார்கட்டு மருத்துவமனைக்கு போக வேண்டும்? எனக் கேட்டு உடையார்கட்டு மருத்துவமனை மீதான தாக்குதலை நியாயப்படுத்தியிருக்கிறார். உடையார்கட்டு பகுதியை சில தினங்களுக்கு முன்னர் தான் பாதுகாப்பு வலையமென குறிப்பிட்டு அங்கு மக்களை ஒன்றுகூடுமாறு சிறிலங்கா அரசு அறிவித்திருந்த நிலையிலும் கூட அந்த மருத்துவமனை தாக்கப்பட்டிருந்தது. அதனை இராணுவப் பேச்சாளர் ஏற்றுக்கொண்டு நியாயப்படுத்தியிருக்கிறார்.

சிறீலங்கா இராணுவப் பேச்சாளர் உதய நாணயக்கார புதுக்குடியிருப்பு மருத்துவமனையையே சில தினங்கள் கழித்து தாக்கப்பட்டது. 02.02.2009 தொடக்கம் 04.02.2009 குண்டுவீசி நோயாளர்கள் கொன்றழிக்கப்பட்டார்கள். ஐ.நா மற்றும் சர்வதேச செஞ்சிலுவைச்சங்கப் பிரதிநிதிகள் குறித்த மருத்துவமனை வளாகத்தில் தங்கிநின்ற நிலையிலேயே சிறிலங்கா அரசு படைகள் மேற்படி மருத்துவமனை மீது தாக்குதலை மேற்கொண்டன.

பிரித்தானிய ஸ்கை ஒலிபரப்பு நிறுவனத்திற்கு 03.02.2009 அன்று வழங்கிய சிறப்பு நேர்காணல் ஒன்றில் பாதுகாப்பு வலத்திற்கு வெளியே எந்த வைத்தியசாலையும் இல்லை. அதனால் புதுக்குடியிருப்பு மருத்துவமனை ஒரு நியாயபூர்வமான இலக்கு என்று வைத்தியசாலைகள் மீது நடத்தப்படும் தாக்குதல்களை நியாயப்படுத்தி சிறிலங்கா ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்புச் செயலாளருமான கோத்தபாய ராஜபக்ச கருத்துத் தெரிவித்துள்ளார்.

மருத்துவமனைகள் தாக்கப்படுவதை நியாயப்படுத்தியும் இனியும் மருந்துவமனைகள் தாக்கப்படும் என்பதை வலியுறுத்தியும் மேற்படி சிறிலங்கா அரசின் இராணுவப் பேச்சாளரும் மற்றும் ஜனாதிபதியின் சகோதரரும் பாதுகாப்புச் செயலாளருமான கோதபாய ராஜபக்ச ஆகியோர் உத்தியோக பூர்வமாகவே உலக செய்தி நிறுவனங்களில் கருத்துக்களை வெளியிடுகின்றது. சர்வதேச செய்தி நிறுவனங்களுக்கு இவ்வாறான ஒரு கருத்தை அவர்களால் கூறமுடிகின்றது என்றால், மருத்துவமனைகள் தாக்கப்படுவது உலக நாடுகள் கொடுத்துள்ள அங்கீகாரம் என்று தானே பொருள்படும்.

முள்ளியவனையில் இயங்கிய முல்லைத்தீவு பொது மருத்துவமனை, வள்ளிபுனத்தில் இயங்கிய முல்லைத்தீவு பொது மருத்துவமனை, விசுவமடுவில் இயங்கிய கிளிநொச்சி பொது மருத்துவமனை, உடையார்கட்டில் இயங்கிய கிளிநொச்சி பொதுமருத்துவமனை, மூங்கிலாறில் இயங்கிய மல்லாவி மருத்துவமனை, புதுக்குடியிருப்பு மருத்துவமனை என்பன மருத்துவமனைகள் என்பதற்காகவே தாக்கப்பட்டுள்ளன.

இரு தரப்புக்களையும் சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மதிக்கும்படி கோரும் இந்நாடுகளுக்கு வைத்தியசாலைகளைத் தாக்குவதன் மூலம் வேண்டுமென்றே தமிழர்களை இலக்கு வைக்கும் சிறீலங்கா அரசு அதன் காரணமாக அந்தச் சட்டங்களை முழுவதுமாக மீறுகின்றது என்று நன்கு தெரியும்.

சிறீலங்கா அரசினால் முன்னெடுக்கப்படும் இந்தக் கொள்கை நிலைப்பாடு மனித இனத்திற்கு எதிரான தீங்கியல் குற்றமாகும் இந்தக் கொள்கையை முன்னெடுக்கும் சிறிலங்கா அரசின் போக்கால் சென்ற மாதம் மட்டும் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தமிழர்கள் கொல்லப்படவும், காயமடையவும் நேர்ந்துள்ளது.

எனது தமிழ் மக்கள் இலங்கை தீவில் படும் துயரத்தின் பால் உலகின் கவனத்தை ஈர்ப்பதற்காக எனது உயிரைக் கொடுக்கிறேன். இந்த முடிவை எடுத்து நடைமுறைப் படுத்தும் இடைக்காலத்தில் கூட தினம் தினம் நூற்றுக்கு மேற்பட்ட மக்கள் இலங்கைத் தீவெங்கும் வீதி வீதியாக கொல்லப்படுகின்றார்கள் என்ற செய்திகள் வந்த வண்ணம் உள்ளது.

இந்த மனித துன்பியல் கொடூரம் மனிதாபிமான உதவிகள் தமிழ் மக்களுக்குக் கிட்டுவதைத் தடை செய்துள்ள இலங்கை அரசின் நடவடிக்கையால் மேலும் தாமதமாகியுள்ளது. அனைத்துலக சமூகம் இந்த உண்மைகளை முழுமையாக அறிந்துள்ள போதிலும் பன்னாட்டு மனிதாபிமான சட்டங்களை பின்பற்றுமாறு சிறிலங்க அரசிற்கு கடும் அழுத்தம் கொடுப்பதைத் தவிர்த்து சிறீலங்கா அரசிற்கு படை மற்றும் பொருண்மிய உதவிகளை வழங்கி வருகின்றமை பெரும் துர்பாக்கியமாகும்.

தமிழ் தேசம், சிங்கள தேசம் ஆகியவற்றின் வாழிடமே இலங்கைத்தீவு என்பது தமிழ் மக்களின் உறுதியான மாற்றமுறாத கருத்து நிலைப்பாடாகும். இந்த யதார்த்தத்தை அங்கீகரிக்கும் அடிப்படையில் தான் இரு தேசங்களினதும் உண்மையான பிரதிநிதிகள் அதாவது இரண்டு தேசங்களினதும் எதிர்கால பாதுகாப்பு பரஸ்பர நலன் போன்றவற்றிற்காக எவ்வாறு இரண்டு தேசங்களும் கூடிச் செயற்பட்டு தமிழரின் தேசிய பிரச்சனைக்கு நீதியான நீடித்து நிற்கக்கூடிய தீர்வைக்காணலாம் என்பது குறித்து பேச்சுகளில் ஈடுபட வேண்டும்.

இலங்கைத்தீவு முழுவதும் சிங்கள இனத்தவருக்கு உரித்தானது என்ற கொள்கை நிலைப்பாட்டினால் தான் சிங்களவர்களோடு சமத்துவமான தமிழ் தேசம் உள்ளது என்ற இந்த யதார்த்தத்தை ஏற்று அங்கீகரிப்பதற்கு மறுத்த இந்த பௌத்த சிங்கள இன ரீதியிலான தேசியவாதமே இன அழிப்பு நோக்கிலான போர் வழித் தீர்விற்கு சிறீலங்கா அரசைத் தள்ளியுள்ளது.

நான்கு நூற்றாண்டுகளாக அந்தத்தீவில் தமிழ் இனத்திற்கான உரிமைகள் மறுக்கப்பட்ட வரலாறு எல்லோருக்கும் தெரியும். இந்த உரிமைகளுக்காக அறவழியில் தமிழினம் போராடியபோது அதை சிங்கள அரசு வன்முறை கொண்டு அடக்கியதனாலேயே தமிழினம் அடிக்கு அடி கொடுக்க வேண்டிய ஆயுதப் போராட்டத்துக்கு தள்ளப்பட்டது.

அதாவது, தமிழ் மக்களுக்கு எதிரான சிறீலங்கா அரசின் படை மற்றும் பௌதீக ரீதிலான அடக்குமுறையை எதிர்த்து நிற்பது அவசியம் என்பதும். அதவே ஆயுதம் தாங்கிய தமிழர்களின் எதிர்ப்புப் போராட்டத்தைத் தூண்டியது என்பதையும் உலகம் கவனிக்க வேண்டும்.

தமிழ் தேசம் என்ற உண்மை இருப்பு நிலையை தனது இனவழிப்பு செயற்பாடு மூலம் சிதைத்து அழிப்பது தான். சிறீலங்கா அரசு தொடுத்துள்ள போரின் நோக்கமாகும். இதை அங்கீகரிப்பது போல 03.02.2009 இல் நோர்வே, யப்பான், அமெரிக்கா , ஐரோப்பிய ஒன்றியம் (அல்லது இணை தலைமை நாடுகள்) விடுத்த கூட்டறிக்கை அனைத்து தமிழர்களின் மனதையும் ஆழக்காயப்படுத்தியுள்ளது.

அதாவது தமிழ் மக்களது உரிமை போரினதும் சிங்கள இனவாததினதும் அடிப்படைகளைத் தெரிந்து கொண்டுமே இணைத்தலைமை நாடுகள் சிறிலங்கா அரசிற்குச் சார்பாகவும் தமிழ் மக்கள் தமது உரிமைப்போரைக் கைவிட வேண்டும் என்றும் கூறி அறிக்கை வெளியிட்டமையும் கூட எனக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தியது.

ஒரு இனம் தனது உரிமைகளைக் கேட்பது தவறு என்று உலகம் கருதுகின்றதா ? குறிப்பாக ஐநா அவ்வாறு தான் கருதுகின்றதா..? உலகில் ஏன் தமிழ் இனத்துக்கு மட்டும் உரிமைகள் மறுக்கப்படுகின்றன அல்லது உரிமை மறுப்புக்கு உலகம் ஆதரவு கொடுக்கின்றது. அந்த மறுப்புக்கு ஏன் உலகம் துணை போகின்றது? நாம் ஏன் அடிமைகளாக இருக்க வேண்டும் என உலகம் நினைக்கின்றது.

இன்று ஒரு அரசு பிரகடனப்படுத்தி ஒரு இனத்தை அழித்துக் கொண்டிருப்பது தெரிந்தும் உலகமே அதனைத் தடுக்கவில்லை . அறிக்கைகளை மட்டும் வெளியிட்டு விட்டு அமைதியாகி விடுகின்றன . ஆனால் அந்த அமைதியை நீங்கள் அந்த அரசின் இன அழிப்பிற்கு கொடுத்த அனுமதியாக கருதியே சிறீலங்கா அரசு இன அழிப்பை தீவிரப்படுத்தியுள்ளது. ஒரு இனத்தின் அழிவைத்தான் நீங்கள் வரலாற்றில் எழுதிக் கொண்டிருக்கின்றீர்கள். இன அழிப்பைச் செய்யும் அந்த நாட்டுக்கு நீங்கள் ஏன் அழுத்தம் கொடுக்கிறீர்கள். இல்லை? இதுதான் உங்கள் நடுநிலையா?

1958 முதல் இன்று வரை தமிழினத்துக்கு உரிமைகள் வழங்கப்படுவதாக கைச்சாத்திடப்பட்ட உடன்பாடுகள் எல்லாம் சிறிலங்கா அரசால் பல தடவைகள் குறிப்பாக கடைசி நோர்வே போர்நிறுத்த உடன்பாடு வரை கிழித்தெறியப்பட்ட வரலாறு எல்லோருக்கும் தெரியும்.

கடைசியாக நடந்த பேச்சுக்களின் போது இணைத் தலைமை நாடுகள் சிறீலங்காவுக்கு சார்பாகவே செயற்பட்டன . இந்த பேச்சுகாலத்தில் சிறீலங்கா படைத்தரப்பு தன் படையை பலப்படுத்தவே பயன்படுத்தியது என்பதும் தெளிவாக தெரிந்தது. பேச்சுகளின் காலங்களை தமிழரை ஏமாற்றும் காலங்களாகவே சிறீலங்கா அரசு பயன் படுத்தியது.

மக்களை சுதந்திரமாக நடமாட விட வேண்டும் என்று சொல்கின்றீர்கள். சிங்கள சிறீலங்கா அரசு எமது தமிழ் மக்களை ஆட்சிபுரிய அனுமதிக்க வேண்டுமென மறைமுகமாகச் சொல்கிறீர்கள்.

ஒருபுறம் சிறீலங்கா அரசு கட்டுப்பாட்டுப் பகுதியில் எனது இன மக்கள் கடத்தப்பட்டு கைகள், கால்கள், கண்கள் கட்டப்பட்டு படுகொலை செய்யப்பட்டு வீதிகளில் அநாதரவாகப் போடப்படுகின்றார்கள். இவற்றைச் செய்வது யார் என்று புள்ளி விவரங்கள் எல்லாவற்றையும் மனித உரிமை நிறுவனங்கள் கண்டித்து அறிக்கை வெளியிட்டும் நீங்கள் எவரும் அவற்றைத் தடுத்து நிறுத்த நடவடிக்கை எடுக்கவில்லை. அதற்கு மாறாக அப்பகுதியில் மக்கள் சுதந்திரமாக நடமாடலாம் என்கிறார்கள்.

ஈராக்கிற்கு அடுத்த படியாக உலகளவில் சிறீலங்காவிலேயே அதிகளவில் மக்கள் காணாமல் போகின்றனர் என்பதை உலக மனித உரிமைகள் அமைப்புகள் அடையாளப்படுத்தியும் நீங்கள் எவரும் அவற்றிற்கு பரிகாரம் காணாது அப்பகுதிகளினுள் மக்களைபோகும்படி கூறுகிறீர்கள்.

சிங்கள சிறீலங்கா அரசின் ஆளுகையில் கடந்த 10 வருடங்களுக்கு மேலாக எமது தமிழ்மக்கள் கடத்தப்பட்டும் காணாமற் போயும் உள்ளமை உங்களுக்கு தெரியாதா? நூற்றுக்கணக்கில் அல்லாமல் ஆயிரக்கணக்கில் நடைபெற்று முடிந்த இவ்வாறு காணமற் போவதற்கு எதிராக உலகநாடுகள் என்ன செய்தன.

இணைத்தலைமை நாடுகளின் பின்புலத்தில் நோர்வேயின் அனுசரணையில் நடைபெற்ற பேச்சு வார்த்தைக் காலத்திற்கு கூட நூற்றுக்கணக்கான தமிழ் மக்கள் இலங்கை தீவெங்கும் சிங்கள் சிறீலங்கா அரச படைகளால் இரகசியமான முறையில் காணாமல் போகச் செய்யப்பட்டு படுகொலை செய்யப் பட்டமைக்கு எதிராக உலகநாடுகள் எதனைச் செய்தன.

இறையாண்மை என்ற பேரில் நடக்கும் இந்த இன அழிப்பை நீங்கள் அனுமதிக்கிறீர்கள். தமிழினத்தின் மீது இன அழிப்பைச் செய்வது சிறீலங்கா அரசு என்றவுடன் நீங்கள் இறையாண்மை பற்றித் தொடங்குகின்றீர்கள். இறையாண்மை கொண்ட அரசின் உறவைப்

பேணுவதற்காக அல்லது பாதுகாப்பதற்காக நீங்கள் சிறீலங்கா அரசுக்கு ஆதரவளிப்பதாகவே நாங்கள் எல்லோரும் கருதுகின்றோம். ஒரு இனத்தை நசுக்க அல்லது இனத்தை அழிக்க நீங்கள் எல்லோருமே ஆதரவளிக்கின்றீர்கள். தமிழர் உரிமைக்கக போராட்டம் செய்தால் வன்முறை அல்லது பயங்கரவாதம் என்றெல்லாம் சொல்லுகிறீர்கள். தமிழரை 1958ல் இருந்து ஒரு அரசு அழித்துக் கொண்டிருப்பதை வன்முறையாக நீங்கள் பார்க்கவில்லையா? தமிழினம் இந்த "பூமியில் வாழும் இனமில்லையா? அவர்கள் உரிமைகளுடன் வாழ உரித்துடையவர்கள் இல்லையா? நீங்கள் ஏன் எம்மை மட்டும் நசுக்க ஒத்துழைக்கின்றீர்கள்?

புலம் பெயர்ந்து வாழும் நாடுகளில் இருந்து எமது தமிழ் மக்கள் உங்களுக்கு உங்கள் மொழியில் அறவழியில் எனது இனத்தை காப்பாற்றுமாறு குரல்களை எழுப் பினார்கள். ஆனால் எதையும் நீங்கள் காது கொடுத்துக் கேட்க்கவில்லை மிக கொடூரமாக வதைக்கப்படும் என் இனத்துக்கு என்னால் இங்கிருந்து எதையும் செய்யமுடிய வில்லை. குறைந்தது ஆறுதல் சொல்லக்கூட என்னால் முடியாத கையறு நிலையில் இருப்பது குறித்து நான் வெட்கப்படுகின்றேன். வேதனைப்படுகின்றேன்.

இந்தச் சூழலில் புலம் பெயர் நிலையில் இருக்கும் எனக்கு அங்கு அவலப்படும் என் மக்களுக்கு செய்யக்கூடியதாக எதுவும் இல்லை. உங்களுக்கு அழுத்தமாக என் இனத்தின் சார்பில் எனது வேண்டுகோளைத் தெரிவித்து என் இனத்தை காக்கும் முடிவை எடுக்க வேண்டும் என்பதற்காக எனது உயிரை தீயிற்குக் கொடுக்க முடிவெடுத்துள்ளேன்.

உலக நாடுகளே,

குறிப்பாக, இலங்கை அரசுடன் கைகோத்துள்ள இணைத்தலைமை நாடுகளே

ஐ.நா நிறுவனமே

ஒன்றைப் புரிந்துகொள்ளுங்கள். சிங்கள அரசு எமது தமிழ்மக்களுக்கு செய்துவந்த கொடுமைகள் நீண்ட வரலாற்றைக் கொண்டது. அந்த நீண்ட துன்பியல் வரலாற்றின் நிகழ்காலப் பரிணாமாகவே, தமிழ் மக்களின் பிரச்சனையில் உலக நாடுகளின் தலையீடு ஏற்பட்டது. உலக நாடுகள் தலையிட்டபோது தமிழ்மக்களுக்கு நீதி கிடைக்குமென தமிழ் மக்கள் நம்பினார்கள். ஏன் நானும்கூட நம்பினேன். ஆனால் நிகழ்காலத்தில் நாங்கள் ஏமாற்றப்பட்டு விட்டதை உணர்கின்றோம்.

சிங்கள அரசின் கபட நாடகத்திற்கு உலக நாடுகளும் துணைபோவதைக் கண்டதனாலேயே இந்த ஏமாற்றம் ஏற்பட்டுள்ளது. எனது தமிழ்மக்கள் தங்களது தாய்நாட்டில் கொடுமைப் படுத்தப்படுவதைக் கண்டும் உலகம் பாராமுகத்துடன் இருப்பது மட்டுமல்லாமல் சிறீலங்கா அரசை ஊக்குவித்து வருவது கண்டும் மனம்வெதும்பியே உலகப் பொதுமன்றமாம் ஐ.நா முன்றலில் தீயின் சாட்சியாக என்னை அர்ப்பணிக்க முடிவெடுத்தேன்.

எனது மக்கள் நிர்க்கதியாக விடப்பட்டதற்கும் சிங்கள அரசுடன் சேர்ந்து இணைத்தலைமை நாடுகள் இன அழிப்பிற்கு துணைபோனதற்கும் சாட்சியாக ஐ.நா மன்றத்தின்முன் இந்தத் தமிழன் முருகதாசன் தீக்குளித்தான் என்ற வரலாறும் சேரட்டும்.

ஒடுக்கப்பட்ட இனங்களுக்கு ஆக்கிரமிப்பாளர்களிடமிருந்து நீதி கிடைக்கச் செய்வதில் ஐ.நா.வின் பங்கு எவ்வாறானது என ஆய்வு செய்யப்படும் போது ஒடுக்கப்பட்ட தமிழினத்தின் சார்பாக இலங்கைத் தமிழ் இளைஞன் முருகநாதன் தீக்குளித்து உயிர் கொடுத்தான் என்ற வரலாறும் சேரட்டும். சிங்கள அரசின் இன அழிப்பிற்குத் துணைப்போகும் ஐ.நாவே இன்னொன்றையும் புரிந்து கொள்ளுங்கள். நேற்றைய வரலாற்றின் ஏமாற்றத்தின் சோக வெளிப்பாடாக இந்தச் முருகதாசன் தீக்குளிக்கின்றான். ஆனால் இன்றைய வரலாறு கடந்தகாலமாகும். எதிர்காலத்தில் கோபம்கொள்ளும். தமிழரை அழித்தொழிக்க ஊக்குவித்து உத்வி புரிவோர் மீது எமது வருங்காலச் சந்ததி கோபம் கொள்ளும்.

உலகத் தமிழினமே உங்களுக்கு ஒன்றைத் கூறுகின்றேன். நீங்கள் அனைவரும் ஒன்றிணைந்து உலகின் மனசாட்சியை விழித்தெழ வைக்க உலக சமூகத்தின் மனதையும், அறிவையும் வென்றெடுக்க பாடுபடவேண்டும். எமது சுயத்தை நிலைநிறுத்தி எமது உரிமையை நாமே வென்றெடுப்பதற்கான வாய்ப்பும் இதுவெ.

எனது தாயக உறவுகளே சிங்கள அரசின் போலி முகத்தைக் கண்டு ஏமாந்து விடாதீர்கள். அதன் உண்மை முகம் கோரமானது என்பதை பல தடவை நீங்கள் உணர்ந்துள்ளீர்கள். உடலால் தொலைவிலிருந்தாலும் உணர்வால் உங்களுடனேயே நானும் இருக்கிறேன். எம்மைக்களைப்படையச் செய்து சோர்வுற வைத்து எமது உரிமைகளை எம்மிடம் இருந்து பறித்துவிடலாம் என சிங்கள அரசு நினைக்கிறது. சிங்கள அரசின் இந்த எண்ணத்தை சிதறடித்து உறுதியுடன் இருந்து எமது உரிமைகளை நாமே மீட்போம்.

கேளுங்கள் தரப்படும் தட்டுங்கள் திறக்கப்படும் என்றார் யேசுபிரான். நாமும் எமது உரிமைகளைக் கேட்போம் தொடர்ந்து கேட்டுக் கொண்டேயிருப்போம். சுதந்திரத்தின் கதவு ஒருநாள் எமக்காக் திறக்கப்படும். எம் மக்களின் நல்வாழ்விற்கான கதவு ஒருநாள் திறக்கப்பட்டே தீரும். நாங்கள் கேட்போம். எமது உரிமைகளைக் கேட்டுக் கொண்டே இருப்போம். உலகத்திடம், உலக மனச்சான்றின் முன் தொடர்ந்து கேட்போம்.

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்

உண்மைக்காய் உயிர்தரும் தமிழன்

முரகதாசன்

# 35ஆம் ஆண்டு மண்டைதீவு படுகொலை நினைவு நாள் 10.06.1986




1986 ஆம் ஆண்டு ஜூன் 10ம் நாள் குரநகர் துறையில் இருந்து தூயஒளி படகு 31 மீனவர்களை சுமந்த படி புறப்பட்டது. முகத்துவாரம் வெளிச்சக்கூடு தாண்டி மண் டைதீவுக் கடலில் இறங்கினார்கள் மீனவர்கள். 27 பேர் கரையிறங்க நால்வர் படகில் நின்றனர். வலை வளைக்க ஆயத்தமாக மீனவர்கள் தயாராக பலவிதமான ஆயுதங்கள் பொருந்தப்பட்ட சிறியரக கப்பலில் முகமூடியணிந்தபடி வந்திறங்கினர் சிறீலங்கா சிங்களக் கடற்படையினர். மீனவர்கள் அனைவரையும் கைகட்டித் தலைகுநிந்து நாரிமுட்டக்கடலில் நிற்குமபடி உறுமினார்கள். பின்பு கோடரி வாள் கத்தி பொல்லாலும் துவக்குப் பிடியாலும் வெட்டியும் கொத்தியும் அடித்தும் கொன்றனர் 31 பேரையும். மண்டைதீவு நீலக்கடல் எங்கும் மனித உடலங்கள் மிதந்து நீலக்கடல் அன்று சிவப்பாய் மாறியது.

# தமிழீழ செய்திகள்




## எந்தவொரு அந்தியசக்திகளின் நடவடிக்கைகளுக்கும் தாயக மக்களின் சம்மதம் பெறப்பட வேண்டும் –பிரதமர் வி. உருத்திரகுமாரன்–




கடந்த மே மாதம் 22, 23ம் திகதி இடம்பெற்றிருந்த நாடு கடந்த தமிழீழ அரசாங்கதின் அரசவை அமர்வின் போது, 'சுயநிர்ணய உரிமையும், ஈடுசெய்நீதியிலான பிரிந்து செல்லும்'. 'இந்தியப் பெருங்கடலும் இலங்கைத்தீவில் பெருகிவரும் சீனா ஆதிக்கமும்', தமிழ்நாட்டு ஆட்சி மாற்றமும் இந்தியாவை நோக்கிய செயற்பாடும்' ஆகிய தொனிப்பொருட்களில் பல்வேறு அறிஞர்பெருமக்கள் பங்கொடுத்திருந்த கருத்தமர்வுகள் இடம் பெற்றிருந்தன.

இதில் ஈழத்தில் சீனாவின் காலப்பதிப்பு பற்றியும், சிறீலங்காவில் சீன துறைமுக பட்டிணம் பற்றியும் அமர்வில், தமிழர் தேசத்தின் இறைமை என்பது நிலத்தில் மட்டுமல்ல நிலத்தை அண்டிய கடலிலும் உண்டென்பது உறுதியாக வலியுறுத்தப்பட்டிருந்தது.

தொடர்ந்து மேற்குறித்த நிலைப்பாட்டினை தனது அமர்வின் நிறைவுரையில் வலியுளுத்திய பிரதமர் வி. உருத்திரகுமாரன், தமிழ்மக்களின் சம்மத்தினை பெறாது எந்தவொரு அந்நிய சக்திகளின் நடவடிக்கைகளுக்கும் எதிராக தாயக மக்களும், தாயக தமிழ் அரசியல் தலைவர்களும் போராட வேண்டும் என் அறைகூவல் விடுத்துள்ளார்.

இதேவேளை இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்தில் குறிப்பாக இலங்கைத்தீவில் அதிகரித்து வரும் சீனாவின் ஆதிக்கத்தை தடுப்பதற்கான மூலோபாயமாக இந்தியப் பெருங்கடல் பிராந்தியத்துடன் நமது உறவுகளை சுருக்கிக் கொள்ளாமல், ஆசிய-பசுபிக் பிராந்தியங்களுடன் உறவுகளை வளர்த்துக் கொள்ள கவனம் செலுத்த வேண்டும் என்பதும் வலியுறுத்தப்பட்டது. குறிப்பாக இந்தியாவுடன் மட்டும் ஈழத்தமிழர்களின் செயற்காடுகளை மட்டுப்படுத்தாமல் ஆசிய - பசுபிக் பிராந்திய பெருங்கடல் நாடுகளுடனும் செயற்பாடுகளை விரிவுபடுத்தப்பட வேண்டும் என்ற அவசியமும் வ



## முள்ளிவாய்கால் நினைவேந்தலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்ட பத்து பேருக்கும் ஜூன் 16ஆம் திகதிவரை விளக்கமறியல் – மட்டு

மட்டக்களப்பு கல்குடா கடற்கரையில் முள்ளிவாய்க்கால் நினைவேந்தலில் ஈடுபட்ட சம்பவம் தொடர்பாக பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்ட பத்து பேரையும் எதிர்வரும் ஜூன் 16 அம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு வாழைச்சேனை நீதவான் நீதிமன்ற நீதவான் காணொளி மூலம் 04 ஜூன் 2021 அன்று உத்தரவிட்டார்.

கடந்த மே மாதம் 18ஆம் திகதி முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் செய்வதற்கு எதிராக லவக்குமாருக:கு நீதிமன்ற தடை உத்தரவு பெறப்பட்ட நிலையில் அவர் உட்பட பத்து பேர் அன்றைய நாள் நீதிமன்ற தடை உத்தரவை மீறி கல்குடா பொலிஸ் பிரிவிலுள்ள நாகர்வட்டை கடற்கரைறியல் முள்ளிவாய்க்காலில் உயிரிழந்தவர்களுக்கு நினைவு சுடர் ஏற்றி கடலில் பூக்களைத் தூவி அஞ்சலி செலுத்திய அதனை படம் எடுத்து முகநூலில் பதிவு செய்த நிலையில் அவர்களை பயங்கரவாத தடைச் சட்டத்தின் கீழ் கல்குடா பொலிசர் கைது செய்தனர்.

இதில் கைது செய்யப்பட்டவர்களை நீதிமன்ற அனுமதியினை பெற்று 3 நாள் பொலிஸ் தடுப்பு காவலில் வைத்து விசாரணை மேற்கொள்ளப்பட்டு பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட் நிலையில் அவர்களை மே 04 ஆம் திகதி 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

இதனையடுத்து குறித்த வழக்கை விசாரணைக்காக எடுக்கப்பட்ட நிலையில் கொரோனா தொற்று நீதிமன்றத்துக்கு அழைத்துவர முடியாத கரணத்தினால் காணொளி மூலமான அவர்களை எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தவரவிட்டார்.

## சிறீலங்கா உளவுத்துறையினரால் அடித்து கொல்லப்பட்ட தமிழீழ இளைஞன் – மட்டு




சிறீலங்கா பொலிஸ் காவலில் இருந்தபோது உயிரிழந்துள்ள மட்டக்களப்பு, இருதயபுரத்தைச் சேர்ந்த சந்திரன் விதுஷன் என்ற இளைஞன்.

பொலிஸார் எனக்கூறி மட்டக்களப்பு இருதயபுரம் கிழக்குப் பகுதி வீடொன்றிலிருந்து கடந்த புதன் கிழமை இரவு 10:30 மணியளவில் அழைத்துச் செல்லப்பட்ட சந்திரன் விதுஷன் (22 வயது) இளைஞன் மறு நாள் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் தமிழ் மக்களிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது.

இவ் இளைஞன் அளவுக்கதிகமாக ஐஸ் போதைப் பொருளை உள்ளெடுத்தமையின் காரணமாகவே அவர் உயிரிழந்ததாக அவரை பிரேதப்பரிசோதனை அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது என்று அப்பதிவில் சுட்டிக்காட்டியுள்ளார்கள் சிறீலங்கா கைக்கூலிகள்.

மேலும் அந்த இளைஞர் கைவிலங்கிடப்பட்டதுடன் தாக்கப்பட்டார். அதுமாத்திரமன்றி அவர் உயிரிழக்கும்போது பொலிஸ் காவலிலேயே வைக்கப்பட்டிருந்தார்.

"என்னுடைய சகோதரன் புதன்கிழமை இரவு சுமார் 10:30 மணியளவில் கைதுசெய்யப்பட்டதுடன் எங்களுடைய வீட்டிற்கு முன்னால் வைத்து கடுமையாகத் தாக்கப்பட்டார்.

பின்னர் அவன் உயிரிழந்துவிட்டதாக வியாழக்கழமை காலை அறிவிக்கின்றனர்" என்று உயிரிழந்த சந்திரன் விதுஷனின் சகோதரி தெரிவித்துள்ளார்.






# கனடாவில் பூர்வீககுடிகளின் 251 சிறுவர்களின் உடல்கள் மீட்பு










மே 29

கனடாவில் பூர்வீககுடிகளின் சிறுவர்களிற்கான பாடசாலை யொன்று முன்னர் இயங்கிய பகுதியில் 251 சிறுவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளதாக அதிகரிகள் தெரிவித்துள் ளனர்.

2015 இல் வெளியான விசாரணை முடிவுகளின் போது இது குறித்த பல அதிர்ச்சிகரமான விடயங்கள் தெரியவந் தன.




1978இல் மூடப்பட்ட பாடசாலையின் Kamloops India Residential School in British Columbia மாணவர் களின் உடல்களே அவை என தெரிவித்துள்ள அதிகாரிகள் நிலத்திற்குள் அடியில் உள்ளவற்றை கண்டுபிடிக்கும் ராடார் நிபுணர் ஒருவரின் உதவியுடன் அவற்றை கண்டு பிடித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

சிறுவர்களின் உடல்கள் மீட்கப்பட்டுள்ளமை தனது இதயத்தை நொருங்கச் செய்துள்ளது என டுவிட்டரில் பதிவிட்டுள்ள கனடா பிரதமர் ஜஸ்டின் ட்ருடோ எங்கள் நாட்டின் வரலாற்றின் இருள் படிந்த வெட்கக்கேடான வரலாற்றை இது நினைவுபடுத்தியுள்ளது என குறிப்பிட்டுள்ளார்.

கனடாவில் மிக நீண்டகாலமாக பூர்வீககுடிகளின் பிள்ளைகளை பெற்றோரிடமிருந்து பலவந்தமாக பிரித்து காடசாலையொன்றில் தங்கவைத்து கல்வி கற்பிக்கும் முறை காணப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இந்த பாடசாலைகளில் கல்விகற்ற 150,000 சிறுவர்கள் உடல்ரீதியான துஸ்பிரயோகங்கள், பாலியல் வன் முறைகள், போசாக்கின்மை உட்பட பல அவலங்களை சந்தித்தமை இந்த விசாரணையின் போது தெரியவந்தது குறிப்பிடத்தக்கது.

1840 முதல் 1990 வரை கிறிஸ்தவ தேவாலயங்கள் ஓட்டா வாவின் சார்பில் இந்த பாடசாலைகளை இயக்கிவந தன.

இந்த பாடசாலைகளில் கல்விகற்றுக்கொண்டிருந்த 4100 மாணவர்கள் உயிரிழந்தமையும், இந்த விசாரணைகளில் தெரியவந்தது.

2008 இல் கனடா இந்த நடவடிக்கைகளிற்காக மன்னிப்பு கோரியது. தற்போது மீட்கப்பட்டுள்ள 215 பூர்வீககுடிகளின் சிறுவர்களின் உடல்கள் குறித்த விபரங்கள் இந்த அறிக்கையில் இடம்பெற்றிருக்காது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# ஒன்றாறியோவில் பள்ளிகள் 2021 இலையுதிர் காலம் வரை மூடப்பட்டிருக்கும்

ஒன்றாறிவோவில் வேகமாகப் அதிகரித்துவரும் B.1.617.2 வகையான கொரோணா திரிபு தொற்றிலிருந்து மக்களைக் காக்கும் வகையிலும், அதிகளவிலான மாணவர்கள் பள்ளிப் பணியாளர்கள் மற்றும் குடும்பங்கள் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதற்கான கால அவகாசத்தை வழங்கும் பொருட்டும். மாநிலமெங்குள்ள சிறுவர் பள்ளிகள் மற்றும் உயர்பள்ளிகளின் மாணவர்களுக்கு தொடர்ந்தும் மெய் நிகரூடான வகுப்புகளை எதிர்வரும் 2021 இலையுதிர் காலம் வரை நடத்துவதென்ற கசப்பான முடிவினை ஒன்றாறியோ அரசாங்கம் எடுத்துள்ளது. இம்முடிவானது தடுப்பூசி வழங்குவதை விரைவுபடுத்துவதில் கவனம் செலுத்தவும், கோடைகாலத்தினைப் பாதுகாப்பானதாக வைத்திருக்கவும், வருகின்ற செப்டெம்பரில் ஆரம்பிக்கும் 2021-2022 கல்வியாண்டில் மாணவர்கள் வகுப்புகளுக் குத் திரும்பவும் உதவியாக அமையும்.

உளநலம் சார்ந்த சவால்களை எதிர்கொள்ளும் அல்லது அவற்றுக்கான சர்தியக்கூறுகளையுடைய மாணவர் களுக்கு பாதுகாப்பான திட்டங்களை கல்விச்சபைகள் தொடர்ந்தும் வழங்கும். இத்திட்டமானது மெய்நிகரூடான அல்லது நேரடியான சேவைகளையுள்ளடக்கிய பாடசாலை, சிறுவர் மற்றும் இளையோர் உளநல சமுக சேவைகளை வழங்குவோர் அல்லது பிதேச சுகாதார சேவை வழங்குனர்கள் ஊடாக தொடர்ந்தும் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும். மெய்நிகர் வகுப்புகளில் கற்க முடியாத விசேட தேவைகள் உள்ள மாணவர் களுக்கென ஜூன் இறுதிவரை பாடசாலைகள் திறந்திருக் கும். மாணவர்கள், பெற்றோர்கள் மற்றும் குடும்பங்கள் தமக்கான உளநல சேவைகளை மாநிலத்தில் ஒவ்வொரு நாளும் 24 மணிநேர ஆலொசனைகள் மற்றும் பரிந்துரைகள் போன்ற சேவைகளை வழங்கக்கூடிய கல்விச்சபைகள், சிறுவர்களுக்கான உதவி தொலைபேசி சேவை மற்றும் பிற சேவை வழங்கநர்கள் மூலமாகவும் பெற்றுக்கொளள்க்கூடியதுடன், ஒன்றாறியோ பாடசாலை உளநல சேவை மற்றும் மாநில சிறுவர் மற்றும் இளை யோர் உளநல சேவை முகவர்களினூடாக கிடைக்கும் சேவைகளையும் பெற்றுக்கொள்ளலாம்.

ஒன்றாறியோ அதன் உளவள சுகாதார சேவைகளை விரிவுபடுத்துகிறது.

சிறப்பு உளவள சிகிச்சை சேவைகளுக்கென மக்கள் அணுகும் துறைகளை மேம்படுத்துவதற்கு ஒன்றாறியோ அரசாங்கம் 31 மில்லியனுக்கும் அதிகமான தொகையை வழங்குகிறது. இது, மேற்படி சேவைகளுக்கென காத்தருக் கும் காலத்தினை குறைப்பதுடன் கோவிட் - 19 நோய்த் தொற்றுக் காலத்தில் சிறுவர் மற்றும் இளையோர் உள ஆரோக்கியத்ததை மேம்படுத்தவும் உதவும். இந்நிதி யானது மக்களின் ஆரோக்கியத்துக்கெனவும், சில பழுங்கங்களுக்கு அடிமையான ஒன்றாறியோவிலுள்ள அனைத்து வயதினருக்குமான விரிவான ஒன்றிணைந்த உளநல திட்டத்துக்கெனவும் அரசாங்கத்தினால் எதிர்வரும் 10 ஆண்டுகளுக்கு உறுதியிளித்த 3.8 பில்லியன் நிதியுதவியின் ஒரு பகுதியாகும்.

விஜய் தணிகாசலம், மாநில
சட்டமன்ற உறுப்பினர்
ஸ்காபரோ - றூஜ் பார்க்.



# ஒன்றாறியோ மாநிலம் மீளியங்கு நிலைக்குத் திரும்புவதற்கான திட்டத்தின் முதலாவது கட்டத்துக்கு நகர்கிறது – யூன் 10



மாறில அளவில் வழங்கப்பட்டுள்ள தடுப்பூசி வீதம் மற்றும் கிடைக்கப்பெற்றுள்ள பொது சுகாதார தரவுகளின் முன்னேற்றங்களின் அடிப்படையிலும், சுகாதார தலைமை அதிகாரியுடனான ஆலொசனையின் பின்னர் எடுக்கப்பட்ட முடிவுகளின் அடிப்படையிலும் 11 யூன் 2021 நள்ளிரவு 12.01 மணிக்கு ஒன்ராறியோ அரசாங்கம் மாநிலத்தின் செயற்பாடுகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கான முதலாம் கட்ட நிலைக்கு நகர்த்தப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி, இதன் முதற்கட்டத்தின் ஒரு பகுதியாக நோய்ப்பரம்பலுக்கான சாத்தியக்கூறுகள் குறைவாகக் காணப்படும் வெளிப்புற நடவடிக்கைகள் மற்றும் வெளியரங்குகளில் சிறு அளவிலான ஒன்றுகூடல்களை மீண்டும் ஆரம்பிப்பதில் கவனம் செலுத்தப்படும். அத்துடன் கட்டுப்பாடுகளுடன்கூடிய வரையறைகளுக்கு உட்பட்டு உள்ளக இடங்களை மீளத் திறப்பதற்கும் அனுமதி வழங்கப்படும்.

சுகாதார தலைமை அதிகாரியுடனான கலந்துரையாடலின் அடிப்படையில், ஒன்றாறியோ அரசு முதலாம் கட்ட மீள ஆரம்பிக்கும் திட்டத்தின்படி திருமணம், இறுதிச் சடங்குகள் போன்ற உள்ளரங்கத்தில் நடைபெறும் மத வழிபாடுகள், சடங்குகள் மற்றும் விழாக்களை கட்டடம் ஒன்றின் உள்ளடக்கத்திறனின் 15 வீதம் வரையான மக்களுடன் நடத்துவதற்கு அனுமதி அறிக்கப்படும்.

மீளத் திறப்பதற்கான திட்டத்தின்படி பின்வருவனவும் இவற்றில் அடங்கும்:

- வெளியரங்க சமுக மற்றும் பொது ஒன்றுகூடல்களில் 10 நபர்கள் வரை பங்குகொள்ளலாம்,

- திருமணம் மற்றும் இறுதிச் சடங்குகள் உள்ளிட்ட வெளியரங்க மத வழிபாடு, சடங்குகள் அல்லது விழாக்கள் போன்றவற்றில் இரண்டு மீட்டர் தனிநபர் இடைவெளியினை கடைப்பிடிக்கக்கூடிய அளவில் மக்கள் ஒன்றுகூடலாம்,

- திருமணம் மற்றம் இறுதிச் சடங்குள் உள்ளிட்ட உள்ளரங்க மத வழிபாடு, சடங்குகள் அல்லது வழிாக்கள் போன்றவற்றில் மண்டபத்தின் உள்ளடக்கத்திறனின் 15 வீதம் வரையிலான மக்கள் கலந்து கொள்ளலாம்,

- அத்தியாவசியமற்ற பொருள் விற்பனை நிலையங்கள் அவற்றின் உள்ளடக்கத்திறனின் 15 சதவீதம் வரையான மக்களுடன் திறப்பதற்கு அனுமதிக்கப்படும். விற்கப்படும் பொருட்களுக்கு எவ்வித தடையும் கிடையாது.

- அத்தியாவசிய மற்றும் குறிப்பிட்ட சில சிலலறை விற்பனை நிலையங்கள் அவற்றின் உள்ளடக்கத்திறனின் 25 சதவீதம் வரையான மக்களுடன் திறப்பதற்கு அனுமதிக்கப்படும். விற்கப்படும் பொருட்களுக்கு எவ்வித தடையும் கிடையாது.

- வெளியரங்க உணவகங்களில் ஒரு மேசைக்கு நால்வர் விகிதம் உணவருந்தலாம். அதிக நபர்களை உள்ளடக்கிய குடும்பங்களுக்கு வதிவிலக்கு உள்ளது.

- வெளியரங்க உடற்பயிற்சி வகுப்புக்கள், வெளியரங் கிலான தனிப்பட்ட அல்லது குழு பயிற்சி அல்லது விளை யாட்டுப் பயிற்சி போன்றவற்றை 10 வரையான நபர் களுடன் நடத்த அனுமதி உண்டு,

- சுகாதார தலைமைச் செயலகத்தினால் வழங்கப்பட்ட கோவிட் -19 பாதுகாப்பு வழிமுறைகளுக்கமைய சிறுவர் களுக்கான ஒருநாள் வெளித்தங்கல் முகாம்களுக்கு அனுமதி வழங்கப்படுகிறது,

- வெளித்தங்கல் முகாம் மைதானங்கள் அவற்றுக்கான பிரதேசங்களில் இரவு வெளித்தங்கல் முகாம்கள், பூங்காக்கள் மற்றும் குறகிய கால வாடகை தொடர் பானவைக்கும் அனுமதி வழங்கப்படுகிறது,

- இசைக் கச்சேரி அரங்குகள், நாடக அரங்குகள், திரையரங்குகள், முன்கூட்டியே பதிவுசெய்யப்பட்ட அல்லது திரையிடப்படும் காலை நிகழ்ச்சிகள், 10 இற்கு உட்பட்ட கலைஞர்களைக் கொண்ட ஒத்திகை அல்லது காலை நிகழ்ச்சிகளை கட்டுப்பாட்டு விதிமுறைகளைப் பின்பற்றி வெளியரங்குகளில் நடத்தலாம்,

- பார்வையாளர்கள் பங்குபெறாத குதிரைப் பந்தய மைதானங்கள், அதிவேக வாகன போட்டி மைதானங்கள் திறப்பதற்கு அனுமதி,

- மிருகக்காட்சிசாலைகள், வரலாற்று கட்டடங்கள், மையங்கள், இடங்கள், தாவரவியல் பூங்காக்கள் போன்ற வெளியரங்க பகுதிகளுக்கு கட்டுப்பாடுகளுடன் அனுமதி வழங்கப்படுகின்றது,

- பொது சுகாதார அமைப்பின் தரவுகளின் அடிப்படையில் ஏதேனும் முக்கிய பாதிப்புகள் ஏற்படுகின்றனவா என்பதனை மதிப்பீடு செய்வதற்கான காலமாக இந்த முதலாம் கட்டத்தின் 21 நாட்களும் அமைந்திருக்கும்.

- 21 நாள் காலப்பகுதியின் முடிவில் மாநிலத்திலுள்ள வயது வந்தவர்களில் 70 வீதமானவர்கள் முதலாவது தடுப்பூசியையும், 20 வீதமானவர்கள் இரண்டாவது தடுப்பூசியையும் பெறு:ம், பொது சுகாதார தரவுகளில் முன்னேற்றம் ஏற்பட்டிருப்பின், மாநிலம் இரண்டாம் கட்டத்தை நோக்கி நகரும்.

- மாநிலம் யூன் 11 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நள்ளிரவு 12:01 மணிக்கு அடுத்த கட்டத்துக்கு நகரும் வரை மாநிலத்தில் தற்போதுள்ள கட்டுப்பாட்டு விதிமுறைகள் அனைத்தும் அப்படியே இருக்கும்.

- இக்காலகட்டத்தில் குிறப்பிட்ட துறைகள், நிறுவனங்கள் மற்றும் பிற அமைப்பு போன்றவை மீளத்திறக்கும் திட்டங்கள் தொடர்பான செயற்பாடுகளில் அரசு தொடர்ந்து அவற்றுடன் இணைந்து செயலாற்றும் என்பதுடன் அவற்றையும் உறுதிப்படுத்தும்.

நன்றி - விஜய் தணிகாசலம், மாநில சட்டமன்ற உறுப்பினர், ஸ்காபரோ – றூஜ் பார்க்

# புதிய 09 ஆம் வகுப்புக்கான கணித பாடத்திட்டம்

அனைத்து மாயவர்களும் கல்வியில் சிறந் து விளங்குவ தற்கும் வெற்றி பெறுவதற்கும் தேவையான திறமையை யும் நம்பிக் கையையும் வளர்த்துக்கொள்ளவதை உறுதிப்படுத்துவற்கு வேண் டிய புதிய 9ஆம் வகுப்புக்கான கணித பாடத்தினை கல்வி அமைச்சர் ஸ்டீபன் செச்சே வெளியிட்டு வைப்பதாக அறிவித்தார். வருகின்ற செப்டெம்பரின் வரவிருக்கும் மேற்படி புதிய பாடத்திட் டமானது, குறிப்பாக பின்வருவனவற்றில் மாணவர்களின் வாழ்க்கைக்கு உகந்த கற்றல் வாய்ப்புகளை வழங்கும் நோக்கினைக் கொண்டிருப்பதுடன், வேலைவாய்ப்புகளில் அவர்களின் வெற்றிக்கும் உறுதுணையாக அமையும்.

- குறியீட்டு முறை, தரவுகளின் அடிப்படையிலான கல்வியறிவு, கணித மாதிரிகள் மற்றும் நிதியியல் தொடர்பான கல்வியறிவு போன்றன புதிய பாடத்திட் டத்தின்படி கட்டாயமாக அமையவுள்ளன.

- 9ஆம் வகுப்பு மாணவர்களுக்கு இதுவரையும் பயன்பாட்டுக் கல்வி மற்றும் படிப்பில் நடைமுறையிலிருந்த Streaming முறைமை முடிவுக்குக் கொண்டுவரப் பட்டுள்ளது. இம்முறைமையானது சடந்த காலத்தில் சில மாணவர்களுக்கு பாதகமானதாக அமைந்திருந்தது.

இப்புதிய பாடத்திட்டம் ஒன்றாறியோவில் உள்ள மாணவர் கள் கடந்த ஒரு தசாப்த காலத்தில் எதிர்கொண்ட பின்னடைவினை சரிசெய்வதற்காக அரசாங்கத்தினால் போடப்பட்டுள்ள அடுத்த நான்கு ஆண்டுகளுக்கான 200 மில்லியன் டொலர் கணிதத்துக்கான மூலதனத்தின் அடுத்த கட்டமாகும். கோடைகால கற்பித்தல், பயிற்சி மற்றும் கல்வியாளர்களுக்கான பயிற்சி, அவற்றுக்கான உபகரங்களுக்கான வளங்களை அளிப்பது போன்றவை உட்பட கணிதக் கல்விக்கான மேலதிக நிதியினை அரசாங்களம் அளித்துள்ளது.



## சமாதானம், புனர்வாழ்வுக் கழகம் – கனடா விடுக்கும் அறிவித்தல்

PEACE AND REHABILITATION ORGANIZATION

Canada

வணக்கம் தமிழ் உறவுகளே!

எமது அமைப்பின் இன்னுமொரு நீண்ட கால செயல்திட்டமாக நவீன தொழில்நுட்ப பாடத்திட்டங்கள் மற்றும் உயர் தொழில் நுட்ப நூலகத்தை (Virtual + Real) உள்ளடக்கிய தொழில் நுட்ப கல்லூரியின் உருவாக்கம்.

இடம்: கிளிநொச்சி அல்லது முல்லைத்தீவு (வடகிழக்கு மாணவர்கள் வந்து செல்ல மையப்படுத்திய இடமாக இருக்கும்)

பெரிய கட்டத்தை வாங்கியோ வாடகைக்கு எடுப்பதை தவிர்த்து பாடசாலைகளில் (After Hrs)கட்டத்தை எடுத்து நடத்துவதன் மூலம் பணத்தை மீதப்படுத்துவதோடு மாணவர்களின் பாதுகாப்பு மற்றும் ஏதாவது தவறான நடவடிக்கைகள் நிகழ்வதை தவிர்க்க் கூடியதாக இருக்கும்.

இந்த வருட இறுதிக்குள் ஒரு Computer Center மற்றும் உயர் தொழில்நுட்பம் சார்ந்த நூலகள் கொண்ட நூலகம் உருவாக்கப்படும். வரும் காலங்களில் ஏனைய பாடத் திட்டங்கள் சேர்க்கப்படும்.(Computer Science & Technology, Engineering, Aviation Space Science & Medicine...)

இவை உள்ளூர் மற்றும் சர்வதேச ஆசிரியர்களால் நேரடியாக மற்றும் Virtualமுறையில் கற்பிக்கப்படும்.

5ஆம் தரத்தில் இருந்து பல்கலைக்கழக புதுமுக மாணவர்கள், பல்கலைக்கழக மாணவர்கள் உட்பட அனைவருக்கும் தேவையான பாடத்திட்டங்களுக்கு இந்த கல்லூரி உதவிபுரியும். உலக தொழில் நுட்ப கல் லூரிகளுடன் தொடர்பு ஏற்படுத்தி கொள்ள உதவி புரியும்.

பயனாளிகள்: போரினால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்கு மாணவர்கள்.

இதற்கான Budget & Planning என்பன விரைவில் வகுக்கப்பட்டு முன்னதாக குறிப்பிட்ட படி இந்த வருட இறுதிக்குள் Computer Center & Library உருவாக் கப்படும்.

இடம், கருவிகள், உபகரணங்கள், புத்தகங்கள் என்பன வெவ்வேறு அமைப்புகளாலும் தொண்டர் ஆசிரியர் களாலும் உருவாக்கப்படுவதையே விரும்புகிறோம். இதன் மூலம் நிதிப்பிரச்சனை அதிகம் இன்றி நீண்ட காலம் இதில் பயணிக்க முடியும்.

இந்த பெரும் பணியில் நிங்களும் இணைந்து உதவி செய்ய முன்வருங்கள், வரலாறு படைப்போம் – நன்றி

தொடர்புகளுக்கு: 647.267.0763

# தமிழக செய்திகள்



# தமிழைப் புறக்கணித்துவிட்டு சீன மொழியை உட்புகுத்துவதா? -சீமான் கண்டனம்-



இலங்கையின் அலுவல் பணிகளிலும், கடவுச்சீட்டிலும் தமிழைப் புறக்கணித்துவிட்டு சீன மொழியை உட்புகுத்துவதா? என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கண்டனம் தெரிவித்தள்ளார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது, “ இலங்கையின் அலுவல் பணிகளிலும், அரசின் செயல்பாடுகளிலும், நாட்டின் கடவுச்சீட்டிலும் தமிழை முற்றாகப் புறக்கணித்துவிட்டு சீன மொழியை உட்புகுத்தி வரும் சிங்களப் பேரினவாத அரசின் செயல்கள் அதிர்ச்சியளிக்கின்றன. இலங்கையின் அதிகாரப்பூர்வ அலுவல் மொழிகளாக சிங்களத்தோடு தமிழும் இருக்கும் நிலையில் தமிழ் மொழியை முழுவதுமாக நிராகரித்து, இன ஒதுக்கல் கொள்கையைக் கடைப்பிடிக்கும் இலங்கை அரசின் இனத்துவேசப்போக்கு வன்மையான கண்டனத்திற்குரியது.

சீனாவின் நிதியுதவியுடன் இலங்கையில் முன்னெடுக கப்படுகின்ற கொழும்பு துறைமுக நகர் திட்டத்திலுள்ள பெயர் பலகைகளில் தொடங்கி நாட்டின் கடவுச்சீட்டு வரை எல்லாவற்றிலும் சிங்களம், சீனம், ஆங்கிலம் ஆகிய மொழிகளுக்கு இடமளித்து, தமிழ் மொழியை மட்டும் திட்டமிட்டுப் புறக்கணித்த வருவது தமிழர்களிடம் கடும் கொந்தளிப்பையும், பெருஞ்சினத்தையும் ஏற்படுத்தியிருக்கிறது. இலங்கையின் பூர்வக்குடி மக்களான தமிழர்களை உரிமை, உடைமை, நிலவுரிமை, அதிகாரம், அரசாட்சி என எல்லாவற்றிலிருந்தும் முற்றுமுழுதாக வெளியேற்றி, சிங்களத்தேசமாக இலங்கையை ஒற்றை மொழியாதிக்கத்தின் கீழ் நிறுவிக்கொண்டிருக்கும் சிங்கள வெறியர்களின் கொடுங்கோல் நடவடிக்கைகளைத் தட்டிக்கேட்காது சர்வதேசச்சமூகம் கள்ளமௌனம் சாதித்து வருவது ஆற்ற முடியாத பெரும் வலியைத் தருகிறது. பயங்கரவாதத்திற்கு எதிரான போர் எனப் பொய்யுரைத்து, தமிழின மக்களை மொத்தமாக அழித்தொழித்து, இனவெறியாட்டமிடுகிற இலங்கை அரசின் அரசப்பயங்கரவாத நடவடிக்கைகள் யாவற்றிற்கும் முழு ஆதரவளித்து, துணைநின்ற உலகப்பேரரசுகள் யாவும், எம்மின மக்களுக்கு இழைக்கப்படும் இத்தகைய அநீதிகளை வேடிக்கைப் பார்த்துக்கொண்டிருப்பது இந்நூற்றாண்டின் பெருந்துயரமாகும். இவ்வாறு பன்னெடுங்காலமாக நடந்து வரும் இலங்கை அரசின் தொடர் அட்டூழியங்களும், அடக்குமுறைகளும் ஒன்றிணைந்து இலங்கைக்குள் சிங்களவர்களோடு தமிழர்கள் சம உரிமையுடனும், சகோதரத்துவத்துடனும் ஒரு மித்து ஒரு நாளும் வாழ முடியாது என்பதையே அறுதியிட்டுக் கூறுகின்றன. மொழிப்புறக்கணிப்புக்கெதிராக, ‘மொழி ஒன்றானால் நாடு இரண்டாகிப்போகும்’ என தந்தை செல்வா அவர்கள் முன்வைத்த பெரு முழக்கமும், அதனையொட்டி முன்னெடுக்கப்பட்ட அறப்போராட்டமுமே பின்னாளில், காலத்தின் தேவையாய், வரலாற்றின் பிரசவிப்பாய் விடுதலைப் புலிகளின் ஒப்பற்ற விடுதலைப்போராட்டமாகப் பரிணமித்து எனும் வரலாற்றுப்பேருண்மையை சிங்கள இனவெறி ஆட்சியாளர்களுக்கும், உலகத்தார்க்கும் நினைவூட டுகிறேன். தமிழும், தமிழர்களும் ஒதுக்கப்பட்டுப் புறந்தள்ளப்பட்டு வரும் அதேவேளையில், சீனாவின் அதீத ஆதிக்கமும், அதிகப்படியான அத்துமீறலும் இலங்கையில் வெளிப்படையாக நிகழ்ந்தேறுவது இந்தியாவின் இறையாண்மைக்கும், பாதுகாப்புக்கும் பேராபத்தாக முடியும் என்றுரைக்கிறேன்.

இலங்கையில் சீனாவின் ஆதிக்கம் அதிகரித்து வருவது குறித்துக் கவலை தெரிவித்துள்ள தமிழ்நாடு காங்கிரசு கட்சியின் தலைவர் ஐயா கே. எஸ். அழகிரி, 136 கோடி மக்கள் மொகையைக் கொண்ட வல்லரசு நாடுகளில் ஒன்றான இந்தியாவை இலங்கை உதாசீனப்படுத்தி வருவதாகக் குறிப்பிட்டிருக்கிறார். இதைத்தானே நாங்கள் தொடக்கத்திலிருந்தே கூறி வருகிறோம். சிங்களர்களும், சிங்கள ஆட்சியாளர்களும் எந்நாளும் இந்தியாவின் பக்கம் நிற்க மாட்டார்கள் என்பதை வரலாற்று ரீதியாகவும், தர்க்க ரீதியாகவும், அறுதியிட்டுக் கூறி எச்சரித்து வருகிறோம். அப்போதெல்லாம் மகிந்தா ராஜபக்சேவோடு ஒட்டி உறவாடி தமிழர்களை அழிக்க வட்டியில்லா கடனாகப் பல்லாயிரம் கோடிகளைக் கொட்டிக்கொடுத்து, போர் ஆயுதங்களையும், இராணுவத்தளவாடங்களையும் அனுப்பி வைத்து, உலகளாவிய அளவில் நாடுகளிடையே ஆதரவு வட்டத்தை உருவாக்கி ஈழப்பேரழிவை நிகழ்த்தி முடிக்க உறுதுணையாக நின்று தமிழர்களை அழித்தொழித்த காங்கிரசு கட்சி, இன்றைக்கு இலங்கையின் சீன உறவு குறித்துத் திருவாய் மலர்ந்தருளுவது வெட்கக்கேடானது.

தமிழ் மொழியை புறக்கணித்துவிட்டு, தமிழர் வழிப்பாட்டுத்தலங்களை பௌத்த விகாரைகளாக மாற்றிவிட்டு, தமிழர்களின் நிலங்களை சிங்களமயமாக்கிவிட்டு, தமிழர்களின் உரிமைகளைப் பறித்துவிட்டு ஒட்டுமொத்த நாட்டையும் சிங்களர்களின் தேசமாக மாற்ற முயலும் இலங்கை அரசின் சதிச்செயலையும், இனவெறி நடவடிக்கைகளையும் இனிமேலாவது பன்னாட்டுச்சமூகமும், அனைத்துலக நாடுகளும் உணர்ந்துகொள்ள வேண்டும். தமிழ்த்தேசிய இனம் இலங்கை எனும் நாட்டுக்குள் எந்தளவுக்கு நிராகரிக்கப்பட்டு ஒடுக்கப்படுகிறது என்பதற்கு இதைவிட வேறு சான்று தேவையில்லை. ‘அடுத்தவர் சுதந்திரத்திற்காக நீ போராடாவிட்டால் நாளை உன் சுதந்திரம் கேள்விக் குறியாகும்’ என்கிறார் ஹோசே மார்த்தி. இன்றைக்கு சுதந்திரம் பறிக்கப்பட்டு, தமிழ்த்தேசிய இனம் அடிமைப் படுத்தப்படும்போது மற்ற தேசிய இனங்கள் வேடிக்கைப் பார்த்து நின்றால், நாளை இதேபோல் ஒரு இழிநிலை ஒவ்வொரு தேசிய இனத்திற்கும் வருமென்பதை உணர்ந்துகொண்டு தமிழர்களின் பக்கம் நிற்க வேண்டுமெனக் கோருகிறேன்.

இன்றைக்கு எங்களது தாய் நிலத்திலேயே எங்களது தாய்மொழி தமிழ் புறக்கணிக்கப்பட்டு, இரண்டாம் தரக் குடிமக்களாக தமிழர்கள் நாங்கள் மாற்றப்பட்டு, ஒன்றும் செய்யவியலாக் கையறு நிலையில் உலகத்தின் முன் நிற்கலாம். காலம் மாறும். ஒருநாள் களம் மாறும். அதிகாரம் எங்கள் கைவரப்பெறும். அன்றைக்கு எங்களுக்கு இழைக்கப்பட்ட அநீதிகள் எல்லாவற்றிற்குமான எதிர்வினையை சிங்களப்பேரினவாதம் உறுதியாக எதிர்கொள்ள நேரிடும் என எச்சரிக்கிறேன். இன்றைக்கு எங்களுக்கு இழைக்கப்படும் அநீதிகளை வாய்மூடி வேடிக்கைகப் பார்க்கும் சர்வதேசச் சமூகம் அன்றைக்கும் இதேபோல அமைதியைக் கடைப்பிடித்து இதேபோன்றதொரு நிலைப்பாட்டைக் கொண்டிருக்க வேண்டுமென விரும்புகிறேன்” இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

# தமிழக அகதி முகாமில் இருந்து...

33 ஆண்டு காலத்திற்கும் மேலாக அகதி என்ற அடையாளத்தடன் தமிழக, இந்திய முகாம்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இவ்வித அகதி வாழ்க்கை என்னை போன்ற புலம் பெயர்ந்த ஈழத் தமிழர்களுக்கு மிகுந்த வலியையும் அவமானத்தையும் பெற்று தந்திருக்கிளது.

இம்மாதிரியான அடிமை வாழ்க்கை என்னுடன் முடியட்டும். என் பிள்ளைக்கு அகதி வாழ்கை வேண்டாம்.

நான் ஈழத்தில் பிறந்தால் அகதியாக்கப்பட்டேன். ஆனால் இந்திய மண்ணில் பிறந்த என் பிள்ளை என்ன தவறு செய்தது?



என் பிள்ளை ஏன் அகதியென்ற அவமானத்துடன் வாழ்கிறது இந்திய மண்ணில் நாங்களும் சுயமரியாதையுடன் வாழ குடியுரிமை தர வேண்டும்

எங்கள் தலைமுறைகள் உங்களைப் போற்றும். முகாமில் 33 வருடமாக வாழும் ஓர் அகதியின் குரல்.

நன்றி தமிழக அகதி முகாமில் இருந்து.

[redacted]

# தமிழ் நாட்டில் அகதி முகாங்களில் வாழும் ஈழத் தமிழர்களுக்கு “ இரட்டைக் குடியுரிமை” வழங்குங்கள்

## திருச்சி சிறப்பு முகாமை இனியாவது நிரந்தரமாக இழுத்து மூடுங்கள்

சொல்லுக்குமுன் செயல்

தமிழ்ப் பேரரசு கட்சி

முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு வ. கௌதமன் கோரிக்கை.

1981 ஆம் ஆண்டு ஈழத்தழிழல்களின் அறிவுக் களஞ் சியமான யாழ் நூலகம் எரிக்கப்பட்டது. அதனைத் தொடர்ந்து, 1983ஆம் ஆண்டு, ஜுலை தமிழ் இன அழிப்பு, சிங்கள அதிகார வர்க்கத்தினரால் திட்டமிட்டு பல்லாயிரக் கணக்கான உயிர்கள் பறிக்கப்பட்ட நிலையில், உயிர் பிழைக்க உலகம் முழுக்க சிதறியது ஈழத் தமிழினம். ஏறத்தாழ ஒரு இலட்சத்திற்கும் வேற்பட்டவர்கள், நம் தாய்த் தமிழ் நாட்டில் தஞ்சம் அடைந்தார்கள். மூன்று தலை முறைகளுக்கும் மேலாக, நம் தமிழ் நாட்டில் வாழ்ந்து கொண்டிருக்கும் அவர்களுக்கு, தமிழ்நாட்டின் முதல்வர் இனியும் காலம் தாமதிக்காமல், “இரட்டை குடியுரிமை” வழங்க வேண்டுமென்று தமிழ்ப் பேரரசு கட்சியின் சார்பாக உரிமையுடன் கேட்டுக் கொள்கிறேன்.

ஏறத்தாழ 40 ஆண்டுகளாக, நம் தமிழ் மண்ணில் அகதிகளாக வாழ்ந்து கொண்டிருக்கும் அவர்களில், 70 ஆயிரம் பேர் அகதிகள் முகாம்களிலும், 30 ஆயிரம் பேர் அரசாங்கத்தில் பதிந்து, வெளியில் வீடு எடுத்தும் தங்கி இருக்கிறார்கள். அமெரிக்கா, கனடா, லண்டன், மற்றும் ஐரோப்பிய நாடுகளில் புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் எத்தனையோ பேர் அந்நாட்டின் உயர் பதவிகளை அலங்கரிக்கிறார்கள், பாராளுமன்ற உறுப்பினர்களாக இருக்கிறார்கள். ஆனால் இங்கிருப் பாவ்களில் ஒருவர் கூட, உயர்படிப்பு படித்தோ அல்லது படித்த படிப்பிற்கான மதிப்பில் அரசாங்கத்திலோ அல்லது தனியார் நிறுவனங்களிலோ இதுவரையில் வேலைக்கு செல்ல முடியவில்லை. அதற்கு காரணம் இந்திய ஒன்றிய அரசின் மாற்றாந்தாய் மனப்பான்மைதான். திபெத்திய அகதிகளுக்கு கிடைக்கக் கூடிய சலுகைகள் கூட ஈழத்தமிழர்களுக்கு கிடைக்கவிடாமல் மறுக்கப்படுகிறஉ.

சிங்கள அதிகார வர்க்கத்தின் திட்டமிட்ட இன அழிப்புக்கு பிறகு அவர்கள் இன்னும் கூடுதலான வலிசுமந்த வாழ்க்கையைத்தான் நம் தமிழ்நாட்டிலும் வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். ஈழத் தமிழ்ச் சொந்தங்கள், இந்திய ஒன்றிய அரசு எங்கள், “தந்தையர் தேசம்”, தமிழ்நாடு எங்கள் “தொப்புள்கொடி” உறவுகள் வாழ்கின்ற தாய்மடி என நம்பி வந்தவர்கள். ஆனால் இன்றுவரை வாழ வழியற்று நின்று கொண்டிருக்கிறார்கள். தி.மு.க. வின் தேர்தல் அறிக்கை வாக்குறுதியின்படி அவர்களுக்கு இரட்டை குடியுரிமை வழங்குவது மட்டுமே, இருண்டு கிடக்கும் அவர்களின் வாழ்வின் மீதமுள்ள காலத் தையாவது அழகானதொரு வாழ்க்கையாக வாழ காரணமாக அமையும்.

இராஜபக்சேவின் கொடூர சித்திரவதை முகாம்கள் உலகம் அறிந்ததே. ஏறக்குறைய அந்த முகாம்களுக்கு இணை யானது தான் திருச்சி சிறப்பு முகாம். யுத்தம் முடிந்து எத்தனையோ ஆண்டுகள் கடந்தும் கூட இன்றும் அந்த முகாம் தமிழ்நாட்டில் நிலைகொண்டிருப்பது வேதனை யிலும் பெரும்வேதனை. போரில் மாண்டது போக, தஞ்சம் தேடி ஓடி வந்த தாய்த் தமிழ்நாட்டிலும் அவர்களை அடைத்து வைத்து, அவர்களின் பெற்றோர், மனைவி, குழந்தைகள் மற்றும் எறவுகளோடு கூடி வாழ முடியாத ஒரு சூழலை உருவாக்கி, சிறப்பு முகாம் என சிறையில் அடைத்து வைத்திருப்பது எத்தகைய அறம்?

110 பேர் கொண்ட அந்த சிறப்பு முகாமில், 80 பேர் ஈழத் தமிழர்கள். எத்தனையோ முறை தமிழ்நாட்டு தலைவர் களோடு, நாங்களும் இதற்கு முந்தியருந்த அரசாங்கத் திடமும், அதிகாரிகளிடமும் கோரிக்கை வைத்தும் கூட இன்னும் அந்த முகாம் மூடப்படாமல் சித்திரவதைக் கூடமாக இருக்கிறது. நீதிமன்றத்திற்கு இது வரை அழைத்துச் செல்லாமலும், நீதிமன்ற தீர்ப்புக்கு பிறகும் கூட சிலரை விடுதலை செய்யாமலும், அப்பாவி ஈழத் தமிழர்கள் அநேகம்பேர் அங்கு தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கிறார்கள். அதிலுள்ள கொடும் குற்றவாளி களுக்கு தமிழ்நாட்டின் மத்திய சிறைச்சாலைகளில் தண்டனை தந்து விட்டு, அப்பாவி ஈழத் தமிழர்களை முழுவதுமாக விடுவித்து தீரச்சி சிறப்பு முகாமை இனியாவது நிரந்தரமாக இழுத்து மூடுங்கள். இந் நிலையில் கூட அங்கு சிறைப்பட்டுக் கிடக்கும் 80 ஈழத் தழிர்களும் தங்களது உணவிற்கான பணத்தைச் சேமித்து, ரூ.18 ஆயிரத்தை, முதலமைச்சரின் கொரோனா பொது நிவாரண நிதிக்கு தங்களின் பங்களிப்பாக அனுப்பி வைத்திருக்கிறார்கள்.

அரசு ஒதுக்கியிருக்கும் அகதிகள் முகாம்களின் வீடு என்பது பத்தடிக்கு பத்தடி மண்குடிசை ஆகம். மழைக்க காலங்களில் சுவர் இடிந்தும், கூரை பறந்தும் நம் தமிழீழ உறவுகள், நம்முடைய தாய்த் தமிழ்நாட்டில் ஒவ்வொரு ஆண்டும் எண்ணற்ற உயிர்களைப் பலி கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள். மழைக்காலம் நெருங்கிக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் அவர்களுக்கு சிமெண்டாலான “கான்கிரீட்” தொகுப்பு வீடுகள் கட்டிக் கொடுத்து ஒரு பாதுகாப்பான வாழ்க்கை வாழ வழி செய்யுங்கள்.

ஈழத் தமிழர்களுக்கு இரட்டை குடியுரிமை பெற்றுத்தந்தும், தொகுப்பு வீடுகள் கட்டிக்கொடுத்தும், சித்திரவதை முகாம் என்கிற திருச்சி சிறப்பு முகாமை நிரந்தரமாக இழுத்து மூடி அதற்கு முற்றுப்புள்ளி வைத்தும் ஈழத்தமிழர்கள் வாழ்க் கையில் தாயுள்ளத்தோடு அழகானதொரு விளக்கேற்றி வைக்கும் படி, தமிழ்நாட்டின் முதல்வர் மு. க. ஸ்டாலின் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.




வ. கௌதமன்
பொதுச் செயலாளர்,
தமிழ்ப் பேரரசு காட்சி,
“சோழன் குடில்”

# சிறிலங்கா உளவுத்துறைனரால் அடித்து கொல்லப்பட்ட ஈழத்தமிழ் இளைஞர்! சிங்கள இனவெறி சிறிலங்கா அரசை வன்மையாக கண்டிக்கின்றோம்! – மே 17 இயக்கம்

மே 17 இயக்கம்

சிறீலங்கா ஆக்கிரமிப்பு தமிழீழ பகுதியான மட்டக்களப்பு அருகிலுள்ள கிழக்கு இருதயபுரத்தை சேர்ந்த சிந்திரன் விதூசன் என்ற 22 வயது ஈழத்தமிழ் இளைஞரை, புதன் (02-06-2021) இரவு சிறீலங்கா அரசின் உளவுப் பிரிவை சேர்ந்தவர் கள் கைது செய்து அழைத்து சென்று, இரவு முழுவதும் காவல்துறையினரால் அடித்தே கொல்லப் பட்டுள்ளார். சிங்கள இனவெறி அரசின் தமிழீழத் தமிழர்கள் மீதான இனப்படுகொலை நடந்து 12 ஆண்டுகள் ஆன பின்பும் நின்றுவிடவில்லை என்பதையே இச்சம் பவம் காட்டகிறது. சிங்கள பௌத்த இனவெறி அரசின் இந்த தாக்குதலை மே பதினேழு இயக்கம் வன்மையாக கண்டிக்கிறது.

புதன் இரவு 10:30 மணியளவில் சந்திரன் விதூசனின் நண்பர் தொலைபேசியில் அழைத்து வெளியே வரக் கூறியுள்ளார். வெளியே வந்த விதூசனை தெருவில் நின்றிருந்த சிலர் உளவுப்பிரிவை சேந்தவர்கள் என்று அடையாளப்படுத்திக் கொண்டு அவரை கைது செய்வதாக கூறியுள்ளனர். அப்போதே அவர் மீது தடிகளை கொண்டு கடுமையாக தாக்கியுள்ளனர். மட்டக்களப்பு காவல் நிலையம் கொண்டு செல்லப்பட்ட அவரை, காலையில் மருத்துவமனையில் அனுமதித்து பின்னர் உடல்நிலை சரியில்லாமல் இறந்துவிட்டதாக குடும்பத்தினருக்கு தகவல் தெரிவித்துள்ளனர்.

ஆனால் மட்டக்களப்பு காவல் நிலையம் கொண்டு செல்லப்பட்ட விதூசனை, காவல் துறையினர் இரவு முழுவதும் கடுமையாக தாக்கியுள்ளனர். இதனை அப்பகுதியை சேர்ந்நத மக்கள் உறுதிபடுத்துகின்றனர். காவல்நிலையத்திலேயே அடித்து கொல்லப்பட்டவரை உடல் நிலை சரியில்லாத காரணத்தினால் மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு இறந்துவிட்டதாக பொய்யான தகவலை குடும்பத்தினருக்கு தெரிவித் துள்ளனர். தற்போது அவரது உடல் உடற்கூராய்விற்காக மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ளது.




சந்திரன் விதூசன் என்ன காரணத்திற்காக கைது செய்யப்பட்டார், ஏன் உளவுத்துறையினர் ஈடுபட்டனர், ஏன் அடித்துக்கொள்ளப்பட்டார் போன்ற எந்த விவரங்களும் இதுவரை தெரியவில்லை. தமிழீழ இளைஞர்கள் மீதான இது போன்ற தாக்குதல் சம்பவங்கள் சிறீலங்காவில் தொட்ச்சியாக நடைபெற்று வருகிறத. குறிப்பாக இராஜபக்சே ஆட்சிக்கு வந்த பிறகு தமிழர்கள் மீதான தாக்குதல்கள் அதிகரித்துள்ளது. இது தமிழீழ இனப் படுகொலையின் நீட்சியே. 2009 ஆம் ஆண்டு தமிழீழ இனப்படுகொலைக்கான சர்வதேச நீதி விசாரணையை ஏற்படுத்தாமல், சிறீலங்காவின் சிங்கள இனவெறி அரசை காப்பாற்றிய சர்வதேச சமூகத்தின் தோல்வியே இதற்கு முதன்மை காரணமாக உள்ளது.

சந்திரன் விதூசன் கொலை மீதான நீதி விசாரனை நியாயமான முறையில் நடத்தப்படுவதை உறுதி செய்திட வேண்டும் என்றும், தமிழீழத் தமிழர்கள் மீதான தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்பட வேண்டும் என்றும், சிங்கள இனவெறி அரசை சர்வதேச அமைப்புகள் கண்டிக்க முன்வர வேண்டும் என்றும் மே பதினேழு இயக்கம் வலியுறுத்துகிறது. தமிழர்களுக்கான அரசியல் தமிழர்களே நிர்ணயித்துக்கொள்ளும் வரை இதற்கு நிரந்தர தீர்வு எட்டப்போவதில்லை. தமிழீழ இனப்படு கொலைக்கான சர்வதேச விசாரணையும், பொதுவாக் கொடுப்பும் நடத்தப்படுவதே தமிழீழ தமிழர்களுக்கு நீதியை பெற்றுத் தரும்.

மே பதினேழு இயக்கம்

# நலம் பெறுவார்களா? நாட்டுப்புற கலைஞர்கள்

கொரோனா பேரிடர் மற்றும் அதன் காரணமாக அமலில் உள்ள ஊரடங்கினால் வாழ்வாதாரம் இழந்து தவித்து வருகின்றனர். இதனை அரசிடம் எடுத்து செல்லும் பொருட்டு, தமிழகத்தில் உள்ள பல்வேறு நாட்டுப்புற சங்கங்கள் இணைந்து, கடந்த 10.06.2021 அன்று இணைய வழியில் தமிழ்நாடு தொழில்துறை மற்றும் தமிழ்வளர்ச்சித்துறை அமைச்சர் மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு அவர்களுடன் நடைபெற்றது. இந்த இணைய வழி சந்திப்பை தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர்கள் கலைஞர்கள் சங்கம் ஒருங்கிணைத்தது.

கொரோனா பேரிடர் மற்று ஊரடங்கினால் தங்களின் வாழ்வாதாரம் இழந்து தவிக்கும் பல்வேறு கலைஞர்களின் சார்பாக, தமிழகத்தில் உள்ள பல்வேறு நாட்ப்புறச் சங்கங்களை சேர்ந்த பிரதிநிதிகள் தங்களின் கோரிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் திரு தங்கம் தென்னரசு அவர்களிடம் தெரிவித்தனர். அதில் மிக முக்கியமான கோரிக்கைகளாக பின்வருவனவற்றை முன்வைத்தனர்:

நாட்டுப் புறக் கலைஞர்களை முன்களப்பாணியாளர்களாக அறிவிப்பது,

மண்டல வாரியாக இருக்கும் கலைப்பண்பாட்டுத்துறை அலுவலங்களை, மாவட்ட வாரியாக அமைப்பது,

கலைப்பண்பாட்டுத்துறையில் நாட்டுப்புறக் கலைஞர்களின் பதிவை அதிகரிப்பது,

நாட்டுப்புறக் கலைஞர்களின் ஓய்வூதிய வயதை குறைப்பது,

கொரோனா போன்ற இனிவரும் காலங்களிலும் நாட்டுப்புறக் கலைஞர்களுக்கு நிவாரணத் தொகை வழங்குவதை உறுதி செய்வது.




இவ்வாறு மேற்கொண்ட கோரிக்கைகளை, இணைய வழி சந்திப்பில் கலந்து கொண்ட நாட்டுப்புறக் கலைஞர்கள் மற்றும் அவர்களின் பிரதிநிதிகள், மாண்புமிகு அமைச்சர் திரு. தங்கம் தென்னரசு அவர்களிடம் தெரிவித்தனர்.




## சித்த மருத்துவத்தை உலக சுகாதாரம் அமைப்பிற்கு பரிந்துரைக்க தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினுக்கு உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு, ஆயுஷ் கவுன்சில் அமைப்பு திரு. செல்வகுமார் கடிதம்



தமிழ் பாரம்பரிய மருத்துவமான சித்த, ஆயுர்வேத மருந்துவ வகைகள் கொரோனா முதல் மற்றும் இரண்டாம் அலையில் அரசு மருந்துவமனை கோவிட் சென்டர்கள் போன்றவைகளில் நோய்த்தொற்றை கட்டுக்குள் கொண்டவர பெரிதும் இம்மருந்துவம் பங்காற்றியது. சித்த, ஆயுர்வேத உலக மக்கள் பயன்பெறும் வகையில் உலக சுகாதார அமைப்பிற்கு தமிழக அரசு, அரசு மருத்துவமனை கோவிட் கேர் சென்டர்களில் நோய்த் தொற்று ஏற்பட்டு குணமாகி சென்றவர்களை எண்ணிக்கைகயை கிளினிக்கல் Trail கருதி ICMR மற்றும் உலக சுகாதார அமைப்பிற்கு தமிழக அரசின் சுகாதாரத்துறை சார்பில் அறிக்கையை சமர்ப்பித்து, அதன் மூலம் உலக சுகாதார அமைப்பின் அங்கீகாரம் பெற வேணடும் என ஆயுஷ் கவுன்சில் மற்றும் உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பும் கேட்டுக் கொள்கிறது.

இதன் மூலம் தமிழ் நாட்ல் உள்ள 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட சித்த, ஆயுர் வேத மருத்துவர்கள் மற்றும் எம்.ஜி.ஆர். பல்கலைக்கழகத்தின் கீழ் இயங்கும் 40 சித்த ஆயுர்வேத, யுனானி, ஹோமியோபதி, நேச்சுரோபதி கல்லூரிகளில் பயிலும் மருத்துவர்களின் வாழ்வாதாரம் உயரும் என்பதை தமிழ் நாடு முதலமைச்சார் மற்றும் சுகாதாரத்துறை அமைச்சர் அவர்களை கேட்டுக் கொள்கிறோம் என முதலமைச்சருக்கு எழுதிய கடித்தில் திரு. செல்வகுமார் குறிப்பிட்டுள்ளார்.



14.06.2021

AYUSH COUNCIL

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்,**
**தலைமை செயலகம், சென்னை**

**பொருள்: தமிழ்நாட்டில் பாரம்பரிய மருத்துவம் இணை மருத்துவமாக செயல்பட்ட சித்த, ஆயுர்வேதம், நேச்சுரோபதி மருத்துவத்தை உலக சுகாதார அமைப்பிற்கு அனுப்புதல் தொடர்பாக**

அன்புடையீர் வணக்கம்.

**தமிழகத்தில் தாங்கள் பதவியேற்று ஒரு மாதத்திற்குள் நம் அரசு மருத்துவர்கள். செவிலியர்கள், தூய்மைப் பணியாளர்கள், அரசு அதிகாரிகளை கொண்டு நோய்த் தொற்றில் இரண்டாம் அலையை கட்டுக்குள் கொண்டு வந்தமைக்கு நன்றி கலந்த பாராட்டுக்கள்.**

கொரோனா நோய்தொற்று முதல் அலை மற்றும் இரண்டாம் அலையில், நம் தமிழ் பாரம்பரிய சித்த, ஆயுர்வேத மருந்துகள் அரசு மருத்துவமனைகளில் இணை மருத்துவமாக செயல்பட்டது அனைவரும் அறிந்ததே. அப்பேர்ப்பட்ட மருத்துவத்தை தமிழ்நாடு அரசு, அரசு மருத்துவமனைகளில் மற்றும் கோவிட் சென்டர்களில் நோய் தொற்றிலிருந்து குணமான எண்ணிக்கையை உலக சுகாதார அமைப்பிற்கு **(WHO)** அனுப்பி நம் பாரம்பரிய மருத்துவத்தை உலகறிய செய்ய வேண்டும். மேலும் நம் தமிழ்நாட்டில் உள்ள அரசு அங்கீகாரம் பெற்ற சித்த, ஆயுர்வேத மருத்துவர்கள், அரசு மற்றும் தனியார் சித்த, ஆயுர்வேத, ஹோமியோபதி, யுனானி, நேச்சுரோபதி போன்ற 40 க்கும் மேற்பட்ட மருத்துவ கல்லூரிகள் செயல்பட்டு வருகின்றன. இக்கல்லூரியில் படிக்கும் மாணவர்களை ஊக்குவிக்கும் விதமாகவும், பத்தாயிரத்துக்கும் மேற்பட்ட அரசு அங்கீகாரம் பெற்ற மருத்துவர்களின் வாழ்வாதாரம் உயரவும், இந்தியாவின் மருத்துவ தலைநகரமாக விளங்கிக் கொண்டிருக்கும் தமிழ்நாட்டை இயற்கை மருத்துவத்திலும் தலைநகரமாக தங்கள் அரசால் முடியும்.

எனவே தமிழ் பாரம்பரிய மருத்துவத்தை உலகறிய செய்ய வேண்டுமாய் அன்போடு நன்றியோடு கேட்டுக்கொள்கிறேன்.

நன்றி
இங்ஙனம்

**செல்வகுமார்**
**அமைப்பாளர் - ஆயஷ் கவுன்சில் மற்றும்**
**தலைவர் - உலகத் தமிழ் வம்சாவளி அமைப்பு**
**+919841042540 | +917299992999 | What'sApp @ +60166167708**

Associate with

World Tamil Chamber of Commerce | Global Organisation of Tamil Origin

Directorate of Indian Medicine & Homeopathy | Central Council for Research in Siddha | National Institute of Siddha

405, 3rd Floor, Ten Square Mall, #64, Jawaharlal Nehru Road Koyambedu, Chennai - 107, Ph: + 91 44 42611500

# உலக செய்திகள்

## இறுதி யுத்தகாலத்தில் பலர் காணாமல் போனவேளை பொலிஸ்மா அதிபராக பதவி வகித்தவரை காணாமல் போனவர்கள் அலுவலகத்திற்கு நியமிப்பதா? – சூகா

ஜொகனஸ்பேர்க் - யூன் 12 2021

இலங்கையில் காணாமல் போனோர் அலுவலகத்திற்கு ஈர்க்காலத்தில் பொலிஸ் அதிபராக இருந்தவர் நியமிக்கப்பட்டு முன்னைய அரசாங்கத்தின் கீழ் உருவாக்கப்பட்ட இடைக்கால நீதிப் பொறிமுறை முழுமையாக இராணுவமயப் படுகின்றது. முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஹப்பு ஆராச்சிகே ஜெயந்த சாந்த குமார விக்ரமரட்ணவின் நியமனம் 20 மே அன்று பாராளுமன்ற உறுப்பினர்களால் அங்கீகரிக்கப்பட்டமை தொடர்பில் கருத்து வெளியிட்ட இடைக்கால நீதி தொடர்பான முன்னணி நிபுணர் ஜஸ்மின் சூக்கா அவர்கள் இந்த நகர்வானது காணாமல் போனவர்களின் குடும்பங்களுக்கு உண்மை மற்றும் நீதியினை வழங்குவதற்கான எந்த வாய்ப்பினையும் இல்லாது செய்கின்றது என கூறுகின்றார்.

"இது கடினமான ஒரு விடயம் - இலங்கையின் இறுதி யுத்தத்தின் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட சம்பவங்களில் ஈடுபட்டார் என ஐ.நா விசாரணையில் பெயர் குறிப்பிடப்பட்ட மூன்று பொலிஸ் பிரிவுகளுக்கு அதிபராக இருந்தவர் தற்போது காணாமல்போனோர் தொடர்பான விசாரணைகளை மேற்கொள்கின்றார்- இவர் திட்டமிட்ட பொலிஸ் சித்திரவதை போன்ற ஒட்டுமொத்த மனித உரிமை மீறல் சம்வங்களிலும் கட்டளைப் பொறுப்பு வகித்த தமைக் காக வெளிநாட்டுப் பயணம் மேற்கொண்டால் உலகளாவிய சட்ட மேலாதிக்க வழக்குகளுக்கு முகம் கொடுக்கும் ஆபத்தில் உள்ள ஓர் உயர் அரச அதிகாரி" என சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான திட்டத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா குறிப்பிட்டுள்ளார்.

காணாமல் போனோர் எண்ணிக்கையில் உலகிலேயே இரண்டாவது இடத்தில் உள்ள ஓர் நாட்டில் காணாமல் போன மற்றும் வலிந்து காணாமல் ஆக்கப்பட்ட பல்லாயிரக்கணக்கான சம்பவங்களை விசாரிப்பதற்குப் பொறுப்பாக காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் நியமிக்கப்படுகின்றது. இந்த அமைப்புக்கு நிதியுதவி வழங்கவேண்டாம் எனக் கோரி ஐ.நாவின் அமைதியைக்கட்டியெழுப்பும் நிதியம் மற்றும் சர்வதேச நன்கொடையாளர்கள் ஆகியோருக்கு நாம் கடிதம் அனுப்புவொம். அத்தோடு இந்தப் பிரச்சினைக்குரிய நியமனம் தொடர்பாகவும் சம்பந்தப்பட்ட ஐ.நா அமைப்புக்களுக்கும் மற்றும் அங்கத்துவ நாடுகளுக்கும் இரகசிய ஆவணம் ஒன்றினையும் அனுப்புவோம் என சூக்கா குறிப்பிட்டுள்ளார். "இலங்கை அரசாங்கத்தின் கடந்த கால குற்றங்களை மூடிமறைப்பதற்காக வடிவமைக்கப்பட்ட ஓர் வாகனமாக மாறியுள்ள இந்த அமைப்புக்கு ஐ.நா மற்றும் ஏனைய நன்கொடையாளர்கள் தமது வரிப்பணத்தினை பயன்படுத்தி நிதி உதவி செய்யக்கூடாது என வலியுறுத்தி கடிதம் அனுப்புமாறு இலங்கையிலும் வெளிநாடுகளிலும் உள்ள பாதிக்கப்பட்ட சமூகத்தினரை நாம் தூண்கின்றோம்" ஏற்கனவே, நீதிபதி உபாலி அபயரட்ண காணாமல் போனோர் அலுவலகத்திற்கு தலைவராக முன்னர் நியமிக்கப்பட்டபோது அந்த நியமனம் "ஓர் நேரடியான அவமானம் என்றும் வன்முறைச்செயல்

"என்றும் இலங்கையிலுள்ள பாதிகப்பட்ட குடும்பங்களால் விபரிக்கப்பட்டது. அரசியல் பழிவாங்கல் எனக் கூறப்படும் சம்பவங்களை விசாரிப்பதற்காக ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்சவினால் நிறுவப்பட்ட ஜனாதிபதி ஆணைக்குழு ஒன்றின் தலைவராக நீதிபதி அபயரட்ணா இருந்துள்ளார். "இந்த ஆணைக்குழு காணாமல் போனோர் தொடர்பான வழக்குகள் உள்ளிட்ட பல "வகைமாதிரி" மனித உரிமை வழக்குகளுக்கான நீதிமன்ற தீர்ப்புக்களை குறுக்கிட்டுத் தடுத்துள்ளதாக" மனித உரிமைகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகர் தெரிவித்துள்ளார். காணாமல் போனோர் அலுவலகத்தினை தலைமைதாங்குவதற்கு அவரை நியமித்தமையானது அந்த அமைப்பின் சுதந்திரத்தினையும் நம்பகத் தன்மையினையும் காத்திரமாகச் செயற்படுவதற்கான வலுவினையும் கடுமையாகச் சீர்குலைத்துள்ளது.

இலங்கையில் இடைக்கால நீதிக்காக நிறுவப்பட்ட இரண்டு அமைப்புக்களில் ஒன்று இந்த காணாமல் போனோர் தொடர்பான அலுவலகம் இரண்டாவது பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவும் நோக்குடன் உருவாக்கப்பட்ட இழப்பீடு வழங்கும் அலுவலகம்.

ஜனாதிபதியின் நெருங்கிய கூட்டாளியான (ஓய்வுபெற்ற) மேஜர் ஜெனரல் வாடுகே பாலித பியசிறி பெர்னான்டோ என்பவரை இழப்பீடு வழங்குவதற்கான அலுவலகத்திற்கு நியமித்து தற்போது அந்த அமைப்பும் இராணுவமயப் படுத்தப்பட்டுள்ளது. மேஜர் ஜெனரல் பெர்னான்டோவும் கோட்டாபாய ராஜபக்சவும்.

மிதப்பு ஆயுத ஒப்பந்தம் 7 ஒன்றில் 62 மில்லியன் அமெரிக்க டொலர்கள் பெறுமதியான நிதியில் ஊழல் மற்றும் முறைகேட்டில் ஈடுபட்டமைக்கு குற்றம்சாட்டபடவேண்டும் என்பதை கடந்த அரசாங்கத்தினால் உருவாக்கப்பட்ட ஓர் ஜனாதிபதி ஆணைக் குழு ஒப்புக் கொண்டது. பெர்னான்டோ எதிர்காலத்தில் அரச அலுவலகங்களில் பணியாற்றுவதிலிருந்து தடைசெய்யப்படவேண்டும் எனவும் அந்த அணைக்குழு மேலும் தெரிவித்தது. இருப்பினும் 2019 இல் அரசாங்கம் மாறிய பின்னர் ஜனாதிபதி கோட்டாபாய ராஜபக்ச தனது கூட்டாளிகளின் அரசியல் பழிவாங்கலை விசாரிப்பதற்காக மற்றுமொரு ஆணைக் குழுவினை நிறுவினார். தனக்கு எதிரான ஆதாரங்களை முன்னைய அரசாங்கத்தின் ஊழல் ஆணைக் குழு திரிபுபடுத்தியதாக குற்றம்சாட்டிய8




பெர்னான்டோவுக்கு ஆதரவாக இந்த ஆணைக்குழு காணப்பட்டது. புதிய ஜனாதிபதி ஆணைக் குழுவினால் குற்றச்சாட்டிலிருந்து விடுவிக்கப்படுவதற்கு முன்னர், பெர்னான்டோ அரச அமைச்சரவைச்செயலராக.

நியமிக்கப்பட்டுள்ளார். அதே வழக்குடன் தொடர்புபட்ட 7000 இற்கு மேற்பட்ட துப்பாக்கிகளுடன் சம்பந்தப்பட்ட மீறல்கள் தொடர்பான பெரினான்டோவுக்கு எதிரான மேலதிக குற்றச்சாட்டுக்களும் 2019 இல் அரசாங்கம் மாறிய பின்னர் கைவிடப்பட்டன.

"இராணுவத்தால் பாதிக்கப்பட்ட தமிழர்களுக்கு இழப்பீடு வழங்குதலிலும் பெருந்தொகையான நிதி கையாளப்படும். எனினும் இங்கு இடைக்கால நீதிப் பொறிமுறை இராணுவமயப்படுத்தப்பட்டுள்ளது.

ஏனெனில் இழப்பீட்டு அலுவலகத்திற்கு நியமிக்கப்பட்டுள்ளவர் சர்வதேச சமூகத்தினால் ஆதரவு வழங்கப்பட்ட மற்றும் ஊழல் இடம்பெற்றதாக கண்டுகொள்ளப்பட்ட ஓர் நடவடிக்கையில் முன்னர் பொலிசாரால் விரிவாக விசாரணைக்கு உட்படுத்தப்பட்டவர். அவரது ஊழல் குற்றச்சாட்டுக்கள் நீதிமன்றச் சட்டத்தினால் பரிசோதிக்கப்பட்டு இன்னும் தீர்க்கப்பட்வில்லை" என சூக்கா குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை, முன்னாள் பொலிஸ் மா அதிபர் ஜயந்த விக்கிரமரட்ணாவின் சகாக்களில் ஒருவரான சந்திர நிமால் வக்சித என்பவர் புதிதாக உருவாக்கப்பட்ட ஊழல் அணைக்குழுவிற்கு நியமிக்கப்பட்டுள்ளார். 2009-2010 காலப்பகுதியில் பொலிசின் பயங்கரவாத விசாரணைப் பிரிவுக்கு வக்சித தலைமைதாங்கினார். அந்தப் பிரிவினை திட்டமிட்ட சித்திரவதைக்குப் பொறுப்பான ஓர் பிரிவு என ஐநா குறிப்பிட்டது.

"வன்முறைகள் இடம்பெற்ற காலத்தில் பாதுகாப்பு அதிகாரிகளாக இருந்தவர்களை உள்ளடக்குகின்ற இந்த இடைக்கால நீதிப் பொறிமுறைகளில் இலங்கையிலுள்ள காணாமல்போரின் குடும்பங்கள் பாதுகாப்பாக ஈடுபடமுடியாது. இந்த அமைப்புக்களின் இருப்பானது சாட்சியாளர்களின் பாதுகாப்புக்கு ஓர் பாரிய ஆபத்தை ஏற்படுத்துகின்றது" என சூக்கா குறிப்பிட்டுள்ளார்.

## சிறிலங்கா இராணுவ தளபதிக்கு உடனடித் தடை விதிக்கவும்

### பிரித்தானிய நிழல் அமைச்சர் கோரிக்கை

சிறீலங்கா இராணுவ தளபதி ஜெனரல் சவேந்திர சில்வாவுக்கு எதிராக பிரித்தானிய அரசு, தடைகளை விதிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பிரித்தானியா தனது உலகளாவிய மனித உரிமைகள் தொடர்பான தடைவிதிப்பு அதிகாரசபையின் கீழ், சவேந்திர சில்வாக்கு எதிராக பயணத்தடை உள்ளிட்ட தடைகளை விதிக்க உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

தென்னாசிய மற்றும் பெதுநலவாய நாடுகளிற்கான அமைச்சரான தாரிக் அஹமட் பிரபுவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இந்தக் கடிதத்தில், கடந்த ஏப்ரல் மாதம் யஸ்மின் சூக்கா தலைமையிலான ITJP இராணுவத் தளபதி சவேந்திரசில்வா தொடர்பில் பிரித்தானிய வெளிவிவகார அமைச்சிடம் சமர்ப்பித்திருந்த 50 பக்க குற்றப் பத்திரிகையில் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களை மேற்கோள்காட்டியுள்ள நிழல் அமைச்சர், இறுதி யுத்தத்தில் சவேந்திர சில்வா 58வது படைப்பிரிவின் இராணுவத் தளபதியாக இருந்தார் என்பதற்கான ஆதாரங்களை குறித்த அறிக்கை வழங்குவதுடன், குறித்த யுத்தத்தில் அவருக்கும் அவரது படைகளுக்கும் இடையில் ஒரு கட்டளை தொடர்பு இருந்ததையும் அந்த அறிக்கை விவரிக்கின்றது என்று தெரிவித்துள்ளார்.

இந்த அடிப்படையில் சவேந்திர சில்வாவை தடை செய்யும்படி கோரி, 01 மே 2021 அன்று இனப்படுகொலையை தடுப்பதற்கும் தண்டிப்பதற்குமான சர்வதேச மையம் (ICPPG) யுத்தத்தினால் பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் பிரித்தானிய அரசிற்கு அவசர வேண்டுகோள் விடுத்ததுடன், அனைத்து அமைப்புக்களையும் ஒன்றுணைந்து அழுத்தம் வழங்குமாறும் கோரியிருந்தனர். அத்துடன் ICPPG இன் இளையோர் அணியாகிய இரண்டாம் தலை முறையினர் இதனை நடைமுறைப்படுத்த ஆதரவு தேடி இணையவழி கையெழுத்து போராட்டம் ஒன்றையும் ஆரம்பித்திருந்தனர். அதேநேரம் அவர்கள் அனைத்து பிரித்தானிய பாராளுமன்ற உறுப்பினர்களையும் தொடர்புகொண்டு, தொடர் சந்திப்புக்களை நடாத்தி, பிரித்தானிய அரசுக்கு அழுத்தம் கொடுக்கும்படியும் கோரி வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த முயற்சிகளின் பலனாக, கடந்த மே 18 2021 அன்று ஸ்கொட்லாந்து தேசிய கட்சி கட்சியின் பாராளுமன்ற உறுப்பினரான மக்லோக்லின் ஆனியால் பிரித்தானிய பாராளுமன்றில் காலை நேர விவாதத்துக்கான முன் பிரேரணை ஒன்று கொண்டுவரப்பட்டது.

இதுவரை 20 பாராளுமன்ற உறுப்பினர்களின் ஆதரவு கையெழுத்தும் இவர்களின் முயற்சியால் பெறப்பட்டுள்ளது. இந்த வகையில் பிரித்தானியாவின் எதிர்க்கட்சியான தொழில்கட்சியின் தலைமையுடன் அண்மையில் நடைபெற்ற சந்திப்பின் பயனாக, இன்று தொழில்கட்சியினர் இந்த நிலைப்பாட்டை எடுத்திருப்பதுடன், பிரித்தானிய அரசின்மீது கடும் அழுத்தத்தையும் பிரயோகித்திருப்பது குறிப்படத்தக்கது.

இது போல ஏனைய கட்சிகளுடனும் சந்திப்புகள் இடம்பெற்றுவருகின்றன. இனப்படுகொலையில் பலியான தமிழ் உறவுகளை நினைவுகூரும் இந்த மாத்தில், அவர்களுக்கு செய்யும் உண்மையான அஞ்சலியாகவும் இந்த வருடத்துக்கான இலக்காகவும் சவேந்திர சில்வாவை தடை செய்யும் போராட்டத்தை முன்னெடுக்கும் படி கேட்டுக்கொண்டுள்ள இளையோர்கள், இந்த முன்பிரேரணையை வெற்றியளிக்க செய்ய, அனைத்து மக்களையும் தங்கள் பாராளுமன்ற உறுப்பினர்களை தொடர்பு கொண்டு இந்த பிரேரணக்கு ஆதரவாக கையெழுத்து இடும்படி அழுத்தம் கொடுக்குமாறும் இளைளோர் அறைகூவல் விடுத்திருத்தனர். நன்றி தினக்குரல்


bcpc
BOROS CANADIAN
PAPER CONVERTING INC.
Auto Body Masking Paper Rolls
Size 6", 18", 24" & 36"
Auto Painting Purposes
Medical Examine Paper Rolls
18", 21"&24"
Use For Medical Offices
Examination Table Paper Rolls
Disposable Chair or Tables Paper Rolls
Use for Salon Chairs & Spa Treatment Tables
Auto Body Masking Paper
Dental Examination Table Paper
Massage Table Paper Roll
Examination Table Paper Roll
Food Wrapping Paper Rolls
Meat Wrapping Paper Rolls
Alan Maniam
Director
647 299 2450
235 Nugget Ave., Unit 12, Scarborough ON M1S 3L3
boroscanadianpaper@gmail.com


Manaja
manajaskitchen.ca
MANAJA'S KITCHEN
A Fusion of Indian & Sri Lankan Cuisine
WE DO CATERING
மணம், சுவை கொண்ட அறுசுவை உணவுகளை
நிபுணத்துவத்துடன் தயார் செய்து விநியோகிப்பவர்கள்.
Take Out
Birthy Parties
Picnic / Get Together
or Office Parties
Backyard Dosa Party
Specialized Mutton & Chicken Briyani
சுவையான உடன் தோசை மா கலவை இட்லி மா கலவை பெற்றுக்கொள்ளலாம்
அனைத்து தாயக சைவ மற்றும் அசைவ உணவுகளுக்கு உங்கள் விருப்பப்படி சிறந்த முறையில் தயாரித்த அறுசுவை உணவுகளை செய்து குறிப்பிட்ட நேரத்தில் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள அழையுங்கள்
FREE Delivery for orders over $150 in GTA
75 Williamson Dr., W, Ajax ON L1T 4Y4
905.427.8263


கடன் அட்டைத் தொல்லைகளிலிருந்து விடுதலை
NEW LIFE
FRESH START
வங்கிக் கடன்களில் 80% வரையிலான கழிவு
Reduce your debts upto 80%
கடன் அட்டை, வங்கிக் கடன்களுக்கு விதிக்கப்பட்ட சகல வட்டிகளும் நிறுத்தப்படும்
Stop all interest on your debts
கடன் தொடர்பாக விடுக்கப்படும் தெலைமேசி அழைப்புகள், சம்பளப் பறிமுதல் போன்ற சட்ட நடவடிக்கைகள் நிறுத்தப்படும்.
Stop collection calls, Court action & Wage garnishments
உங்கள் சொத்துகள், முதலீடுகள் பாதுகாக்கப்படும்
Proted all your assets (House, Car, RRSP, RESP, TFSA, GIC)
மாதாந்த ரீதியில் ஒயே கட்டுப்பணத்தில் எல்லாக் கடனையும் தீர்க்க வசதி செய்தல்
Make one monthly payment to all of your creditors
வங்குரோத்துக்கு செல்லாமல் தீர்வுகாண ஏற்பாடு செய்யப்படும்
Give you solutions with out Bankruptcy
DSC DEBT SOLUTION CANADA
55 Town Centre Court, Suite 700,
Scarborough, ON. M1P 4X4
Suren Sornalingam
Certified Insolvency Counsellor
Tel: 647-274-2832
Fax: 647-797-1991
www.debtsolutioncanada.ca

# மே–18 தமிழின அழிப்பு நாள், தமிழீழத் தேசிய துக்க நாள்

உரை பிரதமர் வி.உருத்திரகுமாரன்

மே 18. இன்று தமிழீழத் தேசிய துக்கநாள்.

தமிழீழ மக்களுக்கு எதிராக சிங்கள பௌத்த இனவாதப் பூதம் நடாத்திய தமிழின அழிப்பு வெறியாட்டத்தின் நினைவு நாள்.

தமிழ் மக்களுக்கு எதிராக சிறிலங்கா அரசின் ஆயதப் படையினர் நிகழ்த்திய இனஅழிப்பின் குறியீடாக வரலாற்றுப் பதிவுகளில் நிலைபெற்றுள்ள கரிநாள்.

இந் நாளும், முள்ளிவாய்க்கால் பிரதேசமும் தமிழ் மக்கள் எதிர் கொண்ட பெருங்கொடுமையின் குறியீடாகவும் சாட்சியமாகவும் வரலாற்றில் நிலை பெற்றுப் போயின.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் நாள் அன்று சிங்களப்படையினர் தமிழீழ மண்ணில் தமது முழு ஆக்கிரமிப்பினை பெரும்கொடும் போரினூடு நிலை நிறுத்தினர்.

தமிழீழ மண்ணையும் மக்களையும் ஆக்கிரமிப்பதற்காக சிறிலங்கா அரசு நடாத்திய போர் மனித குலத்துக்கு விரோதமானது. பெரும் மனித அவலத்தைத் தோற்றுவித்த இனவழிப்புப் போர் அது.

இப் பெரும் படை நடவடிக்கையில் தமிழ் மக்களும் இயற்கையும் அடைந்த பெருந்துயர் வார்த்தைகளால் விபரிக்க முடியாதவை. போரின் சாட்சியாய் அமைந்த மக்கள் சொல்கின்ற துன்பக் கதைகள் தமிழ் மக்களின் கூட்டுநினைவுகளில் துயர வடுக்களாய் காலம் காலமாய் நிலைத்திருக்கக் கூடியவை.

"தனது இரு கரங்களிலும் தனது இரு குழந்கைகளை ஏந்தியவளாய் உயிர் காக்க ஓடுகிறாள் இளந்தாய் ஒருத்தி. எறிகணைகளும் குண்டு வீச்சு விமானங்களும் அவளை விடாது துரத்துகின்றன. தம் பிள்ளைகளின் உயிர் காக்கத் தனது சக்தியெல்லாம் திரட்டி ஓடுகிறாள் அந்தத் தாய். ஓடும் வேகத்தில் கை தவறி விழுந்து விடுகிறது ஒரு கையில் இருந்த குழந்தை. குனிந்து, விழுந்த குழந்தையைத் தூக்குவதற்கு முன்னர் அருகே எறிகணை விழுந்து வெடிக்கிறது. வீழ்ந்த குழந்தையைக் கைவிட்டு மற்றக் குழந்தையைக் காப்பாற்ற தொடர்ந்தும் ஓடுகிறாள் அந்தத்தாய். தொடர்ந்தும் ஓடுகிறாள் "

இது போல் ஆயிரமாயிரமாய் எமது மக்களின் உள்ளங்களில் புதைந்து கிடக்கிறன, சிங்களத்தின் இனவழிப்பில் சிக்கிய மக்கள் பட்ட பெருந்துயரின் வதைக்கதைகள்.

எமது மக்களின் இப் பெருந்துயர் எமது தேசத்தின் துயரமாக உலகெங்கும் வாழும் தமிழ் மக்களின் நெஞ்சங்களில் நிலைத்திருக்கிறது. தமிழர் தேசத்தின் இத் துயரத்தை நாடு கடந்த தமிழீழ அரசாங்கம் தமிழீழத் தேசிய துக்க நாளாகப் பிரகடனம் செய்திருக்கிறது. முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பில் கொல்லப்பட்ட அனைத்து மக்களையும் நினைவு கூர்ந்து அவர்களுக்கான நினைவு வணக்கத்தில் அனைத்துலகெங்கும் வாழும் தமிழ் மக்களுடன் நாடு கடந்த தமிழீழ அரசாங்கமும் தன்னை இணைத்துக் கொள்கிறது.

அன்பான மக்களே,

நாம் இவ் வருடம் முள்ளிவாய்க்கால் தமிழினவழிப்பின் 12 ஆவது ஆண்டு நிறைவை நினைவு கூர்கிறோம்.

ஆண்டுகள் 12 கடந்தும் கொல்லப்பட்ட எமது மக்களுக்கு இன்னும் நீதி கிடைக்கவில்லையே என்று ஏக்கமும் கவலையும் எமக்கு உண்டு.

எமது மக்களுக்கு எதிராக நடாத்தப்பட்ட போர் அரசுகளால் நடாத்தப்பட்ட போர். தமது புவிசார் அரசியல் நலன்களை அடைந்து கொள்வதற்காக எமது விடுதலை இயக்கமான தமிழீழ விடுதலைப்புலிகள் அமைப்பையும், தமிழீழத் தனியரசு என்ற எமது மக்களின் விடுதலை வேட்கையினையும் அழித்து விட வேண்டும் என்று முடிவு செய்த பல அனைத்துலக அரசுகள் சிறிலங்கா அரசின் தமிழின அழிப்புப் போருக்கு முண்டு கொடுத்து நின்றன.

யுத்த நிறுத்தக் கோரிக்கை போராளிகளால் முன்வைவக்கப்பட்ட போதும் இக் கோரிக்கையினை ஏற்று யுத்தத்தை ஒரு குறிப்பிட்ட வரையறுக்கப்பட்ட காலத்துக்காவது நிறுத்தி மக்களைப் பாதுகாக்க எந்தவொரு அரசும் முன்வரவில்லை.

மக்கள் கொல்லப்படுவதனைத் தடுத்து நிறுத்துவதை விட, தமது புவிசார் அரசியல் நலன்களுக்கு ஏற்ப போரை நடாத்தி முடிப்பதே இந்த நவீன காலத்திலும் அரசுகளுக்கு முக்கியமானதாய் இருந்தது.

இத்தகையதொரு கொடுமை சூழ்ந்த உலக அரசியல் ஒழுங்கில்தான் நாம் வாழ்ந்து வருகிறோம். குறிப்பாகப் போர்ச் சூழலில் கொல்லப்படுவது எல்லாம் மனித உயிர் என்ற உலகப்பார்வையின் அடிப்படையில் அதனைத் தடுக்கும் மனித உரிமை சார்ந்தோ, நீதியின் அடிப்படையிலோ அரசுகள் தமது முடிவுகளை எடுப்பதில்லை. இம் முடிவுகளில் நலன்களே முக்கியம் பெறுகின்றன.

இதேவேள, நீதியின் அடிப்டையிலும் மனித விழுமியங்களின் அடிப்படையிலும் கட்டியெழுப்பப்பட்ட மனித உரிமை, மானிட மாண்பு போன்ற வாழ்க்கைத் தத்துவங்களையும் இவ் அரசுகள் மதிக்க வேண்டிய அறம் சார்ந்த பொறுப்பும் அழுத்தமும் இவ் அரசுகளுக்கு இருக்கின்றன.




இதனால் பல அரசுகளின் முடிவுகளில் ஒருவகை இரட்டைத்தன்மை பல சமயங்களில் வெளிப்படுவதனை நாம் அவதானிக்கலாம் ஒரு புறம் மனித உரிமைகளை புறந்தள்ளியேனும் தமது நலன்களை அடைந்து கொள்ளும் முனைப்பு, மறுபுறம் நீதியின் பாற்பட்டு இயங்கும் மக்கள் அமைப்புகளின் அழுத்தத்தை சமாளித்தல் என இவற்றுக்கிடையில் சில வேளைகளில் அரசுகள் சிக்குவதுண்டு.

இத்தகைய நிலைமையைக் கையாள காலத்தை இழுத்தடித்துச் செல்லும் அணுகுமுறையினை அரசுகள் பயன்படுத்துவதும் உண்டு. உலகெங்கும் நடைபெறும் இனவழிப்புகள் சார்ந்தும் இவ் இரட்டைத்தன்மை நிலவுவதனையும் அதற்கேற்ப கால இழுத்தடிப்புகள் நிகழ்வதனையும் நாம் காண முடிவதுண்டு.

அரசுகள் பொதுவாக இனவழிப்புக் குற்றச்சாட்டை உடடினயாக ஏற்றுக் கொள்வதில்லை. அவ்வாறு ஏற்றுக் கொள்வதால் வரக்கூடிய அரசியல் மற்றும் நலன்சார் பின்விளைவுகள் இதற்கு முக்கிய காரணம் என்பதும் தெளிவு.

நூறு ஆண்டுகளுக்கு முன்னர் இடம் பெற்ற ஆர்மேனிய மக்களுக்கு எதிரான துருக்கியின் இனவழிப்பு குறித்து கடந்த மாதம்தான் அமெரிக்க அரசு அங்கீகாரம் வழங்கியதையும், நூறு ஆண்டு காலத்தில் இதுவரை 29 நாடுகளே இந்த அங்கீகாரத்தை வழங்கியுள்ளன என்பதனையும் கவனத்திற் கொள்ளும் போது இவ் உண்மை புலப்படும்.

நாம் இதனை இங்கு குறிப்பிடுவதன் காரணம் தமிழ் மக்களாகிய நாமும் எமது மக்களுக்கெதிரான இனவழிப்புக்கான நீதியை இத்தகைய காலநீட்சிக்கு உட்பட்டே பெறவேண்டியிருக்கும் என்பதனை வலியுறுத்திக் கூறுவதற்காகவே.

தமிழ் மக்களுக்கெதிரான இனவழிப்புக்கு எதிரான உலக அங்கீகாரத்தை பெற்றெடுப்பதற்கு நாம் தொடர்ச்சியாகப் போராட வேண்டியிருக்கும் என்பதனை வலியுறுத்தவே.

உலகமெங்கும் உள்ள அரசியல் மற்றும் நீதித்துறைக் கட்டமைப்புகளில் நீதி சார்ந்த விழுமியங்களை வலியுறுத்தவும், அவற்றை வலுப்படுத்தக்கூடிய செயற் பாடுகளுக்கும் சில சமயங்களில் எதிர்பாராத வகையிலும் கூட வாய்ப்புகள் உருவாகுவது உண்டு. அனைத்துலகப் பரிமாணம் கொண்ட அமைப்புகளில் அறநெறியின் அடிப்படையில் இயங்கும் சான்றோரது ஆதரவு மக்கள் நீதி சார்ந்தது என்றும் வெளிப்படும்.

இவற்றையெல்லாம் நாம் கெட்டியாகப் பிடித்து சிறிலங்கா அரசால் எமது மக்களுக்கெதிராக நடாத்தப்பட்ட, நடாத்தப்பட்டு வருகின்ற தமிழின அழிப்புக்கு எதிரான ஆதரவினை பெற்றுக் கொள்வதற்கான செயற்பாடுகளை நாம் வலுப்படுத்த வேண்டும்.

அண்மையில் கனடாவின் ஒன்றாரியோ மாகாண சட்டசபையில் தமிழ்ப் பிரதிநிதி விஜய் தணிகாசலம் அவர்களது செயற்பாடு காரணமாக மே 12 ஆம் திகதி முதல் மே 18

ஆம் திகதி வரை தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரம் எனப் பிரகடனம் செய்யப்பட்டது மிகச் சிறப்பானவொரு அரசியல் பெறுபேறு மட்டுமல்ல எமது மண்ணில் நடந்தேறிவருவது தமிழின அழிப்புத் தான் என்பதை பன்னாட்டு அரசியல் மேடைகளில் பேசுபொருளாக்குவதும் எம்மால் நிகழ்த்தக் கூடிய ஒன்று என்பதை உறுதிப்படுத்தி உள்ளதும், இப் பெறுபேறு இரண்டு ஆண்டு கால விடாமுயற்சியின் பலன், அதுவும் ஒரு இளைய தலைமுறை தமிழ் அரசியல் பிரதிநிதியினால் முன்னெடுக்கப்பட்டது என்பதும் எமது அவதானத்துக்கும் பாராட்டுக்கும் உரியவை.

தாயகத்தில் ஒடுக்குமுறையரசின் அச்சுறுத்தல்களுக்கும் அடிபணியாது, தமிழர் தாயகப்பகுதிகளின் கத்தோலிக்க ஆயர்கள் நால்வரும் தமிழ் மக்களுக்கு எதிராக நடாத்தப்பட்டது தமிழின அழிப்பே எனத் தெரிவித்துள்ளது மேலுமோர் உற்சாகம் தரும் செய்தி. இச் செய்திகள் நமது மக்களுக்கு நம்பிக்கை தாக்கூடிய செய்தியாகும்.

நாம் தொடர்ச்சியாக செயற்படுவதன் மூலம்தான் முள்ளி வாய்க்கால் இனவழிப்புக்கான நீதியினைப் பெற்றுக் கொள்வதற்கான வாய்ப்புகளைத் தக்க வைக்க முடியும் என்பதனைப் புரிந்து கொண்டவர்களாகப் பொறுமை யோடும் சகிப்புத் தன்மையுடனும் செயற்பட வேண்டியவர் களாய் உள்ளோம்.

புதிய அமெரிக்க அரசினது கொள்கை வகுப்பு , மனித உரிமை ஆணையத்தில் மீளவும் உறுதியுடன் இணைந்து கொண்டது, அண்மைய ஆர்மேனிய இனவழிப்பு அங்கீகாரம் இவற்றை எல்லாம் மீளவும் நோக்கு வோமானால் அமெரிக்க அரசு ஆர்மேனிய இனவழிப்பை அங்கீகரித்திருப்பது எப்போதோ நடந்திருக்க வேண்டிய ஒன்று. இந்த அங்கீகாரத்திற்கு பெரிதும் காரணம் புலம்பெயர் ஆர்மேனியர்களது அயராச் செயல முனைப்புதான். புவிசார் அரசியல் பின்விளைவுகள் பாதகமாக இருந்த போதிலும் அதிபர் பைடன் அரசு தாம் கையில் எடுத்துள்ள வெளியுறவுக் கொள்கையில் மனித உரிமைகளை மையப்படுத்தியுள்ளனர என்பது தெளிவாயுள்ளது. இவ்விடயத்தில் துருக்கி நாட்டினை தமது பார்வைக்கு உட்படுத்தியுள்ளோம் என தெரிவிக்க முன்வந்த பைடன் அரசின் அறத் துணிவை நாம் ஏற்கெனவே பாராட்டியுள்ளோம்.

இனவழிப்பை அங்கீகரிப்பதன் முதன்மையான நோக்கம் தீமை செய்தவர் மீது பழி சுமத்தி விட்டுப் போவது மட்டுமே அல்ல, உலகில் எங்கும் அது நிகழாமல் இருப்பதை உறுதி செய்வதும்தான். அது செயல்துடிப்பான முன்னகர்வு ஆகும். இனவழிப்புக்கு இரையாகி மடிந்தோரின் உயிர்களை மறவாமலிருப்பது அச்செயல் மீண்டும் என்றேனும் நிகழ்ந்து விடாமல் தடுத்திட மீளுறுதி கொள்வதாகும்.

இனஅழிப்புக்கு எதிரான சர்வதேச ஒப்பந்தம் இவ்வடிவில் வரையப்பட்டதன் நோக்கம் இனவழிப்புக் குற்றத்தைத் தண்டிப்பது மட்டுமன்று, அக்குற்றம் புரிவதைத் தடுப்பது மாகும். இனவழிப்பு ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டுள்ள அரசுத் தரப்புகளுக்கு இனவழிப்பைத் தடுக்கும் கடமை போர காலத்திலும், சமாதான காலத்திலும் உள்ளது.

போஸ்னிய நாட்டு இனவழிப்பு வழக்கில் பன்னாட்டு நீதிமன்றம் (ICJ) இந்த சட்டக் கடப்பாட்டை எவ்வாறு உறுதிசெய்தது.

இனவழிப்பு இல்லாத உலகம் ஒன்றினைக் கட்டி எழுப்ப முன் நிற்கும் பெருந்தொகை நீதி சார்ந்த உலகப் பெருமக்களுடமும் சிவில் சமூக அமைப்புக்களுடனும் செயற்பாட்டாளர்களுடனும் கைகோர்த்து எமது முன்னெடுப்புக்களை தொடர்ந்தும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கம் முன்னெடுக்கிறது என்பதை மீளவும் இன்று பதிவு செய்ய விரும்புகிறேன்.

அன்பானவர்களே,
முள்ளிவாய்க்கால் தமிழின அழிப்பை நாம் நினைவு கூரும் இவ்வேளை, இவ் இனவழிப்பில் கொல்லப்பட்ட எமது மக்களுக்கான நீதி கிடைத்தல் என்பது இனியொருபோதும் எமது மக்களுக்கெதிராக இனவழிப்பு நடைபெறாத வகையில் 'இனியொரு முள்ளிவாய்க்கால் இடம்பெறாத வகையில்' அரசியல் பாதுகாப்பு ஈடுசெய் நீதியின் ஏற்பாடு உறுதி செய்யப்படுதலையே குறித்து நிற்கும் என்பதனை நாம் நன்றாகத் தெரிந்தவர்களாகவும் அத்தெளிவின் அடிப்படையில் அதனை நன்கு வலியுறுத் தக் கூடியவர்களாக எம்மை வளர்த்துக் கொள்ளவும் வேண்டும்.

1998ம் ஆண்டு கியுபேக் விடுதலை தொடர்பாக கனேடிய உச்சநீதிமன்றம் கருத்து வெளியிட்ட பொழுது, அடக்கப்பட்ட ஒரு இனம் தன்னை பாதுகாத்துக் கொள்ள தனிநாடு அமைக்கும் உரித்து உடையவர்கள் என கூறியது.

இதே கருத்தினை ஆபிரிக்க மக்கள் தீர்பாயம், கமறூன் நாடு தொடர்பான வழங்கிலும் கூறியது.

2015ம் ஆண்டு கொசோவோ தனிநாட்டு பிரகடனம் தொடர்பாக உலக நீதிமன்றத்தின் முன்னால் (ICJ) 40 நாடுகள் இனஅழிப்புக்கு உள்ளான இனம் பிரிந்து சென்று தனிநாடு அமைக்கும் உரித்து உள்ளதென வாதிட்டது.

சிறீலங்கா அரசு தனது கட்டமைப்புகள் வழியாக தமிழ் மக்களது தேசத் தகமையைத் தகர்த்து, அவர்களை உதிரியாக்கி சிங்களப் பெருந் தேசியத்துக்குள் கரைத்து விடும் நோக்கைத் தன்னகத்தே கொண்டிருக்கிறது என்பதை நாம் நன்கறிவோம்.

முள்ளிவாய்க்கால் இனவழிப்புப் போரும் சிறிலங்கா அரசின் நெடுநாள் திட்டத்தின் அடிப்படையில் அமைந்த தமிழின அழிப்பின்பாற்பட்டே வடிவமைக்கப் பட்டிருந்தது.

சிறீலங்கா அரச கட்டமைப்புகள் யாவற்றிலும் இனவாதம் புரையோடிப்போயுள்ளது.

இதனால், சிறீலங்கா அரசின் கீழ்ப்பட்ட எந்த அரசியல் ஏற்பாட்டிலும் தமிழ் மக்கள் நீதியினைப் பெற்றுக் கொள்வதற்கு எந்த வாய்ப்புகளும் இல்லை என்பதனை நாம் அனைத்துலக சமூகத்துக்கு வலியுறுத்திச் சொல்ல வேண்டியவர்களாக உள்ளோம்.

நாம் வெளிப்படுத்துவது எமது பட்டறிவின்பாற்பட்ட உண்மையின் வெளிப்பாடு. இந்த நிலைப்பாட்டை கல்விமான்களும் ஆய்வாளர்களும் பெருமளவில் ஏற்றுக் கொண்டுள்ளார்கள் என்தனையும் சுட்டிக்காட்ட விரும்புகின்றோம்.

ஆயினும் எமது இந்த நிலைப்பாட்டை தமது நலன்களின் அடிப்படையில் அரசுகள் ஏற்றுக் கொள்வதற்கு கால நீட்சி ஏற்படலாம்.

இக் காலநீட்சியில் எமது நிலைப்பாடும் கோரிக்கையும் நீர்த்துப் போகாமல் பாதுகாத்து உயிர்ப்பித்துக் கொள்ள வேண்டியது எமது தலையாய கடமையாகும்.

இப் புரிதலின் அடிப்படையில் எமது முயற்சிகளை எவ் வகையிலும் தளரவிடாது நாம் பாதுகாத்து வருவோ மேயானால் எமது மக்களுக்கு நீதி கிடைப்பதற்கான சாதகமான புவிசார் அரசியற்சூழல் உருவாகும் போது நாம் எமது இலக்கை அடைந்து கொள்ளும் வாய்ப்பைப் பெற்றுக் கொள்வோம். புவிசார் அரசியலில் மாற்றத்திற்கான சூழல் உருவாகுவதனை அவதானிக்க கூடியதாகவுள்ளது.

இப்புவிசார் சூழல் மாற்றத்தில் தமிழரும் தம்மை ஒரு தரப்பாக இயக்கும் போது இம்மாற்றத்தை வேகப்படுத்த முடியும் என நம்புகின்றோம்.

தாயகத்தில் நிலவும் கொரோனா பெருந்தொற்றுநோய் ஏற்படுத்தியுள்ள நெருக்கடி காரணமாக முள்ளிவாய்க்கால் இனவழிப்பு நினைவு நிகழ்வுகளை இயல்பான வகையில், மக்களிடையே இன்றுள்ள உண்மையான ஆழ்ந்த உணர்வுகளை வெளிப்படுத்தவோ அதன்மூலம் அவர்கள் மன ஆறுதல் பெறவோ முடியாத ஒரு துர்ப்பாக்கிய நிலை எமக்குத் துயர் தருகிறது.

சென்ற ஆண்டு அவரவர் இல்லங்களில் தீபங்களை ஏற்றி வணக்கம் செலுத்தியது போன்ற முறையினை தமிழ்த் தாயக தேசம் எங்கும் பின்பற்றுவதும், இங்கு நாம் செய்வது போன்ற முறையில் நிகர்நிலை நிகழ்வுகளை பரவலாக ஒழுங்கு செய்வதும், நமக்கு ஆறுதல் தரட்டும்.

தொற்றுநோயின் போக்கு எதிர்வரும் மாதங்கள் ஆண்டுகளில் எவ்வாறு இருக்கப் போகின்றது என்பதை இன்றும் கூட உறுதியாகச் சொல்ல முடியாத ஒரு உலக சூழ்நிலையில். ஈழத் தமிழராகிய நாங்கள் உரிமைக்குப் போராடும் ஒரு இனமாக இன்னும் இன்னும் புதிய யுக்திகளையும், புதிய வகையில் எமது உணர்வுசார் ஒற்றுமையையும் வலுப் படுத்துவோமாக.

முள்ளிவாய்க்காலில் புதையுண்டு போன நம்மவர்களின் நினைவுகளை நமது நெஞ்சில் இருத்தி நீதி நிலைநிறுத்தப் படும்வரை விட்டுக் கொடுப்பற்ற போராட்டத்தைத் தொடர்வோம் என இன்று மீளவும் உறுதி எடுத்துக் கொள்வோமாக!

தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்.


## முக்கிய அறிவித்தல்

**எழுத்தார்வம் மிக்க வாசகர்களிடமிருந்து ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.**
**தங்களது ஆக்கம் தமிழ் தேசியம், சமூகம், இலக்கியம் சார்ந்ததாக இருத்தல் நன்று.**
**எமது மின்னஞ்சல் முகவரிக்கு தட்டச்சு செய்து அனுப்பிவைக்குமாறு வேண்டுகிறோம்.**
sangathamilcanada@gmail.com

## முக்கிய அறிவித்தல்

**உங்கள் வணிக விளம்பரங்கள், அறிவித்தல்கள், சிறு விளம்பரங்கள்**
**சங்கத்தமிழ் வாராந்திர சர்வதேச மின் செய்தித்தாள்**
**ஊடாக மக்களிடம் சென்றடைய**
**இன்றே அழையுங்கள்: 437.345.4203,**
sangathamilcanada@gmail.com

**Allstate.**
You're in good hands.

உங்களுக்கு சேமிக்க உதவும்
தள்ளுபடிகள் பற்றி என்னிடம் கேளுங்கள்

பயணக் காப்புறுதி
கனடாவுக்கு வருபவர்களுக்கான காப்புறுதி

செல்லப் பிராணிக் காப்புறுதி

ஆயுள் காப்புறுதி
முதலீடுகள் மற்றும் நிதித் திட்டமிடல்

தனிப்பட்ட சேவைக்கும் ஆலோசனைக்கும்
என்னைத் தொடர்பு கொள்ளுங்கள்



**Raji Linghan**
Ajax Agency
15 Westney Road, N
**(416) 817 5060**
rlinghan@allstate.ca

Trademark owned by Allstate Insurance Company used under licence by Allstate Insurance Company of Canada. ©2020 Allstate Insurance Company of Canada. 011E | 201316



**Call today to Save energy**

**Free Estimate!**
Call today
$50 OFF




**Let us help with...**

- Replacement (Door & Windows)
- Custom Door & Windows
- Front Door & Patio Door
- Garden Door
- Door & Windows Re-Caulking (Important)
- Painting Doors & Windows
- Basement Separate Entrance Door
- Home Painting
- Spotlights installation
- California Shutters

**PTR DOORS & WINDOWS**
-Over 10 years experience-

Call Ravi: 416-825-9482
Call Kanna: 647-297-7815
E-mail: ptrrenovation@gmail.com








**நம் தாயகம்**

வாங்குவீர்... வாழ்வு தருவீர்!

**பெண் தலைமைத்துவ குடும்பங்களினதும்
போரில் அவயங்களை இழந்தோருக்கான
தற்சார்புப் பொருளாதார மேம்பாடு எமது நோக்கம்**

முன்னாள் போராளிகளினதும் துணையிழந்த பெண்களினதும்
தயாரிப்புகள் கலப்படங்கள் அற்ற பாரம்பரிய முறைத் தயாரிப்புகள்,
உடல் நலம் காப்பவை.
நம் தாயகப் பொருட்களைக் கொள்வனவு செய்து தாயக மக்களின்
பொருளாதார முன்னேற்றத்துக்கு பங்களிக்கும் உள்ளங்களுக்கு நன்றி

*முள்ளிவாய்க்காலில் இருந்து...*



"உணர்வினில்
தாய் மண்
வாசமும்
உணர்வோடு
தாய் மண்
நேசமுமாய்"



**Tel: 416-558-2111**
nam.thayagam@gmail.com
3031 Markham Road, Unit 35, Scarborough. M1X 1L9 (Markham & Passmore)



**PEEL TAE KWON DO**
**Family Martial Arts**

**Trusted Local Taekwon - Do Training School**



- Over 20+ Years Taekwon-Do Training Experience
- For All Your Taekwon-Do, Martial Arts, Kickboking, Self Defense and Yoga Needs
- Top Quality Training for Kids, Teens and Adults

2016 READERS' CHOICE AWARDS





**Ebenezer Location:**
4255 Ebenezer Road,
Unit #25
Brampton, Ontario. L6T 2K8.
Tel: 905 913 2571

**Bovaird Location:**
170 Bovaird Drive, Unit #9, West,
Brampton, Ontario. L7A 1A1
Tel: 905 840 5268

# மே 18

அன்பான தமிழ் மக்களே

21ஆம் நூற்றாண்டின் குறிப்பேட்டில் முதல் இனப்படுகொலை உலகறிய நிகழ்ந்தேறிய பதிவு மே 2009.

முள்ளிவாய்க்கால் என்பது. இவ்வின அழிப்பின் குறியீட்டுச் சொல்லாகிவிட்ட நிலை.

ஸ்ரீலங்கா சிங்கள அரசு 60 ஆண்டுகளாக சிறிதுசிறிதாக, தொடர்ச்சியாக, ஊடக தொழில்நுட்பம் இன்று போல் இல்லாத காலத்தை பயன்படுத்தி, சமுத்திரத்தின் திரை மறைவில், உலகின் கண்களில் மண்ணைத் தூவி செய்துவந்த இனப்படுகொலை, உலகறிய முள்ளிவாய்க்காலில் அரங்கமைத்து , நாடுகள் சில Sponsor பண்ண உலகறிய சுனா மி போல் அரங்கேற்றிய தமிழின படுகொலைக்கு * அரைப்புள்ளி* இடப்பட்ட நாள் 2009 மே 18 .

ஒரே மாதத்தில் வயது, பால் வேறுபாடின்றி, ஐநாவின் கணக்கில் 75 ஆயிரம் வரை, ஆண்டகை இராயப்பு ஜோசப் அவர்களின் கணக்கில் ஒன்றரை இலட்சம் தமிழ் மக்கள் இரத்த வெறியர்களால் இனப் படுகொலை செய்யப்பட்டனர்.

இரத்த வெறியர்கள் என்பது வலுக் குறைந்த சொல் என்றே கருதுகிறேன்.

ஏனெனில் அன்றைய பாதுகாப்பு அமைச்சரும் இன்றைய ஜனாதிபதியுமான கோத்தபய ராஜபக்சே அன்று படையினருக்கு சொன்ன செய்தி " ஆண்களைக் கொன்று கடலில் போடுங்கள், பெண்களை நீங்கள் விருந்தாக்கிக் கொள்ளுங்கள்" 21ஆம் நூற்றாண் டில் இதைவிட அநாகரீகமாக ஒரு மனிதன் வார்த்தைகளை உதிர்க்க முடியுமா என்பதை பொறுத்திருந் துதான் பார்க்க வேண்டும்.

இலங்கை பூராகவும், வடக்கு / கிழக்கில் செறிந்தும் வாழ்ந்த பூர்வீக தமிழர்களின் இன அழிப்பு, ஐரோப்பிய கம்பெனிகளும், காலனிகளும் நுழையும் முன்பே பௌத் த மஹா சங்கத்தினரால் மகாவம்ச புனை வரலாற்றுள் எழுத்துருவாக் கப்பட்டு விட்டது .

அவர்களைப் பொறுத்தவரை புத்தரால் பௌத்தத்திற்கென ஆசீர்வதிக் கப்பட்ட பூமி இலங்கை. காலப் போக்கில் பௌத்தத்துடன், சிங்களத் தையும் இணைத்துக் கொண்டனர்.

தென்னிந்திய படையெடுப்பு நடைபெற்ற காலத்தில் பூர்வீகத் தமிழர் கள் தென்னிந்திய ஆதரவு சக்தி யாக சிங்களத்தால் பார்க்கப்பட்டு வந்துள்ளனர் படையெடுப்பில் வந்து குடியேறியவர்களையும் பூர்வீக தமிழரையும் பிரித்துப்பார்க்க வழியில்லாதவிடத்து மொத்த தமிழரையும் சிங்களம் வந்தேறு குடி களாக பார்க்க தலைப்பட்டு விட் டது.

சிங்களத்தின் இரண்டாயிரம் ஆண் டு தொடர்ச்சியில் அன்றுதொட்டு இன்றுவரை பௌத்த பீடம் ஒவ் வொரு சிங்கள மகனிற்கும் பாலர் வயதிலேயே இந்த மகாவம்ஸ போதனையை தவறாது செய்து வருகிறது.

இதற்கான எதிர்விளைவாகவே அவ்வினம் தமிழ் மொழியை ஒடுக்கி, தமிழ் நிலத்தைப் பறித்து, வாழ்க்கையை அச்சுறுத்தி, கலாச்சாரத் தை அழித்து , கல்வியை நசித்து , இன வன்முறையை தூண்டி கொலை, கொள்ளை அடித்து, பொருளாதாரத்தைச் சிதைத்து, ஊர் ஊராக சுற்றி வளைத்து, கொத்துக்கொத்தாக இளைஞர் களை கைது பண்ணி காலிபூசா சிறையில் அடைத்து, புலம் பெயர அச்சுறுத்தி புலம் பெயரவைத்து, இவற்றையும் கடந்து தாக்குப் பிடித் து நின்ற மீதி தமிழினத்திற்கு இன அழிப்பாக அரைப்புள்ளியிடப் பட்ட இடம் முள்ளிவாய்க்கால் 2009 மே 18 .

இப்படி தமிழ் இனத்தை, அந்த மண்ணில் இருந்து முற்றாக அகற்றிவிட வேண்டும் என்ற 2000 வருட தீவிர சிந்தனையை தமிழர் நாம் இனமாக தனித்தும், நட்பு நாடுகளுடன் கைகோர்த்தும் எப்படி எதிர் கொள்ளப் போகிறோம்?

எம்மிடம் ஒரு அரசு இல் லை, பெயருக்கு ஒரு நிழல் அரசும் இல்லை, வழிநடத்த தத்துவ ஞானிகளும் இல்லை, அரசியல் ஞானிகளும் இல்லை, அறிவார்ந்த ஒரு கட்டமைப்பும் இல்லை , பொருளாதார கட்டமைப்புமில்லை, இனமான ஊடகங்களும் இல்லை, எழுதுவோர் சங்கமும் இல்லை , எல்லாமே உள்ளது போல் இருந்தும் திரட் சியாக எதுவும் இல்லை, எல்லாமே முழுமைபெறாத உதிரியாக சார்பு டைத்து உள்ள நிலை.

இவை அனைத்தையும் தாண்டி திரட்சியை கொண்டுவரும் ஒற்றுமையோ வெகுதொலைவில்.

ஒற்றுமையையும் முன்னிறுத்தி, காணாமல் ஆக்கப்பட்ட எமது உறவுகளுக்காக பிராம்டன் இருந்து , ஒட்டாவா நடை பயணம் செய்தோம் , ஒற்றுமை பற்றிய சிறு நம்பிக்கை ஒளி தெரிந்தது .

தந்தை செல்வாவை மூதறிஞர் என் றும், அவர் வழிநடத்தலில் விடிந்து விடும் என்றார்கள் , வாய் மூடுமுன் 83 இனக் கலவரம் நடந்து முடிந்தது.

தலைவர் பிரபாகரன் அவதார புருஷர் என்றும் அவர் காலத்தில் விடிந்து விடும் என்று நம்பினோம். முள்ளிவாய்க்காலில் முடித்து வைக்கப்பட்டது.

இவர்கள் இருவரது காலத்திலும் தமிழினம் விழிப்படைந்து ஒன்று பட்டு எழுச்சி பெற்றது என்பது மறுப்பதற்கில்லை.

இவர்கள் இருவரது ஆழமான சிந்தனையும் பிரமாண்டமான உழைப்பையும் தியாகங்களையும் தாண்டி 2009-க்கு பின் தமிழினம் இதுவரை பெரிதாக எதையும் சாதிக்கவில்லை.

முள்ளை முள்ளால் எடுப்பது போல போதனைக்குப் போதனை என்ற வகையில் 2000 வருட சிங்களத்தின் தமிழின விரோத நச்சு சிந்தனைக்கு மாற்று மருந்தாக முதல்கட்ட மருந்தை Ontario வாழ் தமிழ் மக்கள் கூட்டு முயற்சியில் Ontario பாராளுமன்றத்தில் இலங்கை தமிழினப் படு கொலை ஒரு பாட மாக, சட்டமாக வைக்கப்பட்டுள் ளமை மிகச்சிறந்த ஆரம்பம்.

இதற்காக உழைத்த முன்னோடிகளுக்கு சிரம் தாழ்ந்து வணங் குகிறேன்.

இம்முயற்சி இதுவரை தமிழின படுகொலை தீர்மானங்களை நிறைவேற்றிய சிறு அரசுகளை கடந்து ஒருபடி மேலே சென்று உள்ளது .

அனைவரும் விரும்புவது போல புலம்பெயர் தமிழர்கள் இதனை முன்னுதாரணமாக வைத்து தத்தம் அரசுகளை தொடர்ந்து அணுகி தொடர்ச்சியாக அடுத்த படிக்கு நகர்த்த வேண்டும்.

இந்த மெய்நிகர் ஒன்றுகூடல் தமிழினம் ஒரு திரட்சியாக திரள்வதற்கான தனது பங்கை திறந்த மனதுடன் முன்னெடுக்க வேண்டும் என்பதையும் இதில் கோரிக்கையாக



திரு மகாஜெயம்

தமிழர் தலை விதியை தமிழரின் கையில்

"தமிழரின் தாகம் தமிழீழத் தாயகம்"



சிவஸ்ரீ சிவ.ஜனா குருக்கள்
Shiva Sri S.JANARTHANA KURUKKAL
Priest (JANA IYA)
உங்கள் இல்லங்களில் நடைபெறும்
அனைத்து மங்கள வைபவங்களையும்
ஆகம முறைப்படி சிறப்பாக நடத்தி
வைப்பதற்கு அழையுங்கள்
Tel: 647.449.6542
Email: aarthanan@hotmail.com
aarthananyathu@hotmail.com




Nickon
Photo & Video
Digital Album
நிக்கொன்
போட்டோ & வீடியோ
டிஜிட்டல் அல்பம்
உங்கள் குடும்ப மற்றும்
சமூக நிகழ்வுகளை நினைவில்
நிறுத்தி, நிழற்படமாக்கிட...
Call: Vijay
416.554.8899
Facebook ID:
Nickon Studio




AIR CONDITONER INSTALLATION SALE
High -Efficiency Air Conditoner
Starting From
$1,899
HIGH EFFICIENCY HEATING & COOLING AIR SOLUTIONS
24h EMERGENCY SERVICES
A/C Leak Check & Refilling the Gas
Repair, Service & Installation
Ductless Air Conditions
Is Your Home Keeping You
COOL?
TOSHIBA
Carrier
LENNOX
Carrier, Lennox, Comfortstar
Trane, Ameristar, Goodman
FREE 10 Years
Parts Warranty
Furnance, Air Conditioner,Hot Water Tank, Tankless Water Heater, HRV
Fireplace, Attic Insulation, Duct Work, Gas Line For BBQ, Stove, Dryer
Call Now for
FREE ESTIMATE
S.Kumar 416-993-8001



# பொதுவாக்கெடுப்பு இன்று “பூகான்வீல்” நாளை “தமிழீழம்”!

பசிபிக் பெருங்கடலில் உள்ள பப்புவா நியூ கினியாவைச் சேர்ந்த ‘பூகான்வீல் தீவு’ தனி நாடாக மாறுவதற்கான தனது அரசியல் பெருவிருப்பினை 2019ம் ஆண்டு கட்டுப்படுத்தாத பொதுவாக்கெப்பு மூலம் வெளிப்படுத்திய மக்கள், தற்போது இரண்டாம் பொதுவாக்கெடுப்பின் மூலம் புதிய நாட்டை இப்பூமிப்பந்தில் பிரசவிக்க இருக கின்றனர்.

சாலமான் தீவுகளில் மிகப்பெரிய தீவு பூகான்வீல். சுமார் 10 ஆயிரம் சதுரக் கிலோ மீற்றர் பரப்பளவு கொண்ட இத்தீவில், அண்ணளவாக மூன்று இலட்சம் வரையாய பூர்வகுடி மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

உலகைச்சுற்றிவருவதில் ஆர்வம் கொண்டவர் பிரெஞ்சு கடற்படைத் தளபதியான லூயிஸ் அந்துவான் டு பூகான்வீல். இவர் இவர் உலகைச் சுற்றி வரும்போது 1768 யூன் 30ல் இந்தத் தீவில் தனது கால்களைப் பதித்ததோடு, இத்தீவிற்கு தனது பெயரைச் சூட்டினார். இதனால் இத்தீவிற்கு ‘பூகான்வீல்’ எனப் பெயர் வந்தது.

அதன் பின்னர் இந்தத் தீவு ஜேர்மனின் காலனித் துவதுக்கு சென்றது. முதலாம் உலகப்போரின் போது இதனை ஒவுஸ்திரேலியா தனது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்தது. இரண்டாம் உலகப் போர் நடைபெறும் வரை ஒவுஸ்திரேலியாவின் கட்டுப்பாட்டிலேயே இருந்தது.

இரண்டாம் உலகப்போரின் போது 1942ல் ஜப்பான் இந்தத் தீவைத் தனது கட்டுப்பாட்டிற்குள் கொண டவந்தது. இரண்டாம் உலகப்போர் காலத்தில் இந்தீவில் வாழ்ந்தவர்களுக்கு சம்பந்தப்படாத அமெரிக்காவும் - ஜப்பானும் இங்கு கடுமையாக மோதிக்கொண்டன.

இந்த இரு சக்திகளின் வல்லாதிக்க போட்டிச்சமருக்குள் அகப்பட்டு பெருமளவான இத்தீவின் மகக்ள் சாவடைந் திருந்தனர். இரண்டாம் உலகப் போர் முடிவில் இங்கு நிலைகொண்டிருந்த 23 ஆயிரம் ஜப்பான் படையினர் போர்க் கைதிகளாகினார்.




1947ம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபையால் பப்புவா நியூ கினாய தீவுக் கூட்டங்கள் ஒருங்கிணைக்கப்பட்டு ஒவுஸ்திரேலிய நிர்வாகத்தின் மேற்பார்வையில் கொண்டுவரப்பட்டது. இதன் பின்னர் சுதந்திரம் வழங் கப்பட்டபோதுதான் ‘பூகான்வீல்’ தனது அரசியல் இறை யாண்மையை மீண்டும் இழந்தது.

இத்தீவின் மக்களின் அரசியல் பெருவிருப்பாக தனிநாடாக அரசியல் இறைமையுடன் இருந்த இந்தத் தீவை, பப்புவா நியூ கினியாவுடன் 1975களில் ஒருங்கிணைத்து, அத்தீவு மக்களின் இறைமை யினைத்து ஒவுஸ்ரேலியா பறித்திருந்தது. ஆனால் ஒவுஸ் ரேலியாவின் இந் தஒருங்கி ணைப்பினை பூகான்வீன் மக்கள் ஏற்றுக் கொள்ளவில்லை. அத்தேசம் வலுவாக எதிர்த்தது.

பாப்புவாக்கினியாவுடன் ஒருங்கிணைப்புடன் தன்னை இணைத்துக்கொள்ள மறுத்து 1975ம் ஆண்டே தனது சுயநிர்ணய உரிமைக்கான முயற்சியில் இறங்கியது. தன்னை ‘வடக்கு சாலமான் குடியரசு’ என்று அறிவித்தது.

ஆனால், இந்தச் சுயநிர்ணய உரிமைக்கு, தனிநாட்டுப் பிரகடனத்திற்கு சர்வதேச அங்கீகாரம் கிடைக்கவில்லை.




இதனால், ஏற்பட்ட முரண்பாடுகளை அடுத்து 1976ல் உள்நாட்டுத் தீர்வு எட்டப்பட்டது.

ஆனால் இந்த உடன்பாடு முறிந்துபோனதால், 1988ம் ஆண்டு சுதந்திரத்திற்கான ஆயதம் தாங்கிய விடுதலைப் போர் தொடங்கியது. 1998 வரை சுமார் 10 ஆண்டுகளுக்கு மேலாக நீடித்த இந்த உள்நாட்டுப் போரில் 15 ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் கொல் லப்பட்டனர். இத்தீவின் மக்கள் தொகைக்கு இது மிகப் பெரும் இழப்பு. இதனைவிட பெருமளவானவர்கள் உயிரிழப்பைத் தவிர்க்க தீவைவிட்டு ஏதிலிகளாக வெளியேறினார்கள். ஆனால் தங்கள் தாயகத்தை அமைக்கும் சுயநிர்ணய விடுதலைப் போராட்டத்தை மக்கள் கைவிடவில்லை.

1997ம் ஆண்டு நியூ சிலாந்தின் முயற்சியினால் சமா தானப் பேச்சுக்கள் தொடங்கப்பட்டன. ஒவுஸ்திரேலிய தலைமையின் கீழ் ஒரு பன்னாட்டு அமைதிக் கண் காணிப்புக் குழு அமைக்கப்பட்டது. இந்தப் பேச்சுக்கள் பூகான்வீலின் சுயாட்சிக்கு வழிவகுத்தன. 2001ம் ஆண்டு, பப்புவா நியூ கினியாவிலிருந்து சுதந்திரம் பெறுவதற்கான பொதுவாக்கெடுப்பு நடத்துவதற்கு வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்படும் என்று வாக்குறுதி அளிக் கப்பட்டு, அமைதி ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. இதன் மூலம் 2001ம் ஆண்டு உளநாட்டுப் போர் முடிவுக்குக் கொண்டு வரபப்ட்டது.

இதனையடுத்து 2019ம் ஆண்டு, கடந்த நவம்பர் 23ம் திகதி முதல் டிசம்பர் 7ம் திகதி வரை கட்டுப்படுத்தாத பொதுவாக்கெடுப்பு நடைபெற்றன.

பூகான்வீலை தனி நாடாக அறிவிப்பதா? அல்லது ப்ப்புவா நியூ கினியாவின் ஆளுகைக்கு உட்பட்ட சுயாட்சிப் பிரதேசமாக அறிவிப்பதா? என்ற இரண்டு நிலைப் பாட்டை மக்களிடத்தில் முன்வைத்து நடத்தப்பட்டது.

தாங்கள் தனிநாடாக இருக்க விரும்புகின்றோம் என்ற தமது அரசியல் பெருவிருப்பினை பொதுவாக்கெடுப்பின் மூலம் 98.31 வீதமான மக்கள் வெளிப்படுத்தினர்.

இருப்பினும் நடைபெற்ற இந்த பொதுவாக்கொடுப்பின் முடிவுகளை பப்புவா நியூ கினியாவுக்கு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்ற கடப்பாட்டை கொண்டிராத ஓர் முதல்கட்ட பொதுவாக்கெடுப்பாக இது அமைந்திருந்தது.

ஏற்கனவே ஏற்றுக் கொள்ளப்பட அமைதி ஒப்பந்ததுக்கு அமைய விரைவில் பொதுவாக்கொடுப்பு நடைபெற இருக்கின்றது. அதிலும் சுதந்திரமும் இறைமையும் கொண்ட தனியரசுக்குரிய தமது அரசியல் பெரு விருப்பினையே மக்கள் வெளிப்படுத்துவார்கள் என்பது தெளிவாகின்றது.

பசுபிக் பெருங்கடலில் ஓர் சிறு தீவாக இருந்தாலும், சிறிய மக்கள் கூட்டமாக இருந்தாலும், தமது அரசியல் இறைமையில் அவர்கள் காட்டிய உறுதி என்பது ஈழத்தமிழர் தேசத்துக்கும் பொருத்தமான ஒன்றே.

பெரும் இன அழிப்பின் ஒன்றின் ஊடாக தமிழர் தேசத் தை ஆக்கிரமிப்புச் செய்துள்ள சிங்கள பேரினவாதம் தமிழர் தேசத்தின் அரசியல் இறைமையினை பறித் துள்ளது. இனப்படுகொலைக்கான பரிகாரநீதியாக சுதந்திரமும் இறைமையும் கொண்ட தமிழர் தேசத்தின் அரசியல் பெருவிருப்பினை வெளிப்படுத்துவதற்குரிய பொறி முறையாக பொதுவாக்கொடுப்பே தேவை என்பது நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் உறுதியாக நிலைப்பாடகவுள்ளது.

வன்முறையற்ற வகையில் ஜனநாயகரீதியில் மக்கள் தமது அரசியல் விருப்பினை வெளிப்படுத்துவற்குரிய பொதுவாக்கெடுப்பு எனும் பொறிமுறையினை உலகம் நிராகரித்துவிட முடியாது.

11.06.94 நினைவுநாள்



## மாமனிதர் பேராசிரியர் துரைராசா

பேராசிரியர் அழகையா துரைராசா (யுடயபபையா வுாரசயசையதயா) ஈழத்தின் கல்விமானும் பொறியியலாளரும் ஆவார். இவர் இருமுறை பேராதனைப் பல்கலைக்கழகத்தில் பொறியியற்பீட பீடாதிபதியாகவும் பின்னர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணிபுரிந்தவர். யாழ்ப்பாணம் வடமராட்சியில் இமையாணன் என்னும் ஊரிலே வேலுப்பிள்ளை அழகையா-செல்லம்மா அழகையா தம்பதிகளுக்கு மகனாகப் பிறந்தார். தனது ஆரம்பக்கல்வியை உடுப்பிட்டி அமெரிக்கன் மிசன் கல்லூரியிலும் உயர்தரக்கல்வியை ஹாட்லிக் கல்லூரியிலும் பட்டப்படிப்பை பேராதனைப் பல்கலைக்கழகத்திலும் பட்ட மேற்படிப்பை லண்டன் கேம்பிறிச் கலாசாலையிலும் கற்றார். 'துரை விதி' என்னும் மணல் துறை சார்ந்த விதி ஒன்றையும் நிறுவினார். இன்றும் கூட குடிசார் பொறியியலில் கற்பிக்கப்படும் ஊயஅ- உடயல டழஉரள ஆனது துரை விதியிலிருந்தே பெறப்பட்டது. பேராதனைப் பல்கலைக்கழகத்தில் காணப்படும் 'அக்பர் பாலம்' பேராசிரியரினால் நிர்மாணிக்கப்பட்டது. சிங்களப் பேராசிரியர் ஒருவரின் சவாலை ஏற்று மகாவலி ஆற்றில் ஒரேயொரு தூணை மட்டும் நிறுவி இப்பாலம் கட்டப்பட்டது. 'துரைராசா பாலம்' என அழைக்கப்பட வேண்டிய அந்தப் பாலம் இன்று 'அக்பர் பாலம்' என்றே அழைக்கப்படுகிறது. ஈழ வரலாற்றிலே முதன் முதலாய் மாமனிதர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது பேராசிரியருக்கே.

Professor Alagiah Thurairajah is an Eelam scholar and engineer. He has twice served as the Dean of the Faculty of Engineering at the University of Peradeniya and later as the Vice Chancellor of the University of Jaffna. He was born in Imayanan, Vadamarachchi, Jaffna. His parents are Velupillai Alakaiya-Sellamma Alakaiya. He was educated at the American Mission College, Udupiddy and Hartley College. He had his postgraduate studies at the University of Peradeniya, London Cambridge College. He also established a sand industry rule called the 'Durai Vidhi.' Cam- clay locus rule, which is still taught in civil engineering today, is derived from the Durai Vidhi. The 'Akbar Bridge' at the University of Peradeniya was built by Professor. The bridge was built with only one pillar by him on the Mahawali river, after accepting the challenge of a Sinhalese professor. The bridge which was supposed to be called 'Thurairasa Bridge' is today known as 'Akbar Bridge.' In the history of Tamil Eelam, for the first time, Professor Alagiah Thurairajah was posthumously awarded the Maamanithar (Great Man) honour by the LTTE.






12.06.91 நினைவுநாள்



## கொக்கட்டிச்சோலை படுகொலைகள்

கொக்கட்டிச்சோலை படுகொலைகள் இலங்கையின் கிழக்கு மாகாணத்தில் மட்டக்களப்புநகருக்கு அருகில் உள்ள கொக்கட்டிச்சோலை என்ற ஊரில் தமிழ் மக்கள் மீது 1991 யூன் 12 அன்று நடத்தப்பட்டது. இதன் போது மொத்தம் 152 பொது மக்கள் கொல்லப்பட்டனர். இப்படுகொலைகளை விசாரணை செய்ய இலங்கை அரசு சனாதிபதி ஆணைக்குழு ஒன்றை நியமித்தது. படுகொலைகளை நடத்திய இராணுவத்தினரைக் கட்டுப்படுத்த கட்டளை அதிகாரி தவறி விட்டதாக ஆணைக்குழு கண்டறிந்தது. அவரைப் பதவியில் இருந்து அகற்றுமாறு ஆணைக்குழு பரிந்துரைத்தது. அத்துடன் படுகொலைகளில் ஈடுபட்ட இலங்கை இராணுவத்தினரில் 19 பேரை ஆணைக்குழு அடையாளம் கண்டது. கொழும்பில் நடத்தப்பட்ட இராணுவ விசாரணைகளில் இந்தப் 19 பேரும் குற்றவாளிகளாகக் கண்டறிந்த போதிலும், பின்னர் அவர்கள் அனைவரும் விடுவிக்கப்பட்டனர் இலங்கையின் உள்நாட்டுப் போரினால் கொக்கட்டிச்சோலை மிகவும் பாதிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது

The Kokkadichcholai massacre was carried out on June 12, 1991 in Kokkadichcholai, a town near Batticaloa in the Eastern Province of Sri Lanka. A total of 152 civilians were killed by Sri Lankan Army. The Sri Lankan government has appointed a Presidential Commission to investigate Kokkadichcholai massacre. The commission found that the Commanding Officer had failed to control the soldiers who carried out the gruesome massacre. The commission has recommended that Commanding Officer be removed from office. The commission also identified 19 Sri Lankan soldiers involved in the massacre. Although all 19 were found guilty during military trail in Colombo, they were later released. It is pertinent to note that Kokkadichcholai was badly affected during the Sri Lankan civil war.







# தமிழ் ஈழம்: நாட்டு எல்லைகள்




**மூன்றாவது**

**மேலை நாட்டவரும் தமிழ் ஈழ நிலங்களும்**

**போர்த்துக்கேயர் காலம் கி.பி. 1619–1638**

போர்த்துக்கேய நாட்டைச் சேர்ந்த வாசுக்கொட காமா கி பி. 1495 ம் ஆண்டில் இந்திய துணைக் கண்டத்துக்கு வந்தார். இந்தியாவிற்குக் கடல் வழி வருகின்ற பாதையை இவர் தொடக்கி வைத்தார். இவரைத் தொடர்ந்து மேலை நாட்டவர்கள் இந்தியத் துணைக்கண்டத்திற்குப் பெருமளவில் வந்தனர்.

முதலில் போர்த்துக்கேயர்கள் வந்தனர். வாணி பத்தை நோக்கமாகக்கொண்டு வந்த இவர்கள் பின்னர் ஆட்சியுரிமைகளில் தலையிடத் தொடங்கினர். சிறிது காலத்தின் பின் நாடுகளின் அரசுரிமைகளையும் தமதாக்கிக் கொண்டனர்.

இலங்கைத் தீவுக்குப் போர்த்துக்கேயர் வந்த பொழுது, மூன்று அரசுகள் ஆட்சி செய்துகொண்டிருந்தன. யாழ்ப்பாணத்து நல்லுரைத் தலைநகராகக் கொண்ட தமிழ் ஈழ அரசு, கோட்டையைத் தலைநகராகக்கொண்ட கீழ்நாட்டுச் சிங்கள அரசு, கண்டியைத் தலை நகராகக்கொண்ட மலைநாட்டுச் சிங்கள அரசு என்பன அம் மூன்று அரசுகளாகும்.

போர்த்துக்கேயர் முதலில் கோட்டையைத் தலைநகராகக் கொண்ட கீழ்நாட்டுச் சிங்கள அரசைத் தமது ஆட்சியின் கீழ் கொண்டு வந்தார்கள். பின்னர் கி. பி. 1619 ஆனி மாதத்தில், தமிழ் ஈழ அரசின் இறைமை போர்த்துக்கேயரைச் சென்றடைந்தது. தமிழ் ஈழ அரசின் கடைசி மன்னனான சங்கிலி மன்னன் போர்த்துக்கேயரால் சிறைப்பிடிக்கப்பட்டு நாடுகடத்தப்பட்டுத் தூக்கிலிடப்பட்டான்.

ஆரியச் சக்கரவர்த்திகளின் ஆட்சிக் காலத்திலேயே கிழக்குக் கரையோரத்தில் உள்ள மூன்று வன்னிமை கட்கான ஆட்சித் தலைவர்கள், ஆரியச் சக்கரவர்த்திகளின் மேலாணையை ஏற்பதை விடுத்துக் கண்டி அரசனின் மேலாணையை எற்றிருந்தனர். நல்லூர் அரசு வீழ்ச்சியடைந்ததும், முள்ளியவளைப் பகுதியில் ஆட்சிசெய்த அடங்காப்பற்று வன்னிமை போர்த்துக்கேய ஆட்சியை ஏற்றுக்கொள்ள மறுத்து எந்த அரசின் மேலாணையையும் ஏற்றுக்கொள்ளாத, ஆட்சிப்பிரிவாக் அமைந்தது. நல்லூர் அரசின் வீழ்ச்சியால், யாழ்ப்பாணக் குடாநாடும், மன்னாரையொட்டிய மேற்குக் கரையோரப் பகுதிகளும் போர்த்துக்கேயரின் நேரடி ஆட்சியின்கீழ் வந்த நிலப்பகுதிகளாக அமைந்தன.

போர்த்துக்கேயர் காலத்தில் இலங் கைத்தீவில் உள்ள நிலப்பகுதி பல் வேறு ஆட்சிகளின் கீழ் அமைந்தது. வடக்கே, குடாநாட்டையும், மேற்குக் கரையோரத்தையும் போர்த்துக்கேயர் ஆட்சிபுரிந்தனர். இதற்கெனத் தனியான ஆட்சி அமைப்பை நிறுவினர். கொழும்பில் உள்ள ஆட்சித் தலைவரை மேலாக ஏற்றுக் கொண்டாலும், யாழ்ப்பான அரசை ஆட்சி செய்த போர்த்துக்கேயத் தளபதி, நீதி முறைகளையும், ஆட்சி முறைகளையும் தமிழ் ஈழ அரசர்களான ஆரியச்சக்கரவர்த்திகளின் வழமைக்கேற்ப நடாத்தினர்.

குடாநாட்டுக்குத் தெற்கேயுள்ள வன்னிப்பகுதி கள் போர்த்துக்கேயரின் மேலாணையை ஏற்றுக் கொள்ளவில்லை. போர்த்துக்கேயருக்குத் திறை கொடுக்கவில்லை கண்டி அரசனின் மேலாணையை ஏற்றுக்கொள்ளவில்லை. கண்டி அரசனுக்குத் திறை கொடுக்கவில்லை. எந்த அரசின் பாதுகாப்பையும் நாடவில்லை. தன்னாட்சியுடைய வன்னிமைகளாக, அத்தலைவர்கள் ஆட்சி செய்தனர்.

கிழக்குக் கரையோரத்தில் உள்ள கொட்டியாற்றுப் பற்று வன்னிமை, பழுகாம வன்னிமை பாணமை வன்னிமை ஆகிய மூன்றும் கண்டி அரசனின் மேலாணையை ஏற்றிருந்தன; பாதுகாப்பைக் கோரியிருந்தன; எனினும், தன்னுட்சியுரிமையுள்ள தமிழ் ஆட்சிப் பிரிவுகளாகச் செயற்பட்டன.

மாவலி கங்கைக்குக் கிழக்கேயுள்ள நிலப்பகுதிகள், கும்புக்கன் ஆற்றுக்கு வடக்கேயுள்ள நிலப்பகுதிகள், இவ் வன்னிமைகளின் ஆட்சிக்குட்பட்டிருந்தன. இவ்வன்னிமைகள், கண்டி அரசனுக்குத் திறை செலுத்திக் கொண்டிருந்தன.

பல்வேறு ஆட்சிகளின் கீழ் ஆளப்பட்டிருப்பினும், தமிழ் ஈழ நிலப்பகுதியின் தமிழ்த் தன்மை மாறாதிருந்தமை குறிப்பிடத்தக்கது.

**ஒல்லாந்தர் காலம் கி. பி. 1638–1795**

ஒல்லாந்தரும் மேலைநாட்டவரே ஏலம் கறுவா போன்ற வாசனைத் திரவியங்களை வாங்க வந்தவர்கள் நாடுகளின் ஆட்சியுரிமையில் தலையிட்டார்கள். கி. பி. 1638 ல் மட்டக்களப்பைத் தாக்கி, அங்கு முதன் முதலில் கோட்டை அமைத்தாரகள். கி. பி. 1656-ல் கொழும்பைத் தாக்கி வெற்றி பெற்றார்கள். கி. பி. 1658-ல் யாழ்ப் பாணத்தைத் தாக்கி வெற்றி பெற்றார்கள். படிப்படியாகப் போர்த்துகேயரை, இலங்கையில் இருந்து ஒல்லாந்தர் விரட்டினார்கள். தீவின் கரையோரப்பகுதிகளைத் தமது ஆட்சிக்குக் கீழ் கொண்டுவந்தார்கள்.

**றொபேட் நொக்ஸ்**

கி. பி. 1660-ம் ஆண்டில் றொபேட் நொக்ஸ் (ROBERT KNOX) என்ற ஆங்கிலேயர், திருகோணமலையில் வைத்துக் கண்டி அரசனின் படைத்தளபதிகளால் சிறைப் பிடிக்கப்பட்டார். அப்பொழுது கொட்டியாற்றுப் பற்று வன்னிமை கண்டியரசனின் மேலாணயை ஏற்றிருந்தது கி. பி. 1679-ம் ஆண்டு வரை, றொபேட் நொக்ஸ் கண்டி யரசனின் கைதியாக, வாழ்ந்தார். வாரியப்பொலைக்கு அண்மையில் உள்ள பண்டார கொஸ்வத்தையில் சிலகாலம் வாழ்ந்தார்.

1679-ல் றொபேட் நொக்ஸ் கண்டியரசனின் ஆணையில் இருந்து தப்பியோடினர். தப்பியோடிய பின், தனது சிறை வாழ்வுபற்றி விரிவான நூல் ஒன்றை எழுதினர்.

றொபேட் நொக்ஸ் தனது நூலில் இலங்கைத்தீவில் தமிழர்கள் தனியான நாட்டினமாக வாழ்வதைக் குறிப்பிட்டுள்ளார். சிங்கள நாட்டினத்தினரை விடச் சிறிது நாகரீகமுடையவர்களாகத் தமிழர்கள் வாழ்ந்தமை யையும் குறிப்பிட்டுள்ளார்.

தப்பியோடும் வழியில் அனுராதபுரத்தை அடைந்த றொபேட் நொக்ஸ், அங்கு சிங்கள மொழி தெரிந்தவர்கள் இல்லாமையைக் குறிப்பிட்டுச் சந்தைகளிலும் கடைத் தெருவிலும் ஊர்களிலும் தமிழர்கள் வாழ்ந்தமை பற்றிக் கூறியுள்ளார். அனுராதபுரம் கண்டி அரசனின் ஆட்சிக்குட்பட்டிருந்தது. அனுராதபு ரப் பகுதியின் ஆட்சித் தலை வராக இருந்தவர் சிங்கள மொழியைத் தெரிந்திராத தமிழர். றொபேட் நொக்ஸ் அவருடன் உரையாடிய பொழுது, மொழிபெயர்ப்பாளர் ஒருவரின் உதவியை நாடினர்.

அனுராதபுரத்தில் இருந்து அருவி ஆற்றின் கரை யோரமாகக் காட்டுக்குள்ளாக நடந்து அரிப்புக்கு வந்துசேர்ந்தார். அனுராதபுரத்தில் இருந்து மன்னார் செல்லும் நெடுஞ்சாலையில் சென்றல் தமிழரைக் சந்திக் கநேரிடும் என றொபேட் நொக்ஸ் அஞ்சினார், மேலும் அக்காலத்தில் வன்னிப் பகுதியைக் கைலாய வன்னியன் ஆட்சி செய்தமையை நொக்ஸ் குறிப்பிடுகின்றார். இந்த ஆட்சித் தலைவன் தமிழனாக இருந்தமை, வன்னியில் உள்ள தமிழ் நிலப்பகுதியை ஆட்சி செய்தமை, ஒல்லாந்தருக்கோ, கண்டி அரசனுக்கோ திறை செலுத்தாத ஆட்சியைச் செலுத்திய விபரங்கள் றொபேட் நொக்ஸின் பயணக் கட்டுரையில் உண்டு.

கைலாய வன்னியன் கண்டியரசனுடன் நட்புப் பூண்டிருந்தான். எனினும் திறை செலுத்தவில்லை. ஒல்லாந்தருடன் பகைமை பூண்டிருந்தான். தன்னாட் சியுள்ள, சுதந்திரமுள்ள அரசை அமைத்து ஆட்சி செய்த ஆட்சித் தலைவன், இளவரசன் என இவனை றொபேட் நொக்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைத்தீவின் படத்தையும் றொபேட் நொக்ஸ் வரைந்துள்ளார். அப்படத்திலே கைலாய வன்னியனின் ஆட்சிக்குட்பட்ட பகுதிகளைத் தெளிவாகக் காட்டியுள்ளார் COYLET WANNEA என்ற எழுத்துடன் குடாநாட்டுக்குத் தெற்கேயுள்ள வன்னிப் பகுதியும், கிழக்குக் கரையோரமாக உள்ள வன்னிமைகளும் தமிழ் ஆட்சித் தலைவனான கைலாய வன்னியனின் ஆட்சியின் கீழ் இருந்தமையை றொபேட் நொக்ஸ் குறிப்பிட்டுள்ளார்.

**ரேலன்ட் குறிப்புகள்**

ஒல்லாந்தரின் ஆட்சிக்காலத்தில் இலங்கைத்தீவிற்கு வந்து, இத்தீவின் தன்மைகளைப்பற்றி எழுதியவர்களுள் அட்றியன் ரேலன்ட் (ADREAN RELAND) என்பவரும் ஒருவர். இவர் ஒரு கீழைத்தேயப் பண்பாடு பற்றிக் கற்ற ஒல்லாந்து தேச அறிஞர். பல மொழிகளைப் பயின்றவர். தமிழ், சிங்களம், மலாய் மொழிகள் பற்றி இவர் எழுதியுள்ளார். 17-ம் நூறறாண்டின் இறுதியில் இவர் இலங்கைக்கு வந்திருந்தார். இவரின் குறிப்புக்களாவன:

"இந்தத் தீவை விட்டுப் புறப்படுமுன் நான் தமிழ்மொழி பற்றியும் சிறிது கூற வேண்டும். இந்தத் தீவின் பெரும்பகுதி தமிழர்களின் வாழ்விடமாக உள்ளது.

இந்தப்பகுதி கைலாய வன்னியனால் (COILAT WANBA) ஆட்சி செய்யப்படுவதுடன், அவனின் நாடு எனவும் அழைக கப்படுகின்றது. இத்துடன் இணைந்துள்ள படத்தில் கைலாய வன்னியின் ஆட்சிப் பிரதேசத்தைக் காணலாம். இவர்கள் சிங்களவர்களின் ஆட்சிக்குட்பட்ட குடிமக்கள் அல்லர்; எங்கள் (ஒல்லாந்தர்) ஆட்சிக்குட்பட்ட வருமல்லர். கரையோரமாக உள்ள நிலம் அனைத்தும் இந்த இளவரசனுக்கே (கைலாய வன்னியன்) உரியது. கரையோரப் பகுதிகளில் உள்ள மக்களுட் பெரும் பான்மையினர் தமிழ்மொழியைப் பேசுகின்றனர். நீர்கொழும்பு நகரத்திலிருந்து தெற்கே தேவேந்திரமுனை வரை உள்ள கரையோரப் பகுதிகளில் சிங்கள மொழி பேசப்படுகின்றது. யாழ்ப்பாணப் பகுதி மாவட்டத்திலும், கரை யோரத்திலுள்ள துணைக்கண்டத்துக்கு அண்மையில் உள்ள ஏனைய மாவட்டங்களிலும் தமிழ்மொழி பேச்சு வழக்கில் உள்ளது.'




படம் இரண்டு: றொபெட் நொக்ஸ்சன் இலங்கைத் தீவுப் படம் (கி.பி. 1679)

கி.பி. 1660 வரை கண்டியரசனின் கைதியாக இருந்த றொபெட் நொக்ஸ், தமது இலங்கை அனுபவங்களைப் பற்றி எழுதி வெளியிட்ட நூலில் உள்ள படம். ஐகலாய வன்னிமையின் ஆதிக்க எல்லைகளைப் படத்தில் காட்டியுள்ளார். புள்ளிக்கோடாக அருவியாற்றின் கீழிருந்து தொடங்கும் அந்த எல்லை, வடக்கின் வன்னிப் பகுதியையும், கிழக்கின் கொட்டியாறு, பாணமை வன்னிமைகளையும். உள்ளடக்குகின்றது. ஐகலாய வன்னியனின் நாடு (Coylot Wannes Country) எனக் குறிக்கப்பட்டுள்ளது.

**சுவைட்சர் குறிப்புகள்**

ஒல்லாந்தர் காலத்தில் இலங்கைத் தீவுக்கு வந்து சென்றவர்களுள் கிறிஸ்ரோபர் சுவைட்சர் (CHRISTOPHER SCHEWITZER) என்பவர் விட்டுச் சென்ற குறிப்புகளும் முக்கியமானவை. அவர் கூறுவதாவது:

"இந்தத் தீவின் மற்றக் குடிகளான தமிழர்கள் காலி, மட்டக்களப்பு, திருகோணமலை, மன்னார், யாழ்ப்பாணம், அரிப்பு, கற்பிட்டியிலிருந்து நீர்கொழும்பு வரையும் வாழ்கிறார்கள். வன்னி நாட்டிலுள்ள தமிழர்களைத் தவிர ஏனைய தமிழர்கள் ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் உள்ளார்கள். வன்னி நாட்டிலுள்ள தமிழர்கள் தமக்கென ஓர் அரசைக் கொண்டுள்ளார்கள் "

**ஒல்லாந்தரின் ஆட்சிப் பிரிவுகள்**

கைலாய வன்னியன் அடங்கா அரசுரிமை கொண்டு ஒல்லாந்தரின் வலைகளில் விழாமல் வன்னிப்பகுதியை ஆட்சிசெய்தான். வன்னிப்பகுதி தவிர்ந்த ஏனைய கரையோரப் பகுதிகள் ஒல்லாந்தரின் ஆட்சியின் கீழ் இருந்தன.

இலங்கைத் தீவில் இரு இன வழி நாட்டினங்கள் இருந்தன. சிங்கள நாட்டினம் இருந்தது. தமிழ் நாட்டிமை இருந்தது மொழிவழியில் மட்டுமல்ல மதம், வாழ்வு முறை பண்பாடு, நீதி, அரசு ஆட்சி முறை முதலிய எல்லா வழிகளிலும் இந்த நாட்டினங்கள் வேறுபட்டிருந்தன. சிறப்பாக இந்த இரு நாட்டினங்களும் பிரித்தறியக் கூடியதும், வேறு வேருக்கப் படக் கூடியதுமான தனித்துவம் உடைய நிலப் பகுதிகளைத் கொண்டிருந்தன.

கண்டி அரசனின் ஆட்சிக்கு உட்பட்ட நிலப் பகுதிக்ளிலும், வடமத்திய, தெற்கு, தென்மேற்குப் பகுதிகளிலும் சிங்கள நாட்டினத்திர் வாழ்ந்தனர்.

தமிழ் நாட்டினத்தினர், ஒல்லாந்தரின் ஆட்சிக் குஉட்பட்ட நிலப்பகுதிகளிலும், கைலாய வன்னியன் என்ற ஆட்சித்தலைவனின் ஆட்சிக்கு உப்பட்ட நிலப்பகுதிகளிலும் வாழ்ந்தனர், தீவின் வட மேற்கு, வடக்கு, கிழக்குக் கரையோர நிலப்பகுதிகளில் தமிழர்கள் வாழ்ந்தனர்.

சிங்கள நாட்டினத்துக்கும் தமிழ் நாட்டினத்துக்கும் உள்ள அடிப்படை வேறுபாடுகளையும், தனித்துவமான நிலப் பகுதிகளையும் தெரிந்து கொண்ட ஒல்லாந்தர் நீதி, ஆட்சி முறை என்பன தனித் தனியாக நிர்வாகிக்கப்பட ஏற்ற வகையில் ஆட்சிய மைத்தனர்.

இலங்கைத் தீவின் கரையோர நிலப்பகுதிகள் ஒல்லாந்தரால் ஆறு ஆட்சி மாவட்டங்களாகப் பிரிக்கப்பட்டன. ஒவ்வொரு ஆட்சிப்பிரிவுக்கும் ஒவ்வொரு ஆட்சித் தலைவர் நியமிக்கப்பட்டார்.

பெந்தோட்டை ஆறு தொடக்கம் வடக்கே தெதுறு ஒயாவரை உள்ள கொழும்பு ஆட்சி மாவட்டம். தெதுறு ஒயா தொடக்கம் மோதரகம் ஆறு வரையுள்ள புத்தளம் - கற்பிட்டி ஆட்சி மாவட்டம், மோதரகம் ஆறு தொடக்கம் வடக்கே யாழ்ப் பாணக் குடாநாடு, வன்னிப்பகுதி என்பனவற்றை உள்ளடக்கிக் கிழக்கே கொக்கிளாய் வரையில் உள்ள பரந்த நிலப்பகுதி யாழ்ப் பாண மாவட்டம், கொக்கிளாய் தொடக்கம் கிழக்குக் கரையோர மாகத் தெற்கே வெருகல் ஆறு வரையும் உள்ள திருகோணமலை ஆட்சி மாவட்டம், வெருகல் ஆற்றில் இருந்து கரையோர மாகத் தெற்கே கும்புக்கன் ஆறு வரையுமுள்ள மட்டக்களப்பு ஆட்சி மாவட்டம், கும்புக்கன் ஆற்றில் இருந்து தெற்கேயும் உரோகனமும் பெந்தோட்டை ஆறுவரை பரந்ததுமான காலி ஆட்சி மாவட்டம்.

இந்த ஆறு ஆட்சி மாவட் டங்களில் ஒல்வொன்றுக்கும் ஒவ்வொரு ஆட்சித் தலைவர் இருந்தனர். இந்த ஆறு ஆட்சித் தலைவர்களும் கொழும்பில் உள்ள ஒல்லாந்த ஆளுநரினால் இணைத்து ஆட்சி செய்யப்பட்டனர். சாவகத்தில், ஜகர்த்தாவில் ஒல்லாந்தரின் கிழக்கிந்தியக் கம்பனியின் தலைமை நிலையம் இருந்தது. அவர்கள் அங்கிருந்து ஆளுநரைக் கொழும்புக்கு அனுப்பனார்கள்.

நீதியை நெறிப்படுத்துவதற்காக், மூன்று நீதிப்பிரிவுகளை ஒல்லாந்தர் ஏற்படுத்தினுர், கொழும்பு ஆட்சி மாவட்டம் புத்தளம் ஆட்சி மாவட்டம் இரண்டும் ஒரே நீதிப்பிரிவாக இணைக்கப்பட்டன, பெந்தோட்டை ஆற்றில் இருந்து மோதரகம் ஆறுவரையுள்ள கரையோர நிலப்பகுதிகள், அங்கு வாழ்ந்த மக்கள் இந்நீதிப்பிரிவுக்குள் அடங்கினர். கொழும்பு இதன் தலைமை நிலையம், யாழ்ப்பாண ஆட்சி மாவட்டம் திருகோணமலை ஆட்சி மாவட்டம், மட்டக் களப்பு ஆட்சி மாவட்டம் ஆகிய மூன்றும் ஒரே நீதிப் பிரிவுக்குள் இணைக்கப்பட்டன. மோதரகம் ஆற்றில் இருந்து கும்புக்கன் ஆறு வரையுள்ள வடக்குக் கிழக்குப் பகுதியே இந்த நீதிப்பிரிவு, யாழ்ப்பாணம் இதன் தலைமை நிலையம்.

காலி ஆட்சி மாவட்டம் தனியான நீதிப்பிரிவு, கும்புக்கன் ஆற்றில் இருந்து பெந்தோட்டை ஆறு வரையுள்ள பகுதியே இந்த நீதிப்பிரிவு. காலி இதன் தலைமை நிலையம், சிங் களவர்கட்கெனத் தனியான நீதிப்பிரிவுகள் ஏற்பட்டன. தமிழர்கட்கெனத் தனியான நீதிப்பிரிவு ஏற்படுத்தப்பட்டது. ஜோகன்ஸ் சைமன்ஸ் என்ற ஒல்லாந்த ஆளுநர் (கி. பி. 1703-1707) யாழ்ப்பாணத்து மக்களின் வழமைகள், நீதி முறைகள் தனியானவை என்பதை அறிந்து அவற்றைத்




படம் மூன்று: ஒல்லாந்தர் கால ஆட்சி மாவட்டங்கள் (சே.டியு. பெரோனின் படத்தைத் தழுவிப் பேராசிரியர் நடராசா வரைந்த படத்தின் தழுவல்) ஒல்லாந்தர் காலத்தில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய மூன்று ஆட்சி மாவட்டங்களும் தமிழர் நிலப் பகுதிகளாகக் கருதப்பட்டு ஒரே நீதி மாவட்டமாக ஆட்சி செய்யப்பட்டது.

தொகுப்பித்தார். தேசவழமை என்ற பெயரில் வெளியிட்டார். அதற்கமைய நீதி செலுத்தினார், ஆட்சி மாவட்டங்களில் கூட யாழ்ப்பாணம் திருகோணமலை, மட்டக்களப்பு, புத்தளம்-கற்பிட்டி என்பன ஒரே மாதிரியாகத் தமிழரின் ஆட்சி முறைக் கேற்ப ஆட்சி செய்யப்பட்டன், இலங்கைத் தீவில் இருவேறு நாட்டினங்கள் இருந்தன. இவை தனித்தனி அரசுகளால் ஆட்சி செய்யட்பட்டன. வெவ்வேறான ஆட்சி முறையைப் பின்பற்றின. வெவ்வேறான நீதிமுறையைப் பின்பற்றின. வெவ் வேறான வாழ்வு முறைகளைக் கொண்டிருந்தன. மொழி, பண்பாடு, சமயம் என்பவைற்றில் வேறுபட் டிருந்தன.

இவற்றை ஒல்லாந்தர் கவனத்தில் எடுத்துக் கொண டார்கள். எனவே அந்த இரு நாட்டினங்களும் தனித் தனியாக ஆட்சி செய்யப்பட வேண்டும். எனக் கருதி னார்கள். ஆட்சி முறையின் தனித்துவத்தைப் பேணி னார்கள் நீதி முறையின் தனித்துவத்தைப் பேணினார்கள்.

இதனால் ஒல்லாந்தர் காலத்தில் (1638-1795) தமிழ் ஈழநிலப்பகுதிகள் தனியான அமைந்திருந்தமை ஏற்றுக் கொள்ளப்பட்டது. புத்தளத்தில் இருந்து கும்புக்கன் ஆறுவரை பரந்திருந்த நிலப் பகுதி தமிழரின் நிலப்பகுதி என்பதும் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

**பிரிட்டிஷார் காலம் (கி. பி. 1796 –1947)**

ஒல்லாந்தர் ஆட்சியைத் தொடர்ந்து, இலங் கைத் தீவின் கரையோரப் பகுதிகள் கி. பி. 1796-ல் பிரிட்டிஷாரின் ஆட்சியின் கீழ் வந்தது. 1619-ல் போர்த்துகேய அரசைக் சென்றடைந்த தமிழ் ஈழ இறைமை 1658-ல் ஒல்லாந் தரிடம் சென்றடைந்த 1795-ல் பிரிட்டி ஷாரிடம் சென்றடைந்தது.

பிரிட்டிஷார், திருகோணமலைத் துறைமுகத் தினைத் தமதாக்கிக் கொள்ள வேண்டும் என எண்ணம் கொண்டார்கள். இந்திய துணைக்கண்டம், தென் கிழக்காசியா ஆகிய நாடுகளில் தமது வர்த்தகத்தைப் பெருக்கவும், தமது ஆட்சியை நிலைநாட்டவும் திரு கோணமலைத் துறைமுகம் சிறந்த அடித் தளமாக அமையும் எனக் கருதினார்கள். இலங்கை தீவின் எனைய பகுதிகளிலோ, வர்த்தகத்திலோ அவர்கள் அதிகம் நாட்டம் கொள்ளவில்லை.

கி. பி. 1795-ல் திருகோணமலையைத் தாக்கி வெற் றிபெற்ற பிரிட்டிஷார் படிப்படியாக, மட்டக்களப்பு, காலி, மாத்தறை, பருத்தித்துறை யாழ்ப்பாணம், மன்னா ர் அரிப்பு கல்பிட்டி ஆகிய கோட்டைகளை ஒல்லாந்தரிடமிருந்து கைப்பற்றி னார்கள். 1796 பெப்ருவரியில் கொழும்புக் கோட்டையைத் தாக்கி வெற்றி பெற்றார்கள். இலங்கையின் கரையோரப்பகுதி முழுவதும் ஒல்லாந்தரின் ஆட்சியில் இருந்து பிரிட்டிஷாருக்குக் கைமாறியது.

கண்டி அரசு தவிர்ந்த ஏளைய பகுதிகள் பிரிட்டிஷாரின் ஆட்சிக்குட்பட்டன.

**அரோசிமித்தின் வரைபடம்**

கி. பி. 1796-ம் ஆண்டில் பிரிட்டிஷ் ஆட்சி தொடங்கிய பொழுது, சென்னையில் உள்ள செயின்ற். ஜார்ஜ் கோட்டையிள் ஆளுநர் மூலமாக, ஆட்சி நடாத்தப்பட்டது. இந்தியா பற்றிய அலுவலகள் தொடர்பான பிரிட்டிஷ் ஆணையாளரிடம் இருந்த வரைபடம்தான், இலங்கையின் படம்தான் இன்று அரோசிமித்தின் (ARROWSMITH) இலங்கைப்படம் எனப் புகழ் பெற்றுள்ளது.

ஒல்லாந்தரின் ஆட்சியில் இருந்த பகுதிகள் அரோசிமித்தின் படத்தில் தெளிவாகக் காட்டப்பட்டுள்ளது.

இந்த வரைபடத்துக்கமைய சிங்களவரின் கரையோர நிலப்பகுதிகள், நீர்கொழும்பில் இருந்து தெற்குக் கிழக்காகக், கும்புக்கன் ஆறுவரை பரந்திருக்கின்ற நிலப்பரப்பு ஆகும். எனைய கரையோர நிலப்பகுதிகள் தமிழர் வாழ் விடங் களாகும். தீவின் நடுப்பகுதி கண்டி அரசனின் ஆட்சிக் குட்பட்டிருப்பதும் இந்த வரைபடத்தில் காட்டப்பட் டுள்ளது.

1802-ம் ஆண்டின் அமெயின்ஸ் ஒப்பந் தத்துக்கு (Treaty of Ameins) அமைய, இந்த வரை படத்தில் காட்டப்பட்ட பகுதிகள்தான் ஒல்லாந் தரிடமிருந்து ஆங்கிலேய ருக்குக் கையளிக்கப பட்டன.

1796-ல் இருந்து 1801 வரை, இந்தியாவில் உள்ள கிழக்கிந்தியக் கம்பனியின் ஆட்சியில் இருந்த இலங் கைத் தீவின் கரையோரப் பகுதிகள் 1802 தை முதலாம் நாள் தொடக்கம், பிரிட்டிஷாரின், முடிக்குரிய ஆதிக்க நாடாகப் பிரிட்டிஷ் அரசரின் நேரடி ஆட்சியின் கீழ் கொண்டு வரப்பட்டது. முதலாவது ஆளுநராக நோர்த் என்பவர் கடமை புரிந்தார்.

**கிளெக்கோர்ண் குறிப்பு**

பிரிட்டிஷார் ஆட்சி தொடங் கிய காலங்களில் எழுதப பட்ட குறிப்புக்கள், தமிழ் ஈழ நிலப்பரப்புத் தனியான நிலப்பரப்பு எனக் கூறுகின் றன. இலங்கையின் முதல் பிரிட்டிஷ் ஆளுநரான நோர்த் அவர்களின் செயலாளாராக இருந்தவர் பேராசிரியர் ஹியு கிளேக்கோர்ண், அவர் 1799 ஜூன் முதலாம் நாள் பின் வரும் குறிப்பை எழுதியுள்ளார்.




படம் நான்கு: அரோசிமித்தின் இலங்கைப் படம் ஒல்லாந்தரின் ஆட்சியில் இருந்த பகுதிகள் கரையோரமாகக் காட்டப்படுள்ளன: கரையோரப் பகுதிகளைக் கண்டி அரசிடமிருந்து வேறுபடுத்தும் எல்லைக்கோடு காட்டப்பட்டுள்ளது.

தீவின் குடிகள்

“ இலங்கைத் தீவானது மிகப் பழங்காலந் தொட்டே இரு வெவ்வேறு நாட்டினங்களால் வெவ்வேறு பகுதிகளாக உடைமை கொண்டாடப்பட்டது. இத்தீவின் நடுப்பகுதியும், தெற்குப் பகுதியும் வளவை ஆற்றில் இருந்து சிலாபம் வரையுமுள்ள மேற்குப் பகுதியும் சிங்கள நாட்டினத்தால் ஆட்சிசெய்யப்பட்ட பகுதியாகும். இத்தீவின் வடக்குத் கிழக்கு நிலப்பகுதிகள் தமிழர்களால் ஆட்சி செய்யப்பட்ட பகுதியாகும். இந்த இரு நாட்டினங்களும் மதத்தாலும் மொழியாலும் வாழ்க்கைப் பண்பாலும் முற்றிலும் வேறுபட்டன.

தமிழர்கள் இந்திய துணைக்கண்டத்தில் இருந்து குடிபெயர்ந்தார்கள் போலும், ஏனெனில் அக்கரையில் உள்ள அதே மொழி, அதே பழக்கவழக்கங்கள் அதே சமயம் என்பனவற்றைக் கொண்டுள்ளனர்.

இந்தக் குறிப்பு மிக் முக்கியமான குறிப்பு பேராசிரியர் கிளெக்கோர்ண் ஒரு ஸ்கொட்டிஷ்காரர். கலோனியல் செகரட்டரியாக இலங்கையில் கடமை புரிந்தவர். இலங்கையைப்பற்றிய விபரங்களை நன்கு அறிந் திருந்தவர், ஒல்லாந்தர் கலத்தில், கிழக்குக் கரைப்பகுதி ஆட்சிப்பிரிவுகள், கும்புக்கன் ஆற்றைத் தெற்கெல் லையாகக் கொண்டிருந்ததை நன்கு அறிந்திருந்தவர். எனினும், தமிழர் நிலப்பகுதி, குமணையோடு நிற்காமல், கிரிந்தை, அம்பாந்தோட்டை ஆகிய இடங்கட்கும் பரந்திருந்ததாகவும், வளவை கங்கை வரை ச்கும் பரந்திருந்ததாகவும் கூறுகின்றார், நீர்கொழும்புக்கு வடக்கே தமிழர்கள் வாழ்விடங்களை அமைத்து வாழ்ந்ததை இவரின் குறிப்புக்கள் உறுதிப் படுகித்துகின்றன.

**கண்டி அரசின் வீழ்ச்சி**

கி. பி. 1815ம் ஆண்டில் கண்டி அரசு பிரிட்டிஷ் மன்னரின் ஆதிக்கத்துக்குக் கீழ் வந்தது. கண்டியின் கடைசி அரசனான, ஸ்ரீ விக்கிரமராஜசிங்கன், சிறை பிடிக்கப்பட்டுக் குடும்பத்துடன் தமிழ் நாட்டில் உள்ள வேலூருக்கு நாடு கடத்தப்பட்டான்.

1796ல் ஒல்லாந்தரிடமிருந்து, பிரிட்டிஷார் பெற்ற தீவின் கரையோர நிலப்பகுதிகள் பற்றிய விபரங்களையும், 1815ம் ஆண்டில், கண்டி அரசனிடமிருந்து பிரிட்டிஷார் பெற்ற ஆள்புலங்களேயும் குறிக்கும் வரை படம் ஒன்று இலங்கை நில அளவைத் திணைக்களத்தினுல் 1946ல் வெளியிடப் பட்டது. இந்த வரை படத்தில், போர்த்துக்கேயர் வருகை யின்போது இலங்கைத் தீவை ஆட்சி செய்த மூன்று வெவ்வேறு அரசுகளான, தமிழ் ஈழ அரசு (யாழ்ப்பான அரசு) கீழ்நாட்டுச் சிங்கள அரசு (கோட்டை அரசு) மலை நாட்டுச் சிங்கள அரசு (கண்டி அரசு) என்பனவற்றின் எல்லைகளும் காட்டபப்பட்டுள்ளன. கிழக்குக் கரையோரத்தில் தமிழ் நிலப்பகுதிகளாக இருந்த வன்னி மைகள் கண்டி அரசனின் மேலாணையை அப்பொழுது ஏற்றிருந்தமையால் கண்டி அரசின் எல்லேக்குள் காட்டப பட்டுள்ளன.

**அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டனின் குறிப்பு**

அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டன் (ALEXANDER JOHNSTON) சிறுவனாக் இருக்கையில் தனது தந்தையாருடன் மதுரைக்கு வந்தார். தமிழ், தெலுங்கு, இந்தி ஆகிய மொழிகளைப் பயின்றார் சட்டமா அதிபராக இலங்கைக்கு வந்தார், கி. பி. 1806ல் உயர் நீதிமன்ற நீதியரசராகப் பதவிபெற்றார். நீதித்துறையில் பல நல்ல முறைகளை அறிமுகப்படுத்திய இந்த ஆங்கிலேயர், சமூகத்துறையிலும் பல நன்மைகளைச் செய்தார். இலங்கையில் உள்ள றோயல் ஏஷியாடிக் கழகக் கிளையைத் தொடங்கி வைத்தவர் இவரே.

கி. பி. 1807 நவம்பர் 4ம் நாள், அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டன், அக்கால ஆளுனராகிய, சர் தாமஸ் மெயிட் லாந்துக்கு எழுதிய குறிப்பு ஒன்றில், “நான் சேகரித்த உள்நாட்டு வழக்கத்தில் உள்ள சில சட்டங்கள், புத்தளம், யாழ்ப்பா ணம், திருகோணமலை, மட்டக்களப்பு ஆகிய நான்கு மாகாணங்களிலும் வழமையில் உள.” இவ்வாறு குறிப்பிட்ட இவர், இந்த நான்கு மாகாணங் களையும் தமிழ்




படம் ஐந்து: ஒல்லாந்தரின் கரையோரப் பகுதிகளும் கண்டி அரசம் (கி.பி. 1796-1815) தமிழீழ அரசு என நாம் கருதும் யாழ்ப்பாண அரசு, கீழ்நாட்டுச் சிங்கள அரசான கோட்டை அரசு, மலைநாட்டுச் சிங்கள அரசான கண்டி அரசு ஆகிய வற்றின் எல்லைகள் காட்டப்பட்டுள்ளது. ஒல்லாந்தரின் கரையோர நிலப்பகுதியும், 1815-ல் பிரிட்டிசாரைச் சென்ற டைந்த கண்டி அரசின் எல்லைகளும் காட்டப்பட்டுள்ளன. யாழ்ப்பாண அரசின் வலிமைகுன்றிய இறுதிக்காலத்தில் கிழக்குத் தமிழ் நிலப்பகுதி வன்னிமைகள் கண்டி அரசின் மேலாணையை ஏற்றிருந்தன.




படம் ஆறு: கோல்புறூக் ஆணைக்குழுவின் அறிக்கையுடன் இணைக்கப்பட்ட இலங்கைப் படம் (கி.பி. 1832) இந்தப் படத்தில் கிழக்கு மாகாணத்தின் தெற்கெல்லையாகக் கும்புக்கன் ஆறும் மேற்கு எல்லையாக மாவலிகங்கையும் குறிப்பிடப்பட்டு, வேடர்கள் வதியும் விந்தனைக் காடு கிழக்கு மாகாண நிலப்பகுதிக்கு உரியதாகக் காட்டப்பட்டுள்ளது.

மாகாணங்கள் எனக் குறிப் பிடுகின்றார்,

மேற்கூறிய குறிப்புத் தவிரக் கொழும்பு நூதன சாலையில், இவர் எழுதிய கையெழுத்துக் குறிப்புகள் சில உண்டு. இக்கையெழுத்துக் குறிப்புகளில் ஒரு குறிப்பு தமிழரின் வாழ்விடங்களைக் குறிப்பிடுகின்றது. அக்குறிப்பில், "வட மேற்கில் உள்ள புத்தளத்தில் இருந்து, தென் கிழக்கே உள்ள குமணை ஆறு வரை உள்ள நிலப்பகுதி, தமிழர்களின் குடியிருப்பு ஆகும். மேற்கே சிலாபம் ஆற்றில் இருந்து, தென் கிழக்கேயுள்ள குமண ஆறு வரையுள்ள நிலப்பகுதி சிங்களவரின் குடி யிருப்பு ஆகம்." சிலாபம் ஆறு என்பது, தெதுறு ஓயாவையும், குமணை ஆறு என்பது கும்புக்கன் ஆற்றையும் குறிக்கின்றது .

அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டனின் காலத்தில் புத்தளம் மாவட்டத்தில் தமிழர் நெருங்கி வாழ்ந்தார்கள் என்பது தெளிவு, மேலும், ஒல்லாந்தர் ஆட்சியில் கடைப்பிடிக்கப் பட்டு வந்த நீதி நிர்வாக முறைகளை. பிரிட்டிஷாரும் தொடர்ந்து கடைப்பிடித்தார்கள். தமிழரின் நிலப் பகுதிகளில் தேசவழமைச் சட்டத்துக்கமைய நீதி வழங்கப்பட்டது. தமிழர் நிலப்பகுதிகட்குத் தனியான நீதிப்பிரிவு இருந்தது.

கோல்புறுக் ஆணைக்குழு கி. பி. 1829 நாட்டின் கரையோரப் பகுதிகளில் மட்டும் ஆட்சிசெய்த பிரிட்டிஷார் கண்டி அரசு கைப்பற்றப்பட்ட பின், தீவு முழுவதையும் தமது ஆட்சிக்குள் கொண்டு வந்தனர். கண்டி அரசின் ஆட்சி முறை வேறு, யாழ்ப்பாண அரசின் ஆட்சி முறை வேறு, கோட்டை அரசின் ஆட்சி முறை வேறு. வெவ்வெறு முறைகளால் ஆட்சி செய்வதில் உள்ள குறைபாடுகளால் பிரிட்டிஷார் துன்பப்பட்டனர். கண்டி அரசின் கீழிருந்த ஆட்சித் தலைவர்களின் உரிமை நீக்கப் டாததால் அவர்கள் தன்னிச்சை யாக ஆட்சி செய்யவும் தொடங கினர். கண்டியில் நடை பெற்ற புரட்சியும் (கி.பி. 1818) பிரிட் டிஷாருக்கு மன நிறைவைத் தரவில்லை. எனவே ஆட்சி முறையைச் சீர் செய்வதற்கான ஆணைக்குழு 1829-ல் நியமிக கப்பட்டது. கோல்புறுக் ஆனைக் குழு எனப் பெயர் பெற்ற இந்த ஆணைக்குழுவின் விதப்புரைகள் 1832-ல் அறிக்கையாகக் சமர்ப்பிக்கப்பட்டன.

கோல்புறுக் ஆணைக்குழுவின் அறிக்கையுடன் இணைக் கப்பட்ட இலங்கையின் வரைபடம் முக் கியமானது. தீவு, ஐந்து மாகா ணங்களாகப் பிரிக கப்பட் டுள்ளது, கிழக்கு, வடக்கு மேற் குத் தெற்கு, மத்திய மாகா ணங்கள் என்ற ஐத்தும் வரை படமாகக் காட்டப்பட்டுள்ளன, எல்லையிட்டுக் காட்டப்பட் டுள்ளன.

கிழக்கு மாகாணத்தின் மேற்கெல்லையாக மாவலி கங்கை காட்டப்பட்டுள்ளது. தெற்கெல்லையாகக் கும்புக்கன் ஆறு காட்டப்பட்டுள்ளது. வேடர் களின் வாழ்விடமாகிய விந் தனைப் பகுதி கிழக்கு மாகாணத் துடன் இணைக்கப் பட்டிருந்தது.

கோல்புறுக் ஆணைக்குழுவின் விதிப்புரைகள் தமிழ் ஈழ நாட்டினத்துக்குப் பாதகமாக அமைந்தன வெவ்வேறு ஆட்சி மாவட்டங்களாக, நீதிப்பிரிவு களாக நிர்வகிக்கப்பட்ட இலங் கைத் தீவு, ஒரே ஆட்சியின் கீழ், ஒரே முறையான நீதி வழங்கல் முறையின் கீழ் கொண்டுவரப்பட வேண்டும் எனக் கோல்புறுக் ஆணைக்குழு விதந்துரைந்தது. 1883 வரை தமிழ் நிலப்பகுதிகன் தனியாகவும் சிங்கள நிலப் பகுதிகள் தனியாகவும் ஆட்சி செய்யப்பட்டன. கோல்புறுக் ஆணைக்குழுவின் விதப்புரைகளைத் தொடர்ந்து இந்த இரு நிலப்பகுதிகளின் ஆட்சியும் நீதி வழங்கலும் ஒரே நிர்வாகத்தின் கீழ் வந்தன.

1619 ஜூனில் தமிழ் ஈழ அரசின் இறைமை போர்த்துக் கேயரைச் சென்றடைந்தது. 1833-ல் தமிழ் ஈழ நிலப் பகுதிகள் சிங்கள நிலப்பகுதிகளுடன் பலவந்தமாக ஒன்றி ணைக்கப்பட்டன.

**சிங்களப் பெரும்பான்மை ஆட்சி**

1833-ல் இருந்து 1948 பிப்ரவரி 3 வரை இந்த நடைமுறை தொடர்ந்தது. 1948 பிப்ரவரி 4-ம் நாள் இலங்கைத் தீவு ஒற்றையாட்சி முறையின் கீழ் முழுமையான ஆட்சிப் பொறுப்பைப் பெற்றது. 1948 க்குப் பின்னர் ஒற்றையாட்சி அமைப்பில், சிங்களப் பெரும் பான்மை ஆட்சி, தமிழ் நிலப் பகுதிகளைச் சிங்கள குடியேற்றங்கள் மூலம் சிங்கள நிலப் பகுதிகளாக்க முயல்கின்றது. கிழக்கு மாகாணத்தின் எல்லைகள் கூட, மாவலிகங்கையில் இருந்து கிழக்குப் பக்கமாக நகர்த்தப்பட்டன.

கிழக்கு மாகாணத்தின் நிலப்பகுதிகளில் பெருமளவு சிங்களக் குடியேற்றம் நடைபெற்று வருகின்றது.

அதேபோல வடக்கு மாகாணத்தின் எல்லைப்பகுதி களிலும் அபரிதமான சிங்களம் குடியேற்றம் நடை பெற்று வருகின்றது.

"From Puttlam on the North Western to the River Koemana on the South Esat side of the Island, the country is inhabited principally by Malabars. From the Chilaw River on the Western side to the River Koemana on the South Eastern side of the Island the country is inhabited by the Singalese. The six places with circles in red ink are the six villages of the Chaleas or people of the Cinnamon Departmetn where the Mahamodr proposed to have established Church missionary associations.

படம் ஏழு: கொழும்பு நூதனசாலையில் உள்ள கையெழுத்துப்பிரதி ஒன்றின் படம். இக்கையெழுத்து, இலங்கையில் 19-ம் நூற்றாண்டின் முற்பகுதியில் சட்டமா அதிபராகவும் பின்னர் கி.பி. 1809 தொடக்கம் உயர் நீதிமன்ற நீதியரசாராகவும் இருந்த சர் அலெக்ஸாண்டர் ஜோன்ஸ்டனுக்குரியது.

இதனால் தமிழ் நிலப்பகுதிகள் பறிபோய்க் கொண் டிருக்கின்றன. காலத்துக்கூடாக வரலாற்றுப் பெருமை யுடன் பேணப்பட்ட தமிழ் நிலப் பகுதிகளை இந்தச் சந்ததியிலோ, அடுத்துவரும் சந்ததிகளிலோ தமிழ் ஈழ நாட்டினம் இழந்து விடக்கூடாது.

**நான்காவது**

உலகில் நாடுகள் பல உள. நாட்டினங்கள் பல உள. ஒரே நாட்டில் பல நாட்டினங்கள் வாழ்கின்றன. இந்தியா ஒரு நாடு. அங்கு பல நாட்டினங்கள் இணைந்து வாழ்கின்றன. சுவிட்சலாந்து ஒரு நாடு. அங்கு பல நாட்டினங்கள் வாழ்கின்றன. சோவியத் ரஷ்யா ஒரு நாடு. அங்கு பல நாட்டினங்கள் வாழ் கின்றன. (தொடரும்...)




[ From Putlam on the North Western to the River Komane on the South East side of the Island the Country is inhabited Principally by Malabars.

From the Chilaw River on the Western to the River Komane on the South Eastern side of the Island the Country is inhabited by the Singalese.]

படம் ஏழு: அலெக்சாண்டர் சோன்சுடன் 1-6-1799-ல் எழுதிய கையெழுத்துக் குறிப்பு.

## சிறுவர் இல்லங்கள், ஒரு சில முதியோர் இல்லங்கள்

## Children's homes, a few nursing homes

COVID 19 நோய்கள் பெரும் பரவல் காலம், உங்களை விட்டால் யாரும் இல்லை இவர்களுக்கு...!

**Amman Women & Child Development Center**
Sagamam Rd, Kolavil 01, Akkaraipattu - Amparai — 4 67 490 4955

**Hermans Girls Home**
Main St., Periyaneelavanai, Kalmurani - Amparai — 97 76 058 5344

**Jesus Lives Girls Home**
Main St., Kalmuanai - Amparai — 01 94 67 492 1161

**Methodist Girls Home**
Wesly School Rd, Kalmuanai - Amparai — 94 67 222 9182

**RKM Sharatha Girls Home**
Girls Vidyalaya Rd, Karaithivu Amparai — 05 94 67 222 3600

**Seephe Divi Child Delelopment Centre**
Kovil Rd, Veeramunai 01, Sammanthurai - Amparai — 94 67 226 1144

**Sri Indasara Child Development Centre**
DK/65, Aralaganvila Rd, Dehiattakandiya - Amparai — 94 27 562 2919

**St. Maryís Boys Home**
Yard Rd, Kalmunai - Amparai — 01 94 71 354 5782

**Swami Vipuilanantha Boys Children Development Centre**
Kurukkal Rd, Akkaraipattu 7/2 - Amparai — 94 67 227 7514

**Canaan Harvest Childrenís Home**
No 320/8, Passara Rd, 3rd Lane - Badulla — 94 77 229 2022

**Up Country Children Home**
19/6, Badulupitiya Rd - Badulla — 94 55 222 3335

**Arutpani Girls Home**
Beach Rd, Navakkuda - Batticaloa — 94 77 6849

**Assisi Boys Home**
Main Rd, Kurukulmadam - Batticaloa — 94 65 225 0313

**Benthel Boys Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa — 94 77 632 8577

**Benthel Girlís Children Home**
Zoneal Education Office Rd, Valaichenai - Batticaloa — 94 77 632 8577

**Bethel Girls Children Home**
Vipulanada Rd, Valichenai - Batticaloa — 94 77 515 3078

**Eravur Children Care Home**
Meerakerny Rd, Eravur - Batticaloa — 94 77 996 6345

**Good Shepherd Children Home**
Post Office Rd, Valaichenai - Batticaloa — 94 65 225 7400

**Hari Boys Home**
New Kalmuani Rd - Batticaloa — 94 65 222 3653

**Jeevananthan Girls Home**
Main Rd, Pudukuduirippu - Batticaloa — 94 65 365 0438

**Kattankudy Boys Home**
Kattankudy 01 - Batticaloa — 94 65 224 5308

**London Sivan Kovil Girls Home**
Main Rd, Settipalayam - Batticaloa — 94 65 205 6336

**Managayarkarasi Girls Home**
Maruthadi Rd - Batticaloa — 94 65 205 7310

**Manikkavasagar Boys Home**
Palaiyadithona, Santhiveli, Kiran - Batticaloa — 94 77 191 3037

**Methodist Girls Home**
Bar Rd, Kotamunai - Batticaloa — 94 65 222 5402

**Miyani Boys Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa — 94 77 459 0298

**Miyani Girls Home**
Miyani nagar, Thannamunai - Batticaloa — 94 77 792 6410

**Pariyowan Boys Home**
Trinco Rd, Santhurukondan - Batticaloa — 94 05 222 2524

**Ramakrishana Boys Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa — 94 65 222 2752

**Ramakrirushana Girls Home**
New Kalmunai Rd, Kalladi - Batticaloa — 94 65 222 2752

**Sakthi Girls Home**
Shakthi Home Rd, Kaluwanchikudy - Batticaloa — 94 65 225 0745

**Shakthi Girls Home**
Arasadi Thervu, Kokaticholai - Batticaloa — 94 65 364 2290

**Shanthi Bawan Girls Home**
Ghanasooriyam Sq., Cross Rd - Batticaloa — 94 65 222 2524

**Spaks Girls Home**
Main Rd, Periya Kallaru - Batticaloa — 94 67 222 1875

**Thilahawathiyar Girls.Children Home**
Main St., Kathiraveli, Vaharai - Batticaloa — 94 77 629 8461

**Thilahawathiyar Girls Home**
Batticaloa - Hospital Rd, Palukamam - Batticaloa — 94 65 225 1166

**Thiruniyanasampathar Gurukulam**
Main Rd, Kaluthavalai - Batticaloa — 94 65 225 0277

**Trust Village Womens Development Center**
Savukady Rd, Mayilampavelhi - Batticaloa 94 76 789 7573
**Vidhyajothi Boys Home**
Central Rd - Batticaloa 94 77 481 6576
**Vipulanantha Children Home**
Main Rd, Palukamam - Batticaloa 94 65 225 1101
**Vivehanada Children Home**
Rattnam Rd, Valaichenai - Batticaloa 94 65 205 1442
**Yoga Suwami Saiva Girls Children Home**
Main Rd, Siththandi - Batticaloa 94 65 205 0420
**St.Joseph Elders Home**
Trinco Rd- Batticaloa 94 71 851 1951
**Swami Vipulananthar Elder Home**
Government Quaters Rd, Kallady - Batticaloa 94 65 222 6202
**Ozanam Centre**
Sathurukondan - Batticaloa 94 65 365 8636
**Uthayam Association of Visually Handicapped**
Saratha St., Nochchimunai - Batticaloa 94 65 205 0707
**Elim Boys Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 742 3824
**Elim Girls Child Development Center**
Memorial Lane, Manipay - Jaffna 94 77 406 9962
**Forth Sq Girls Child Development Center**
No 35, Sellar Rd, Nallur - Jaffna 94 77 064 1109
**Hindu Board Boys Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 990 5304
**Hindu Board Girls Child Development Center**
Kalasalai Rd, Thirunelveli - Jaffna 94 77 699 2082
**Holy Family Girls Child Development Center**
Mirusuvil South, Mirusuvil - Jaffna 94 77 908 1270
**Karunai Girls Child Development Center**
Palaly Rd, Urumpirai, East - Jaffna 94 77 255 4334
**Karunalayam Annai Krishnabai Girls C. D. C.**
No 131, Palaly Rd, Thirunelveli - Jaffna 94 77 905 4873
**Karunalayam Boys Children Development Center**
Karanthan, Neerveli - Jaffna 94 77 416 1002
**Salvation Army Girls Child Development Center**
Kandy Rd, Kaithady - Jaffna 94 77 976 5696
**SOS Village Child Development Center**
No 219, Nayanmarkaddu, Nallur - Jaffna 94 77 373 3711
**Sri Pramanatha Girls Child Development Center**
Vathiri, Karaveddy, Jaffna - Jaffna 94 76 578 3004
**Thurkkapuram Girl Child Development Center**
Thurkkapuram, Tellippalai - Jaffna 94 21 224 9894
**Valluvar Girlsí Child Development Center**
Vaddukoddai East, Vaddukoddai - Jaffna 94 77 525 9513
**Mother Teresa Elder Home Amithi Illam**
Kondavil - Jaffna 94 21 223 0302
**Sivapoomi Elders Home**
Tholpuram. Chulipuram - Jaffna 94 21 225 0085, 94 21 321 4230
**Sivapoomi School ForChildren with Special Needs**
Intellectuals Disability - Jaffna Kondavil - Jaffna 94 21 224 9894
**Vaalvagham-Home for the Vissually Handicapped**
Sabapathipillai Rd, Chunnakam-Jaffna 94 21 224 0146 , 94 76 828 6331
**Aruvucholai Boys Child Development Center**
Thiruvaiaru West, Thiruvaiaru - Kilinochchi 94 21 228 3313
**Aropanam Boys Child Development Center**
Uruththirapuram - Kilinochchi 94 21 228 5088
**Gandhi Nilaya Chidren Home & Training Centre** - Kilinochchi
D-8,Uruthirapuram 94 21 228 4310, 94 77 208 1947, 94 77 720 1461
**Holy Family Girls Child Development Center**
D-8,Uruthirapuram - Kilinochchi 94 76 685 3115
**Karuna Nilayam Girls Child Development Center**
A9 Rd, Kandy Rd - Kilinochchi 94 21 228 5836
**Mahadeva Saiva Boy Child Development Center**
Puthumurippu - Kilinochchi 94 21 492 3121
**Mahadeva Saiva Girls Child Development Center** (11-18 Yrs)
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3119
**Mahadeva Saiva Girls Child Development Center (6-10 Yrs)**
Jeyanthinagar - Kilinochchi 94 21 492 3118
**Sencholai Boysí Child Development Center**
Thiruvaiaru, Kilinochchi 94 76 536 8308
**Sencholai Girlí Child Development Center**
Thiruvaiaru - Kilinochchi 94 71 535 4504
**Thangamma Elders Home** -Kilinochchi
Puthukkulam, Kanagarayankulam 024 4931455, 077 449 9619
**Trist Children Home**
Ramanathapuram - Kilinochchi 94 21 206 0694

**Yogar Swamigal Thiruvadi Nilaiyam Home**
Vannerikulam - Kilinochchi 94 76 709 9162
**Association. to Empowerthe Special Needs Children**
Emersion Rd , Karadipokku 94 77 509 4390, 94 77 375 3776
**Killinochchi Special Needs Newtwork**
Malayapuram, Karachi - Kilinochchi 94 77 831 7536
**Annai Girlsí Child Development Center**
Uppukulam - Mannar 94 23 222 2483
**Anpu Sakotharar Boys Child Development Center**
Keeri - Mannar 94 77 534 4427
**Sepamalai Mariyannai Irakathin Girlsí Child Development Center**
Pesalai - Mannar 94 23 205 0095
**Sivanarul Boys Child Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 205 0805, 94 77 581 5998
**Sivanarul Girls Children Development Center**
Thiruketheeswaram - Mannar 94 23 2050 804
**Vetijin Nalnampikai Illam Good Faith Home of Victory**
No 43, Convent Rd, Pattah - Mannar 94 23 2222 545
**Saradha Mission Child Development Center**
Kirigalpotta - Matale 94 66 205 1721
**St. Francis Child Development Center**
Vihaara Rd - Matale 94 77 438 4851
**Anpu Boysí Child Development Center**
Muthu Vinayagar Puram, Oddusuddan 94 71 535 4502
**Barathy GirlChild Development Center**
Putharikuda, Mulliyavalai - Mullaitivu 94 77 201 5234
**Ladani Girls Child Development Center**
Silawaththai - Mullaitivu 94 77 422 8853
**Nallayan Girls Child Development Center**
Jaffna Rd, Mankulam - Mullaitivu 94 21 206 1034
**Pari Girlsí Child Development Center**
Mulliyavalai - Mullaitivu 94 21 206 1034
**Iniya Vazhvu Illam**
A Division , Thevipuram - Mullaitivu 94 21 206 1949
**Happy Home Child Development Center**
Wanigasekarapura, Kotagala - Nuwara Eliya 94 51 224 4174
**Maranatha Child Development Center**
Hatton - Nuwara Eliya 94 51 222 2489
**Rainbow Child Development Center**
Drayton Estate, Kotagala - Nuwara Eliya 94 77 532 1680
**Shalom Child Development Center**
Lackam Estate, Maskeliya - Nuwara Eliya 94 52 227 7222
**Annai Saratha Children Home**
Mallihaitheevu, Muthur - Trincomalee 94 26 205 4506
**Anpu Illam**
167, Central Rd - Trincomalee 94 26 222 1214
**Four Square**
707 Anpuvalipuram - Trincomalee 94 26 222 7170
**Grace Girls**
3rd Mile Post, Cholaiyadi, Uppuveli - Trincomalee 94 26 722 3644
**Hasanath Boys**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**Hasanath Girls**
Kurinchakerny, Kinniya - Trincomalee 94 26 223 6135
**My Fatherís House Boys Children Homes**
46, Kandasamy Rd - Trincomalee 94 26 222 6861
**Rawlathul Athfal**
PMB Rice Mill, Muthur - Trincomalee 94 77 934 7438
**Rewathe Child Development Center**
5th Post, Kandy Rd - Trincomalee 94 26 224 2328
**Sivayogasamayam Swami Gangadaranatha Children Home**
64 Main St. - Trincomalee 94 26 222 2049
**Sri Sanmuga Boys** 294 inner Harbor Rd - Trincomalee 94 26 567 0234
**Sri Sanmuga Girls** 57, Viddyalaya Rd - Trincomalee 94 26 222 2521
**Thapovanam Boys**
Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
**Thapovanam Girls** Thirukadaloor - Trincomalee 94 26 222 1469
**Deva Anpu Children Home**
Thiththikulam, Murunkanoor - Vavuniya 94 24 4921 859
**Hindu Anpakam Children Home**
Mannar Rd, Veppankulam - Vavuniya 94 24 222 3683
**Salvatorian Girls Home**
Iluppaikulam, Neriyakulam, Cheddikulam - Vavuniya 94 24 324 4577
**Sri Ahilandeswary Children Home** Kovilkulam - Vavuniya 94 24 222 1685
**Mother Teresa Elder Home** Pampaimadu -Vavuniya 94 24 205 4494
**Sivan Elders Home**
Ellappar Marutham Kulam - Vavuniya 94 24 222 1685, 94 77 656 7827
**Thanagamma Eleders**
No. 1 Puthukulam Rd, Puthukula - Vavuniya 94 76 248 2766

# புதிய வரலாற்றை தொடங்கியவன்



பொன்னுத்துரை சிவகுமாரன் (26.08.1950 - 05.06.1974) ஈழ விடுதலைப்போரட்ட வீரர்களில் ஒரு முன்னோடி ஆவார். யாழ்ப்பாணம், உரும்பிராயில் சிறீ லங்கா காவற்துறையினரின் சுற்றி வளைப்பில் நஞ்சருந்தி வீரச்சாவடைந்தார். ஈழப்போராட்ட வரலாற்றில் முதன் முதலில் நஞ்சு அருந்தி உயிர் வீரச்சாவை தளுவியவர் இவரே.

உரும்பிராயில் 1950 ஆம் ஆண்டு ஒகஸ்ட் 26 ஆம் நாள் பொன்னுத்துரை, அன்னலட்சுமி ஆகியோருக்கு மூன்றாவது மகவாக சிவகுமாரன் பிறந்தார். யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் உயர்கல்வி கற்றவர். அந்தக் காலகட்டத்தில் தான் இலங்கையில் கல்வித் தரப்படுத்துதல் அறிமுகப்படுத்தப்பட்டது.

இத்தரப்படுத்தல் திட்டத்துக்கு எதிராகத் தொடங்கப்பட் தமிழ் மாணவர் பேரவையில் தன்னையும் முழுமையாக ஈடுபடுத்திக்கொண்டு சிவகுமாரன் செயற்பட்டார்.

சரியாக நாற்பத்தி ஏழு ஆண்டுகளுக்கு முன்னான நிகழ்வு அது. ஏறத்தாழ நண்பகல் நேரம். உச்சி வெயிலை உயர்த்திப் பிடித்தபடி மரவள்ளித் தோட்டத்து செம் மண்ணில் அவன் வீழ்ந்து கிடந்தான். அவனது குதிக்காலில் இருந்து இரத்தம் வடிந்து கொண்டிருந்தது. துப்பாக்கியால் குறிபார்த்தபடி காக்கிச் சட்டைக் காவலர்கள் சூழ்ந்து நின்றனர். இனித் தப்ப வழியில்லை என்னும் நிலையில் தன் சட்டைப்பையில் இருந்த சிறிய வெற்று வாசனைத் திரவிய குப்பிக்குள் பத்திரப்படுத்தியிருந்த சயனைட்டை அவன் அருந்தினான். இது பெருந் தீயை மூட்டப்போகும் ஒரு பொறி அல்லது காட்டிடை ஆங்கோர் பொந்திடை வைக்கப்பட்ட ஒரு அக்கினிச் குஞ்சு என்பதை அப்போது அவன் அறிந்திருப்பானா? அல்லது வேறு யாரேனும் எதிர்வு கூறியிருப்பார்களா? நான் அறியேன். ஆனால் அவனது நெஞ்சில் கனன்ற அந்த தீயை நான் அறிந்திருந்தேன். ஆம் 1974ம் ஆண்டு ஜ/ன் 5ம் நாள் திரவியம் என வீட்டாராலும் நெருக்கமானவர்களாலும் அழைக்கப்பட்ட சிவகுமாரன் ஈழப்போராட்டத்தில் சயனைட்டை அறிமுகம் செய்து புதிய வரலாற்றைத் தொடக்கி வைத்தான். முதல் களப்போராளியாகி ஈழப்போராட்டத்தை முன் நகர்த்தினான். தன் சாவின் மூலம் அன்றைய இளந்தலைமுறையை, தமிழ் சமூகத் தை ஒரு உலுக்கு உலுக்கினான்.

1972ம் ஆண்டுக்கு முன்னரே சிவகுமாரனின் பெயர் எங்களைப் போன்றோருக்கு அறிமுகமாகி இருந்தது. பத்திரிகைச் செய்திகளிலும் அவனது பெயர் அடிபடத் தொடங்கி இருந்தது. யாழ்ப்பாண பிரதான வீதிக்கு அருகே அப்போதைய யாழ்பாண மேயர் துரையப்பாவின் காருக்கு குண்டு வைத்தது, அப்போதைய ஐக்கிய முன்னணி அரசின் அமைச்சராக இருந்த சோமவீர சந்திரசிறியின் காருக்கு உரும்பிராயில் வைத்து குண்டெறிந்தது என்பன போன்ற சம்பவங்களில் அவனது பெயர் பரபரப்பாகப் பேசப்பட்டது. இவற்றிற்காக அவன் கைது செய்யப்பட்டு யாழ்ப்பாண விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்தான். சிறைக்குள்ளும் அவன் கலகக்காரனாகவே இருந் ததனால் அவன் அநுராதபுர சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டிருந்தான். அவனது வழக்குகளுக்கான ஒவ்வொரு தவணையின் போதும் யாழ்ப்பாணம் கொண் அலைக்கழிக்கப்பட்டான். அப்படியாக யாழ்ப்பாணச் சிறைக்கு கொண்டு வந்த ஒரு பொழுதினில்தான் நான் சிவகுமாரனை முதலில் சந்தித்தேன்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசினால் வரையப்பட்ட புதிய அரசியல் யாப்பின்படி 1972-05-22 அன்று இலங்கை, சிறிலங்கா என்ற புதிய பெயருடன் குடியரசாக அறிவிக்கப்பட்டிருந்தது. அதன் எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டவர்கள் என்ற வகையில் கிளிநொச்சி மாவட்டம் அடங்கலாக யாழ்ப் பாணக் குடாநாடு முழுவதிலும் கைது செய்யப்பட்ட நாங்கள் எழுபது பேர் வரையிலும் சிறையில் அடைக்கப்பட்டிருந்தோம். ஏற்கனவே 1971ம் ஆண்டு ஏப்ரல் கிளர்ச்சியில் ஈடுபட்ட ஜேவிபியினரும் அவர்களின் தலைவரான ரோஹண விஜயவீராவும் அங்கிருந்தார்கள். இந்தக் குடியரசு எதிர்ப்பு நடவடிக்கையில் முதலில் கைது செய்யப்பட மூன்று இளைஞர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். எதிர்ப்பு நடவடிக்கைகளை ஊக்குவிப் பதற்கான துண்டுப் பிரசுரங்களை விநியோகித்தோம் என்ற வகையில் மே 18ம் தேதியே நாங்கள் மூவர் கைது செய்யப்பட்டிருந்தோம். மறுநாள் சிறைக்கு அனுப்பப் பட்டபோது சிறைப் பணிமனைக்கு அருகிலேயே தீவிர கண்காணிப்புக்கும் பாதுகாப்பிற்குமாக வைக்கப்பட்டிருந்த ரோஹண விஜய வீராதான் முதலில் எங்களை வரவேற்றார். என்ன மூன்றுபேர்தானா என்று தனது மழலைத்தமிழில் இளக்காரத்துடன் அவர் கிண்டலடித் தார். எங்களுக்கு சற்று வெட்கமாயிருந்தது. ஆனாலும் அதனைக் காட்டிக்கொள்ளாமல் எங்களுக்கு பின்னால் இன்னும் ஆயிரம் பேர் வருவார்கள் என்று பெருமை யடித்துக் கொண்டோம். ஆனால் மொத்தம் எழுபது பேர்தான் எதிர்ப்பு நடவடிகைக்காக கைதானார்கள் என்பது எங்களுக்கு சற்று ஏமாற்றம்தான். எங்கள் அனைவருக் கும் ஒரு மண்டபம் போன்ற கட்டிடத்தை ஒதுக்கியிருந்தார் கள். அந்த மே மாத இறுதி வாரத்தின் ஒருநாள், மாலைச் சாப்பாட்டிற்குப் பின்னால் எங்களைக் கணக்கெடுத்து மண்டபத்திற்குள் தள்ளி அடைத்துவிட்டார்கள். நாங் களெல்லோரும் கம்பிகளைப் பிடித்தபடி ஆவலுடன் வெளியை வெறித்தபடி இருந்தோம். ஏனெனில் அன்றிரவு சிவகுமாரன் கொண்டுவரப்படுகின்றான் என்ற தகவல் இரகசியமாக மதியமே எங்களுக்குக் கிடைத்திருந்தது. எங்கள் கட்டிடத்திற்கு எதிரே செல் என்று சொல்லப்படும் தனி அறைகளில் ஏப்ரல் கிளர்ச்சிக்காரர்கள் அடைக்கப் பட்டிருந்தனர். இரண்டு பகுதியையும் நடைவழி பிரித்திருந்தது ஏப்ரல் கிளர்ச்சியாளர்களுக்கு சிவகுமாரன் மீது மிகுந்த மரியாதை இருந்தது. ஏனெனில் அவர்கள் ஏப்பரல் கிளர்ச்சிக்குப் பயன்படுத்திய வெடிகுண்டு மற்றும் ஆயுத அறிவுகள் மிகப் பழசானவை. ஆனால் சிவகுமாரன் புதிய பல தொழில் நுட்பங்களை அறிந்திருந்தான். சிறைக்குள் வருபவர்கள் முதலில் ரோஹண இருக் குமிடத்தை தாண்டி பின்னர் எங்கள் இடத்தையும் தாண்டித்தான் அந்த நடைவழியே மற்றப்பகுதிகளுக்கு செல்ல வேண்டும். இரவு ஒன்பது மணியளவில் சிறைக்காவலர்கள் புடைசூழ நடைவழியே வேட்டி அணிந் த அந்த நெடிய உருவம் நடந்து வந்தது. நாங்கள் அடையாளம் கண்டு கொண்டோம். எங்கள் கட்டிடத்தின் முன்னால் வந்ததும் நாங்கள் ஆர்ப்பரிக்கத் தொடங் கினோம். முகமெல்லாம் மலர்ந்திருக்க கனிந்த குரலில் எல்லோருடனும் உரையாடத் தொடங்கிய சிவகுமாரன், தன்னை மறந்தவனாய் அங்கேயே தரித்து நின்றான். நான் என்னை மறந்தவனாக அவனையே வெறித்தபடி இருந்தேன். அவனுடைய காவிய வாழ்வில் நானும் பங்காளியானது ஆச்சரியம்தான். இன்றைக்கும் அந்தக் காட்சி என்னால் மறக்க முடியவில்லை. சிறைக்காவலர்கள் அவனை நகரும்படி வேண்டுகோள் விடுத்த வண்ணம் இருந்தனர். இன்றிரவு இந்தக் கட்டிடத்தில் இவர் களுடனேயே என்னையும் தங்க வையுங்கள் என்று உறுதியான குரலில் கூறத் தொடங்கினான் சிவகுமாரன். முகத்தின் மலர்வும் குரலின் கனிவும் அவனிடத்தே மறைந்துவிட்டது. காவலர்கள் மறுக்க சிவகுமாரன் அடம்பிடிக்க நிலமை கலகச் சூழலுக்கு மாறத் தொடங் கியது. சிவகுமாரன் அந்த நடைவழியிலேயே உட்கார்ந்து விட்டான். இறுதியில் எங்கள் கட்டிடத்திற்கு எதிரே செல்லில் அடைப்பதாக உடன்பாடு காணப்பட்டது. இந்தத் தீவிரம், இந்தப் போர்க்குணம் அவனது இறுதிக்கணம் வரையில் அவன் கூடவே இருந்தது.

ஆண்டு நல்லூர்த் திருவிழாவின் போது காவல் கடமையில் ஈடுபட்டிருந்த சிங்கள மொழிபேசும் பொலிசார் பெண்களுடன் அத்துமீறி நடக்க முற்பட்டனர். இதனைக் கண்ணுற்ற சிவகுமாரன் தன்னந்தனியனாகவே அவர்களை எதிர்த்தான். அவன் நல்லூர் காவல் நிலையத்தில் அடைக்கப்பட்டான். பொதுமக்கள் அவனுக் காக காவல் நிலையத்தை முற்றுகையிட்டதால் பொலிசார் அவனை விடுவிக்க வேண்டயதாயிற்று.

**செயல்வீரன்**

1960களின் பிற்கூறு இலங்கைத்தீவின் இன்றைய நிலைமைக்கான பல முகிழ்ப்புகளைக் கொண்டிருந்தது என்றால் மிகையில்லை. யாழ்ப்பாணக் குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்ட தீண்டாமைக்கு எதிரான வெகுஜன இயக்கப் போராட்டங்கள், உலக அளவில் நிகழ்ந்த சீனக் கலாச்சாரப் புரட்சி, பிரான்சில் எழுந்து உலகெங்கும் பரவிய மாணவர் கிளர்ச்சிகள், தமிழரசுக் கட்சியில் இருந்து வெளியேற்றப்பட்ட, தமிழரசுக் கட்சியின் மூளையென வர்ணிக்கப்பட்ட நவரெத்தினம் அமைத்த சுயாட்சிக் கழகத்தின் தோற்றம், இரசியாவில் லுமும்பா பல்கலைக் கழகத்தில் இருந்து இடைநிறுத்தப்பட்ட ரோகஹண விஜய வீரா இலங்கைக் கமயூனிஸ்ட் கட்சியிலும் பின்னர் தனியான கட்சியை அமைத்தும் இளம் கிளர்ச்சிக்காராக தோற்றம் பெற்றமை போன்ற இன்னோரன்ன நிகழ்வுகளை அந்தக் காலம் வெளிப்படுத்தியிருந்தது. இவை யாழ் இந்துக் கல்லூரியில் படித்த சிவகுமாரனைப் பாதித்தது ஆச்சரியம்தான். சிவகுமாரன் கம்யூனிசக் கருத்துக்கள் கொண்ட நண்பர்களுடன் உறவுகளைப் பேணுவதிலும் சமூக நீதிக்கான செயல்பாடுகளை முன்னெடுப்பதிலும் ஈடுபாடு கொண்டவனாக இருந்தான். அதேவேளையில் தமிழர்களின் மிதவாத தலைமைக்கு மாற்றாக போர்க் குணம் கொண்ட தலைமை ஒன்றை கட்டியெழுப்ப முயற்சித்தோருடனும் இணைந்து செயற்பட்டான். ஆனாலும் அவன் பேசுவதைவிடவும் செயல் என்பதிலேயே அக்கறை கொண்டவனாக இருந்தான். அதனாலேயே பல செயற்பாடுகளைத் தனியாளாய் மேற்கொண்டு பொலிசாரின் கண் காணிப்புக்கு ஆளாகியிருந்தான்.

சிறையில் இருந்து வெளியே வந்ததன் பின்னர் இளைஞர்களுக்கான இயக்கம் அமைப்பதில் நான் அக்கறை காட்டிவந்தேன். ஆனால் சிவகுமாரன் அதில் அதிகம் அக்கறை கொள்ளவில்லை. நாங்கள் அடிக்கடி சந்தித்துக் கொள்வோம். இருவரும் யாழ்ப்பாணம் கொட்டடியில் இயங்கி வந்த மீனாட்சி வணிகக் கல்லூரியில் கணக்கியல் படித்து வந்தோம். அந்தக் காலகட்டத்தில் போராட்டத்தில் அக்கறை கொண்ட யாழ்ப்பாண இளைஞர் பலரும் அங்கு படித்தார்கள் அல்லது சிறை, பொலிஸ் என்பவற்றில் இருந்து மீள்பவர்களுக்கான புகலிடமாக அது அமைந்தது என்றும் கூறலாம். தமிழ் இளைஞர் பேரவை அமைக்கப்பட்டதும் அதன் செயல்பாடுகள் சிலவற்றில் சிவகுமாரன் முகம் காட்டாமல் பங்கேற்றும் இருக்கிறான். 1973ன் பிற்பகுதியில் மலையக மக்களுடன் உறவைப் பேணவேண்டும் என்ற வேலைத்திட்டம் முன்வைக் கப்பட்டபோது அதில் சிவகுமாரன் ஆர்வத்துடன் பங்கேற்று எங்களுடன் மலையகம் வந்திருந்தான். மலையகத்தில் இருந்து நாங்கள் யாழ்ப்பாணம் திரும்பியபோது நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டிற்கான தயாரிப்பு வேலைகள் மும்முரமாக நடைபெற்றுக் கொண்டிருந் தன.(மாநாட்டை கொழும்பில்தான் நடத்த வேண்டும் என்ற அரசாங்கத்தின் நெருக்குதல்களை மீறி அமைப் பாளர்கள் யாழ்பாணத்தில் நடத்த முடிவெடுத்திருந்தனர்) ஆனால் எங்களைப் போன்ற இளம் சமூக ஆர்வலர்கள் ஒதுக்கப்பட்டவர்களாகவே கணிக்கப்பட்டிருந்தோம். இது எங்களுக்குச் சினத்தை மூட்டியது. சிவகுமாரன் தலைமையில் யாழ்ப்பாண பிரதான வீதியில் அமைந்திருந்த நான்காவது தமிழாராய்ச்சி மாநாட்டின் செயலகத்திற்குச் சென்றோம். மாநாட்டுப் பொறுப்பாளர் களைச் சந்தித்து நாங்களும் பங்களிக்கும் வகையில் செயல் திட்டத்தை வகுக்கும்படி கோரினோம். முதலில் அவர்கள் மறுத்தார்கள். அப்படியானால் எங்கள் பங்களிப்பு இல்லாமல் மாநாடு நடைபெற முடியாது என சிவகுமாரன் எச்சரித்தான். அதன் பின் தொண்டர் அமைப்பில் எங்களையும் இணைப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டது. சிவகுமாரன் பொறுப்பாளர்களில் ஒருவனாக அறிவிக்கப்பட்டான். நானும் வேறு பல நண்பர்களும்

தொண்டாராகப் பணியேற்றோம். எங்கள் பணிகள் சுமுகமாகவே நடைபெற்றன. ஆனால் இருபாலைச் சந்தியில் இருந்து புறப்பட்ட இறுதிநாள் காண்பிய ஊர்திகள் பங்கேற்ற ஊர்வலத்தில் பண்டாரவன்னியன் பற்றிய காண்பிய ஊர்தி கலந்து கொள்வதற்கு மாநாட்டு அமைப்பாளர் அனுமதி மறுத்திருந்தனர். அரச நெருக்கடியை சமாளிக்க அமைப்பாளர்கள் எண்ணியிருக்க கூடும். சிவகுமாரன் தலைமையிலான தொண்டர்களாகிய நாங்கள் ஊர்வலத்தை ஒழுங்கு படுத்துபவர்களாகப் பணியாற்றிக் கொண்டிருந்தோம். இந்தத் தகவல் எங்கள் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதும் ஊர்வலம் நகராதபடி தெருவை மறித்தபடி நாங்கள் மறியல் செய்தோம். மாநாட்டு அமைப்பாளர்கள் எத்தனையோ விளக்கங்கள் அளித்து கெஞ்சினர். ஆனால் சிவகுமாரன் எதற்கும் மசியவுமில்லை விட்டுக் கொடுக்கவும் இல்லை. கடைசியாக பண்டாரவன்னியன் காண்பிய ஊர்தியுடன் ஊர்வலம் நடைபெற்றது.

1974ஜன10 இறுதிநாள் நிகழ்வாக யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் மாநாட்டுப் பேராளர்கள் உரையாற்றும் பொதுக்கூட்டம் ஒழுங்கு படுத்தப்பட்டிருநது. இந்த மாநாடு திட்டமிடப்பட்டபோது இத்தனை எழுச்சியாக மக்கள் ஆதரவு இதற்குக் கிடைக்கும் என்று அமைப்பாளர்கள் எதிர்பாத்திருக்கவில்லை. ஆதலால் சில நூற்றுக்கணக்கானவர் கலந்து கொள்ளக் கூடிய வீரசிங கம் மண்டபத்தைப் பொதுக் கூட்டத்திற்கு ஒழுங்கு படுத்தியிருந்தனர். ஆனால் மாநாடு நடைபெறுவது தொடர்பாக இலங்கை அரசு மேற்கொண்ட எதிர் நடவடிக்கைகள் தமிழ் பேசும் மக்களிடையே எழுச்சியைத் தோற்றுவித்துவிட்டது. ஆதலால் யாரும் எதிர்பாராத வகையில் இறுதிநாள் நிகழ்ச்சிக்கு பல்லாயிரக் கணக்கணக்கில் மக்கள் வீரசிங்கம் மண்டபத்தை முற்றுகையிடத் தொடங்கி விட்டனர். மண்டப ஒழுங்கைக் கவனித்துக் கொண்டிருந்த தொணடர்களாகிய எங்களுக்கு நிலமையின் தீவிரம் தெரியத் தொடங்கி விட்டது. உடனடியாக சிவகுமாரன் எங்களை அழைத்து மாற்று வழிகளை யோசிக்கும்படி கோரினான்.. அப்போதுதான் நாங்கள் கூட்டத்தை எல்லாப் பொதுமக்களும் பார்க்கவும் கேட்கவும் வசதியாக மண்டபத்திற்கு வெளியே நடத்தக் கோருவதென்று தீர்மானித்தோம். எங்கள் அழுத்தம் காரணமாக அமைப்பாளர்கள் வெளியே கூட்டம் நடாத்தச் சம்மதித்தனர். நாங்கள் வெளியே கட்டப்பட்டிருந்த சிகரத்தற்குக் கீழே வாங்குகளை அடுக்கி தற்காலிக மேடை அமைத்தோம். வீரசிங்க மண்டபக் கட்டடிடத்தின் சிறு முற்றம் அதற்கும் எதிரே கோட்டைச் சுவரில் இருந்து சரிவாக அமைந்த புல்வெளி. இதனைப் பிரித்தபடி தார்ச்சாலை. நாங்கள் மேடைக்கு அருகே இருந்தோம். தார்ச்சாலை புல்வெளி எங்கும் மக்கள் தலைகளே தெரிந்தன. திருச்சி போராசிரியர் நயினார் முகமது பேசத் தொடங்கினார். நாங்கள் பேச்சை இரசிக்க தொடங்கியிருந் தோம். அப்போதுதான் அந்த நாமெல்லாரும் அறிந்த துயரம் நிகழ்ந்தது. மேடையின் இடது பக்கத்தே அதாவது புல்லுக்குளம் பக்கத்தே சலசலப்பு ஏற்பட்டது. பொலிசார் அமர்ந்திருந்த மக்களை கலைக்க முயற்சித்தித்து கொண்டிருந்தனர். சலசலப்பு உடனேயே அல்லோல கல்லோலமாக மாறத்தொடங்கியது. மக்கள் நெருக் கியடித்தபடி நகரத் தொடங்கினர். மேடையில் இருந் தவர்கள் மக்களை அமைதியாக இருக்கும்படியும் பொலிசாரை விலகிச் செல்லும்படியும் வேண்டுகோள் விடுத்தனர். அப்போது துப்பாக்கி வேட்டுச்சத்தம் கேட்டது. மக்கள் மிரண்டு ஓடத்தொடங்கினர். அவ்வேளையில்தான் அது நடந்தது. தொண்டர்கள் என்ற நிலையில் மேடையின் அருகே இருந்தோம் என்பதால் எல்லாவற்றையும் எங்களால் தெளிவாகவே பார்க்க முடிந்தது. அந்த மேடை அமைக்கப்ட்டிருந்த சிறு முற்றத்தையும் தார்த் தெருவையும் பிரித்த மறிப்புக் கம்பியை தாண்டுவதற்கா ஒருவர் தொட்டபோதே எங்களைப் பார்த்து அலறியபடி வீழந்தார். பொலிசாரின் துப்பாக்கிச் சூட்டினால் அறுந்து விழுந்த மின்சார கம்பியில் இருந்து மின் ஒழுக்கு அந்த மறிப்பு கம்பியிலும் பரவியிருப்பதை அப்போதுதான் நாங்கள் உணர்ந்தோம். ஆதலால் அதனைத் தொடவேண்டாம் என்று நாங்கள் கத்தித் தடுத்துக் கொண்டிருந்த போதும் அதைத் தொட்டவர்கள் அலறியபடி செத்து வீழ்ந்தார்கள். எல்லாம் அடங்கிய இறுதி நேரம் வரையில் நானும் சிவகுமாரனும் அங்கிருந்தோம். இதற்குப் பழிக்குப் பழி வாங்குவதென்று நாங்கள் இருவரும் சபதம் செய்து கொண்டோம். காலையில் சந்திப்பதற்கான இடத்தையும் தீர்மானித்துக் கொண்டோம். ஆனால் விடிவதற்கு முன்பாகவே நல்லூர் பாராளுமன்ற உறுப்பினர் வீட்டிற்குக் காவலாக நின்ற பொலிசார் மீது சிவகுமாரன் வெடிகுண்டை வீசி விட்டான். பொலிசார் காயமடைந்தார்கள். சிவகுமாரன் தேடப்படுபனாக மாறிவிட்டான். இது அவனது குண இயல்பை விளக்க போதுமானதாக இருக்கும் என்று நினைக்கிறேன்.

டேவிட் குஞ்சு என்றுதான் சிவகுமாரன் என்னை அழைப்பதுண்டு. நான் பொலிசாரின் தீவிர கண்காணிப்புக்கு உட்பட்டிருக்கவில்லை. 1974-01-10ம் திகதியில் இருந்து 1974-06-05ம் திகதி வரையில் நான் அவனுடன் கூடவே இருந்தேன். எல்லாச் செயல்பாட்டிலும் பங்கேற்றேன். வெடிமருந்துகள் ஆயுதங்கள் தேடி சாதிய எதிர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்ட கிராமங்களுக்கு சென்றிருக்கிறோம். நானும் சாவகச்சேரியை சேர்ந்த ஜீவராாசாவும் மருத்துவர் ஒருவரின் உதவியுடன் சைனட்டைத் தேடிப் பெற்று வந்ததும், இது எனக்கு மட்டும்தான் உங்களுக்குத் தேவையில்லை என்று சிவகுமாரன் கட்டளையிட்டதும் ஒரு முப்பதாண்டுகளுக்கு முன்னான நிகழ்வு. இனி ஒரு தடவை பொலிசின் கையில் தான் பிடிபடுவதில்லை என்பதில் சிவகுமாரன் உறுதியாகவே இருந்தான். எங்களைப் பொலிசார் பிடித்தால் எல்லாப் பொறுப்பையும் தனது தலையில் சுமத்தி விடும்படியும் கூறியிருந்தான். இந்த ஐந்து மாத காலமும் ஒரு காவியத்திற்கான சம்பவங்கள் நிறைந்து கிடக்கின்றன, எல்லாவற்றையும் இப்போது கூறுவதும் தேவையற்றதாகும். அவனது இறுதிக் கணம் வரைக்கும் நான் டேவிட்டாகவே இருந்தேன். பின்னாட்களில் எனக்கு வழங்கப்பட்ட குற்றப் பத்திரிகைகளிலும் இந்தப் பெயரே குறிப்பிடப்பட்டிருக்கின்றது. தமிழாராய்ச்சி மாநாட்டின் இறுதிநாள் துயர நிகழ்வுகளுக்குப் பொறுப்பாக இருந்த உதவி பொலிஸ் அதிபர் சந்திரசேகராவை பழிவாங்குவதே எங்களின் நோக்கமாக இருந்தது. மிகச் சரியான அந்தத் திகதி எனக்கு நினைவில் இல்லை. கைலாசப் பிள்ளையார் கோவிலுக்கு முன்னால் சந்திரசேகராவை மறித்துக் கொலை செய்வது என்பது எங்கள் திட்டமாக ஏற்கப்பட்டிருந்தது. ஆனால் அந்த முயற்சி எங்களுக்குப் பாரிய தோல்வியையே தேடித்தந்தது. சந்திரசேகரா உயிர் தப்பிவிட்டான் சிவகுமாரன் மிக உயர் தேடலுக்கு உரியவனாக அறிவிக்கப்பட்டான். அவனது தலைக்கு விலை நிர்ணயிக்கப்பட்டிருந்தது. 1974ம் ஆண்டில் அவனது ஊரான உரும்பராய் கிராமம் எழுநூறு பொலிசாரால் சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல் வேட்டைக்கு உள்ளானாது. இன்றைக்கு போராட்டம் முதிர்ந்த நிலையில் இவையெல்லாம் சாதாரணமாக இருக்ககூடும். இந்நிலையில் சிவகுமாரனை இந்தியாவுக்கு அனுப்ப முடிவெடுத்தோம். இரகசிய கடல்வழி பயணத்திற்குத் தேவையான பணம் எம்மிடம் இருக்கவில்லை. தெரிந்தவர்களிடம் பணம் கேட்டுச் சேகரிப்பது எனது பணியாயிற்று. அப்போது புகழ்மிக்க பெண்மணி ஒருவர் "என்னிடம் தாலிக்கொடி மட்டும்தான் இருக்கின்றது" என்ற பொன்மொழியை உதிர்த்தார். எல்லோரும் கைவிரித்து விட்டார்கள். இந்திலையில்தான் பணம் தேடும் வேறு முயற்சிகளை ஆராயத் தொடங்கினோம். அப்போதுதான் சத்தியசீலனின் சகோதரி சத்தியசீலி பணியாற்றும் கோப்பாய் கிராமிய வங்கி எங்கள் கவனத்திற்கு வந்தது.

1974ம் ஆண்டு யூன் 5ம் திகதி காலை பத்து மணியளவில் மருதனார்மடத்தில் இருந்து அழைத்துவரப்பட்ட வாடகை வண்டியில் உரும்பிராயில் இருந்து நாங்கள் நால்வர் (சிவகுமாரன், மகேந்திரன், ஜீவராசா, நான்) கோப்பாய் நோக்கி பயணித்தோம். எங்கள் திட்டம் சொல்லளவில் மிகச் சிறந்ததாகவே இருந்தது. ஆனால் நடைமுறையில் இறங்கியபோது கட்டுத் தோட்டாக்கள் கொண்ட எங்கள் ஆயுதங்கள் எதுவும் ஒத்துழைக்கவில்லை. ஒன்று பிழைக்க மற்றவையெல்லாம் குழப்பமாகிவிட்டன. கார்ச்சாரதி திறப்புடன் ஓடிவிட்டான். திறப்பில்லாமல் காரை இயங்கச் செய்ய யாருக்கும் தெரிந்திருக்கவில்லை. ஊர்மக்கள் கூடிவிட்டார்கள். எங்கள் கால்களை நம்பி குடிமனைகளுக்கு ஊடாக ஓடத்தொடங்கினோம். கொள்ளைக்காரர் என்றபடி மக்கள் எங்களைத் துரத்தத் தொடங்கினர். கற்காளால் எறியத் தொடங்கினர். ஊர்மனை தாண்டி தோட்டப்பகுதிக்கு வந்துவிட்டோம். வெடிக்காத கட்டுத் தோட்டாக்கள் கொண்ட துப்பாக்கியைக் காட்டி துரத்தி வருபவர்களைத் தடுத்து நிறுத்தினோம். நாம் யார், எதற்கு வந்தோம் என்பதை விளங்கப்படுத்தினோம். சிவகுமார் தன்னை அறிமுகப்படுத்தியதும் சிலருக்கு அவனைத் தெரிந்திருந்தது. நாங்கள் மெதுவாக ஆசுவாசப்படுத்தியபடி நீர்வேலி நோக்கி தோட்ட வரப்புகள் வழியே நடக்கத் தொடங்கினோம். ஊர்மக்கள் பின்னே எங்களைப் பார்த்தபடி நின்றிருந்தனர். நேரம் நண்பகலை நெருங்கிக் கொண்டிருந்தது. சற்று நேரத்தில் எதிரே மண்பாதையில் விரைந்து வந்த பொலிஸ் வாகனங்கள் எங்களை வழிமறித்தன. பின்னால் திரும்பிய போது அங்கேயும் பொலிசார் எங்களை நோக்கி வருவது தெரிந்தது. நாங்கள் முற்றுகைக்குள் மாட்டப்பட்டோம். இப்போது எல்லோரது கைகளிலும் இருந்த குண்டுகள் இல்லாத ஆயுதங்கள் என்னிடம் ஒப்படைக்கப்பட்டன. நால்வரும் ஒன்றாகப் பிடிபடாமல் நான்கு திசையில் பிரிந்து ஓடி, போக்கு காட்டுவதென்றும் தீர்மானித்துக் கொண்டோம். இதனால் சிவகுமாரன் உட்பட எல்லோரும் தப்ப முடியுமென்று நம்பினோம். ஆனால் நாங்கள் எதிர்பார்த்ததற்கு மாறாக சிவகுமாரனே பொலிசாரால் சுற்றி வளைக்கப்பட்டிருந்தான். உண்மையில் அப்போது யார் சுற்றிவளைக்கப்ட்டார் என்பதனை நான் அறிந்திருக் கவில்லை. நான் ஒரு வாழைத் தோட்டத்திற்குள் மறைந்து நடந்தபடி வெகுதூரம் வந்திருந்தேன். எனது சாரத்தின் மடிப்பிற்குள் ஆயுதங்கள் கனத்தபடி இருந்தன. என்னைப் பொலிஸ் துரத்தவில்லை என்பது உறுதியாயிற்று. வேகமாக நடக்கத் தொடங்கினேன்.

**சயனைட் அருந்திய சிவகுமாரன்**

நான் புன்னாலைக் கட்டுவன் வந்து சேர்ந்துவிட்டேன். என்னைக்கண்டதும் அபயமளித்தவர்கள் ஏங்கிப் போனார்கள். அப்போதுதான் என்னால் முழுத் தகவலையும் அறிய முடிந்தது. அந்த இடத்திலேயே சிவகுமாரன் பிடிபட்டதாகவும் அவனது காலில் மரவள்ளித்தடி குத்திக் காயமாகி வீழ்ந்து விட்டதாகவும் அந்த நிலையிலும் பொலிசாருடன் போரடியதாகவும் இறுதியில் அவன் சயனைட் அருந்தி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டிருப்பதாகவும் மற்ற இருவரும் மாலையில் குடிமனைக்குள் வைத்துக் கைது செய்யப்பட்டதாகவும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டது. நான் யாழ்ப்பாண வைத்தியசாலைக்குப் புறப்பட்டுச் சென்றேன். மாலை ஐந்து மணியிருக்கும். யாழ்ப்பாணப் பெரியாஸ் பத்திரி பொலிசாரால் நிறைந்திருந்தது. நான் வேறு வழியால் உள்நுழைந்தேன். ஏனெனில் வைத்தியசாலை எனக்கு மிகப் பழக்கமானது. எனது அம்மா, அம்மாவின் தோழிகள், எங்களுக்கு ஆதரவான மருத்துவர்கள், ஊழியர்கள் என என்னை அறிந்த பலர் அங்கிருந்தனர். பொலிஸ் காவலையும் தாண்டி நான் சிவகுமாரன் அருகே சென்றுவிட்டேன். சிவகுமாரனின் அம்மா அங்கு இருக்கின்றார். சிவகுமாரனின் அதே சிரிப்பு அதே மலர்ச்சி. டேவிட் குஞ்சு என்று அழைக்கின்றான். சயனைட் பிழைச்சிட்டுது போல கிடக்குது இவங்கட விசாரணைக்குப் போகக் கூடாது வழியைப் பார் என்கிறான். வெளியே வந்து நண்பர்களுடன் திட்டமிடுகிறேன். திட்டமொன்று வகுக்கப்படுகின்றது. யாழ்ப்பாண மின்சார நிலையத்தில் எனது சிறை நண்பன் ஒருவன் பணியாற்றிக் கொண்டிருந்தான். அவனிடம் உதவி கோருகிறேன். நாங்கள் குறிப்பிடும் நேரத்திற்கு மின்சாரத்தை தடைப்படுத்துவதாக உறுதி கூறுகிறான். மற்றைய ஏற்பாடுகளில் ஈடுபடுகின்றோம். உங்கள் முயற்சியை நிறுத்துங்களென சிவகுமாரனது மரணச் செய்தி எங்களை வந்து சேர்கின்றது. அவனது இறுதி ஊர்வலத்திலும் சடங்கு நிகழ்விலும் நான் கலந்து கொள்ளவில்லை. ஏனெனில் சிவகுமாரன் மரணித்த மறுநாளில் இருந்து நான் தேடப்படுபவனாக மாறியிருந்தேன். பத்திரிகையிலும் பெயர் அடிபடத் தொடங்கியிருந்தது. ஆனாலும் அவனது இறுதி ஊர்வலத்தை நான் பார்த்தேன். நான் பார்க்கும் படியாக ஊர்வலப் பாதை மாற்றப்பட்டது. அவனது சிதையில் மூட்டப்பட்ட தீ தகதகதகவென இன்னமும்தான் எரிந்து கொண்டிருக்கின்றது. எனது கவிதையில் குறிப்பிட்டது போல்...

முதல் வித்து நீ
முன்னறிவித்தவன் நீ
சாத்வீகப் பாதையில்
சந்தி பிரித்தாய்
கால வெளியில்
சுவடுகள் பதித்தாய்
காலக் கரைவிலும்
உந்தன் சுவடுகள்...

ஈழப்போராட்டத்தின் ஒரு பொறியாய் அக்கினிக் குஞ்சாய் இளைஞர்களின் குறியீடாய் எங்கள் தலைமுறை தாண்டியும் அவன் இருப்பான்.


முதற் தற்கொடையாளர்
தியாகி பொன். சிவகுமாரன்
பொன்னுத்துரை சிவகுமாரன்
26.08.1950 - 05.06.1974